# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 மாசி 09 வெள்ளிக்கிழமை (21-02-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:87


## இயல்பு வாழ்க்கை இன்னும் முடக்கம்; நெருக்குவாரங்கள் ஓயவில்லை

# புரிந்துணர்வு உடன்படிக்கையை தமிழ்மக்கள் கொண்டாடி மகிழ்கின்ற நிலைமை இல்லை!

## தமிழ்ச்செல்வன் கருத்து

கிளிநொச்சி,பெப்.21

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரதான நோக்கம் மக்களின் இயல்பு வாழ்க்கை. ஒரு வருடமாகியும் அது இன்னமும் வழமைக்கு திரும்பவில்லை. தமிழர் தாயகத்தில் இராணுவ நெருக்குவாரங்கள் தணியவில்லை. இந்த நிலையில், புரிந்துணர்வு உடன்படிக்கையின் வெற்றியைக் கொண்டாடும் நிலையில் எமது மக்கள் இல்லை.

இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

நேற்று கிளிநொச்சியில் தென்னாபிரிக்க பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்திய பின்னர் தமிழ்ச்செல்வன் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் தெரிவித்ததாவது:-



புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ஒரு வருடம் எட்டுகின்றது. அதனைக் கொண்டாடும் நிலையில் மக்கள் இல்லை. மக்கள் ஏமாற்றமடைந்திருக்கிறார்கள். அவர்களது எதிர்பார்ப்பு பூர்த்திசெய்யப்படவில்லை. இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்கு மீளத் திரும்பமுடியாமல் தொடர்ந்தும் அவல வாழ்க்கை நடத்துகின்றார்கள். எமது மக்கள் மீதான இராணுவத்தின் கெடுபிடிகள், நெருக்குவாரங்கள் தணியவில்லை. துப்பாக்கிச் சத்தங்கள் ஓய்ந்து உயிரிழப்புகள் குறைந்திருக்கின்றனவே தவிர, மக்களின் வாழ்வு நிலை மாறிவிடவில்லை. இது கவலைக்குரியது. பூரணமான இயல்பு வாழ்க்கை மக்களுக்கு கிடைக்கின்ற போதுதான் உடன்படிக்கையின் வெற்றியை பகிர்ந்துகொள்ளக்கூடியதாக இருக்கும் - என்றார்.

*கேள்வி: தென்னாபிரிக்காவில் பெரும்பான்மையின மக்கள் சிறுபான்மையின வெள்ளையர்களால் நசுக்கப்பட்டனர். எமது பிரச்சினையிலிருந்து இது முற்றிலும் வேறுபட்டது. அல்லவா? இதில் எந்த வகையில் ஒற்றுமை காண்கிறீர்கள்?

*தமிழ்ச்செல்வன்: ஒவ்வொரு விடுதலைப் போராட்டமும் வித்தியா

(12ஆம் பக்கம் பார்க்க)

## மானிப்பாய் தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து

# பெண்கள் பேரணி நடத்துவதற்கு திருமலையில் பொலீஸார் தடை!

## ஆரம்ப இடத்திலும் வீதிகளிலும் கலகமடக்கும் பிரிவினர் குவிப்பு

திருகோணமலை,பெப்ரவரி21

**மானிப்பாயில் பெண் புலிகள், இராணுவத்தினரால் தாக்கப்பட்டதை ஆட்சேபித்து நேற்று திருகோணமலையில் நடைபெறவிருந்த மகளிர் பேரணிக்கு பொலீஸார் தடைவிதித்தனர்.**

**பேரணி ஆரம்பமாகவிருந்த புனித சூசையப்பர் கல்லூரி வாசலை மறித்து பொலீஸார் காவலில் நின்றதோடு வீதியெங்கும் பொலீஸார் குண்டாந்தடிகளோடு குவிக்கப்பட்டிருந்தனர். கலகமடக்கும் பொலீஸ் படையும் வரவழைக்கப்பட்டிருந்தது.**

பேரணியை நடத்தும் பொருட்டு மாதர் சங்கங்களின் உறுப்பினர்கள், மாணவிகள் எனப் பெருந்திரளானோர் கல்லூரி வளவுக்குள் திரண்டிருந்தனர். இவ்வேளையில், அங்கு விரைந்து வந்த பொலீஸார் பேரணி நடத்தப்படக்கூடாது என்று தடைவிதித்தனர்.

பேரணி நடைபெறவிருப்பது குறித்து தங்களிடம் 24 மணிநேரத்துக்கு முன் அறிவித்து அனுமதி பெறப்படவில்லை எனவும், அதனால் வீதி வழியே பேரணி செல்வதை அனுமதிக்க முடியாது எனவும் பொலீஸார்

(12ஆம் பக்கம் பார்க்க)



திருகோணமலையில் மகளிர் ஆர்ப்பாட்டத்தை தடுக்கும் வகையில் பாடசாலை வாயிலில் பொலீஸார் குவிக்கப்பட்டுள்ள காட்சி.




கிளிநொச்சியில் தமிழீழ தேசிய பெரு விளையாட்டுவிழாவை தேசியக் கொடி ஏற்றி தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஆரம்பித்து வைக்கும் காட்சி.

# கிளிநொச்சியில் விளையாட்டு விழா நேற்று வண்ணமயமாக ஆரம்பம்

## கண்கவர் அணிவகுப்பு காண மக்கள் திரண்டனர்

கிளிநொச்சி,பெப்.21

இரண்டாவது தமிழீழ தேசிய பெரு விளையாட்டு விழா நேற்று கிளிநொச்சி மத்திய விளையாட்டரங்கில் கோலாகலமாக ஆரம்பமாகியது.

தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் இன்பன் தலைமையில நேற்று காலை 8.30 மணிக்கு நிகழ்வுகள் தொடங்கின.

இந்த விழாவில் தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

பொதுச் சுடரை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர். பொன். தியாகம் ஏற்றினார்.

மாவீரர் மேஜர் சோதியாவுக்கான ஈகச் சுடரினை மாவீரர் மேஜர் சோதியாவின் தாயாரும் -

மாவீரர் கேணல் சங்கருக்கான ஈகச் சுடரின்ன தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரனும் -

மாவீரர் மேஜர் அல்பேட்டுக்கான ஈகச்சுடரினை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி சிறப்புத் தளபதி லெப்டினன்ட் கேணல் நகுலனும் -

லெப்டினன்ட் கேணல் விக்டருக்கான ஈகச் சுடரினை கட்டளைப் பணியகத்தைச் சேர்ந்த லெப். கேணல் ஜெரியும் - ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படைப் பிரிவினதும் மாலதி படையணியினதும் இராணுவ அணிவகுப்பு நடைபெற்றது. அதனையடுத்து பாட

(12ஆம் பக்கம் பார்க்க)

# போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு இன்று கிளிநொச்சிக்குப் பயணம்

கொழும்பு,பெப்.21

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் சிலர் இன்று கிளிநொச்சிக்குச் செல்வர். போர்நிறுத்த ஒப்பந்த மீறல் சம்பவங்கள் தொடர்பாக அவர்கள் விடுதலைப் புலிகளின் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்துவர்.

புலிகளின் போராளிகள் இடுப்புப் பட்டி அணிந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் செல்வது, முல

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி. மீளளிக்க மறுக்கும்

# 'பிக் - அப்' வாகனத்தில் ஒன்று நீதிமன்றப் பிடியில் சிக்கியது

ஈ.பி.டி.பியைச்சேர்ந்த முன்னாள் வலிகாமம் கிழக்குப பிரதேச சபைத் தலைவரால் பயன்படுத்தப்பட்டு வந்த - சபைக்குச் சொந்தமான - 'பிக்-அப்' வாகனம் ஒன்று சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதை அந்த முன்னாள் பிரதேச சபைத் தலைவரிடமோ அல்லது உப தலைவரிடமோ கையளிக்க நீதிமன்றம் அனுமதி மறுத்துவிட்டது.

கடந்த 12ஆம் திகதி - மானிப்பாயில் பெண் போராளிகள் மீது தாக்குதல் நடந்ததினம் - சாவகச்சேரி ஈ.பி.டி.பி. அலுவலகத்தின் மீது இனந்தெரியாதோர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகக் கூறப்படுகின்றது. அச்சமயம் அங்கு தங்கியிருந்த வலிகா

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# விளையாட்டு பெருவிழா வண்ணமயமாக ஆரம்பம்





மாணவரின் நடன நிகழ்வு....



விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன்.



மேஜர் சோதியாவின் தாயார் ஈகச்சுடர் ஏற்றுகிறார்....



விளையாட்டு இணைப்பாளர் இன்பன் உரை....



விளையாட்டு விழாவுக்கான விசேட மேடை.

## தேசிய விளையாட்டு விழாவின் இன்றைய போட்டி விவரங்கள்

தமிழீழ விளையாட்டுத்துறையால நடத்தப்படும் 2ஆவது தேசிய விளையாட்டு விழாவில் இன்று வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள கரபந்தாட்டம், உதைபந்தாட்டம், கிரிக்கெட் மற்றும் வலைப்பந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

*கேணல் சங்கர் ஞாபகார்த்த கிரிகெட் போட்டியில் பங்குபற்றும் அணிகள்:-*

★ மன்னார் மாவட்ட அணி எதிர் முல்லைத்தீவு மாவட்ட 'ஏ' பிரிவு அணி.

★ மட்டக்களப்பு மாவட்ட அணி எதிர் கிளிநொச்சி மாவட்ட 'ஏ' பிரிவு அணி.

*மேஜர் சோதியா ஞாபகார்த்த வலைப்பந்தாட்டப் போட்டியில் பங்கேறும் அணிகள்:-*

★ மாலை - கிளிநொச்சி மாவட்ட அணி எதிர் மன்னார் மாவட்ட அணி.

★ இரவு - முல்லைத்தீவு மாவட்ட அணி எதிர் மட்டக்களப்பு மாவட்ட அணி.

*லெப் கேணல் விக்ரர் ஞாபகார்த்த உதைபந்தாட்டப் போட்டியில் பங்கேறகும் அணிகள்:-*

★ மாலை - கிளிநொச்சி மாவட்ட அணி எதிர் திருமலை மாவட்ட அணி.

★ மாலை - முல்லைத்தீவு மாவட்ட அணி எதிர் மன்னார் மாவட்ட அணி.

*மேஜர் அல்பேட் ஞாபகார்த்த கரபந்தாட்டப் போட்டியில் பங்கேற்கும் அணிகள்:-*

★ காலை - அம்பாறை மாவட்ட அணி எதிர் யாழ்.மாவட்ட அணி.

★ இரவு - கிளிநொச்சி மாவட்ட அணி எதிர் வவுனியா மாவட்ட அணி.

(ஓ-5)

## கூட்டுறவுத் துறையினரும் போராட்டத்துக்கு ஆதரவு

அரசுக்கும் - புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை பூரணமாக நடைமுறைப்படுத்தப்படாததை ஆட்சேபித்து நாளை முற்பகல் 10 மணிவரை சகல நடவடிக்கைகளையும் ஸ்தம்பிக்கச் செய்யும் செயற்பாட்டில் கூட்டுறவுத்துறையினரும் பங்குகொள்ளவிருக்கின்றனர்.

யாழ்மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறி[illegible] தெரி[illegible]க்கப்பட்டுள்ளதாவது,

அரசுக்கும் [illegible] புலிகளுக்கு மிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு நாளை சனிக்கிழமை ஒரு வருடம் பூர்த்தியாகிறது.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முன்னிருந்தே [illegible] இயல்புவாழ்க்கை [illegible] வேண்டும் என்று [illegible] களோடு இணைந்து கூட்டுறவுத் துறையினராகிய நாமும் குரல் கொடுத்து வந்துள்ளோம். புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதும் எமது எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் என்று எண்ணினோம். எனினும், எமக்கு மிகுந்த ஏமாற்றமும், அதிருப்தியுமே ஏற்பட்டுள்ளது. இடம்பெயர்ந்து அவல நிலையில் வாழும் மக்கள் தத்தமது சொந்த வாழ்விடங்களுக்குச் செல்ல முடியவில்லை; இயல்பு நிலையும் தோன்றவில்லை.

இந்த சூழ்நிலையில், யாழ்மாவட்ட மனிதநேய அமைப்புக்கள் ஒட்டுமொத்த தமிழீழ மக்களின் ஏமாற்றத்தையும் அதிருப்தியையும் வெளிப்படுத்தும் பொருட்டு குடாநாட்டில் சகல நடவடிக்கைகளையும் ஸ்தம்பிக்கச் செய்வதென தீர்மானித்துள்ளது.

இந்தப் போராட்டத்தில் கூட்டுறவாளர்களும் பங்குபற்றி ஆதரவு தெரிவிக்கவேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## விளக்கேற்றும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,பெப்.21

தேசிய சமாதான நாளை ஒட்டி நாளை சனிக்கிழமை மாலை 6.50 மணிக்கு குடாநாட்டில் உள்ள சகல சுகநல சேவை நிலையங்களிலும் சமாதான விளக்கேற்றும் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வுகளில் விவசாய சம்மேளனம் பிரதிநிதிகள், விவசாயிகள், சமயப்பெரியார்கள் மற்றும் அரசசார்பற்ற நிலையங்களின் பிரதிநிதிகள் ஆகியோரை கலந்துகொள்ளுமாறு சுகநல சேவைகள் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் கேட்டுள்ளார். (ஐ-3)

## சமுர்த்தி வங்கி திறப்பு

யாழ்ப்பாணம்,பெப்.21

நல்லூர் பிரதேச செயலர் பிரிவின் வலயம் 'பி' இற்கான சமுர்த்தி வங்கி இன்று காலை 9.30 மணிக்கு கோண்டாவில் பகுதியில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்த வைபவத்தில் வைத்து மக்களுக்கான வங்கிக் கணக்குப் புத்தகங்களும் வழங்கப்படவுள்ளன.(ஐ-10)

## மருதங்கேணி நிலைமைகளை அரச அதிபர் பார்வையிட்டார்

வடமராட்சி கிழக்கு,பெப்.21

மருதங்கேணிப் பிரதேசத்தில் காணப்படும் குறைபாடுகளைத் தீர்த்து வைக்க உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று யாழ்.அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் உறுதியளித்துள்ளார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை மருதங்கேணிக்கு விஜயம் செய்த அவர் வடமராட்சி கிழக்கு புனரமைப்புக் குழுவினரை மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் சந்தித்து கலந்துரையாடியபோது இவ்வாறு உறுதியளித்தார்.

அப்பிரதேசத்தில் வெற்றிடமாகவுள்ள காணி உத்தியோகத்தர் பதவியை உடனடியாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அவர் தெரிவித்தார்.

மருதங்கேணி - பருத்தித்துறை பிரதான வீதி குடாரப்பில் இருந்து மருதங்கேணிவரையும் மற்றும் மருதங்கேணி - ஆழியவளை வீதி, ஆழியவளை - வெற்றிலைக்கேணி வீதி ஆகியனவும் திருத்தியமைக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

மருதங்கேணி கிராமிய வைத்திய சாலையின் கட்டட வேலைகளையும் அரச அதிபர் பார்வையிட்டார்.

(ஐ-112)

எக்ஸ்போ ஏவியேஷனில் கொழும்புக்கு பயனியுங்கள்
இலவச போக்குவரத்து வசதி
யாழ்ப்பாணம் - பலாலி - யாழ்ப்பாணம்
கொட்டாஞ்சேனை - ரத்மலானை - கொட்டாஞ்சேனை
எக்ஸ்போ ஏவியேஷன் (பிரைவட்) லிமிட்டட்
1எ, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021-2223891, 071-349999
296,A/1, காலி வீதி, கொழும்பு 6
தொ.பேசி: 01-360290,360291,074-512666

ரூ. 16910 முதல்
தொலைக்காட்சிப் பெட்டிகள்
சிங்கர்
புதிய பார்வை
இல.1, ஸ்டான்லி விதி, யாழ்ப்பாணம்
தொ.பே.: 021-2225408

என்றென்றும் தரம்
அது நிரந்தரம்
10 YEARS WARRANTY Japanese Technology
உங்களின் மனதில்
என்றுமே முதல்வன்!
Lumala
Bicycles Supreme

# எங்களது ஆட்டவலுவில் 80வீதமே திரும்பியுள்ளது

## கங்குலி சொல்கிறார்

“எமது அணியின் ஆட்ட வலுவில் 80 வீதம் மட்டுமே இப்போது திரும்பியுள்ளது. இப்போது நாம் நல்லநிலையில் விளையாடியபோதும் எமது முழுமையான ஆட்ட வலுவுக்கு நாம் திரும்பவில்லை என்றே எனக்குத் தோன்றுகின்றது.”



மகிழ்ச்சியில் மைதானத்துக்குள் கங்குலி

- இவ்வாறு தெரிவித்துள்ளார் இந்திய அணித் தலைவர் சௌரவ் கங்குலி. ஸிம்பாப்வேயுடனான ஆட்டத்தில் வென்ற பின்னர் செய்தியாளர்களிடம் பேசும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

“இந்த வெற்றி எமக்கு உற்சாகம் தருகிறது. நாம் நல்ல நிலையில் விளையாடினோம். எமது துடுப்பாளர்கள் சிலர் தங்களது ஆட்ட திறனுக்கு (Form) திரும்பிவிட்டார்கள். ஆனாலும், நான் இன்னும் எமது அணி தனது முழுத் திறமையில் 80 வீதத்தை மட்டுமே மீளப் பெற்றுள்ளதாக நினைக்கின்றேன்” - என்றார் கங்குலி.

“இன்றைய ஆட்டம் கடந்த இரு ஆட்டங்களில் இருந்த எமது திறனைவிட மேம்பட்டதாக அமைந்திருந்தது. ஆனால், அணி இன்னும் அதன் முழுமையான ஆட்டத்திறனுக்கு மீளவில்லை” - என்றும் சொன்னார்.

ஆஸ்திரேலியாவுடனான தோல்வி, நெதர்லாந்து (11.ஆம் பக்கம் பார்க்க)

# குரெஞ்சே பற்றி பேசிக்கொண்டிராதீர்; ஷோன்பொலக்கிற்கு ஒத்துழையுங்கள்

## தென்னாபிரிக்க வீரர்களுக்கு அறிவுறுத்தல்

“ஹன்சி குரெஞ்சே பற்றிப் பேசிக் கொண்டிருப்பதை நிறுத்துங்கள். தற்போதைய தலைவர்கள் ஷோன்பொலக்கையும், குரெஞ்சையும் ஒப்பிட்டுக் கொண்டு இருக்காதீர்கள், ஆட்டத்தில் கவனம் செலுத்துங்கள்”

- இவ்வாறு தென்னாபிரிக்க கிரிக்கெட் சபைத்தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்த உலகக்கிண்ணத் தொடரில் தென்னாபிரிக்கா இதுவரை மூன்று போட்டிகளில் விளையாடி இரண்டில் தோல்வி அடைந்துள்ளது. மே.இந்திய தீவுகள் மற்றும் நியூஸிலாந்திடம் எதிர்பாராத தோல்வியடைந்துள்ள தென்னாபிரிக்கா, கென்யாவுக்கு எதிரான ஒரு போட்டியில் மட்டுமே வென்றுள்ளது.



பொலக்

வெற்றிபெறக்கூடிய அணி என்று கணிக்கப்பட்ட தென்னாபிரிக்க அணி, சுப்பர் சிக்ஸ் சுற்றுக்குத் தகுதி பெறுவதற்கும் திணறி வருவது ரசிகர்களுக்கு பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

(11.ஆம் பக்கம் பார்க்க)

### கறுப்புப்பட்டிப் போராட்டம் தொடரும்

# எதையும் சந்திக்க தயார் அன்டி பிளவர் அறிவிப்பு

ஹராரே,பெப்.21

ஐ.சி.சியின் எச்சரிக்கையையும் மீறி அரசுக்கு எதிர்ப்பைத்தெரிவிக்கும் வண்ணம் ஸிம்பாப்வே வீரர் அன்டி பிளவர் புதனன்றும் கறுப்புப்பட்டி அணிந்து விளையாடினார்.



அன்டி பிளவர்

ஸிம்பாப்வே ஜனாதிபதி ரொபேர்ட் முகாபேயின் கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்த அணிவீரர்கள் அன்டி பிளவர், ஹென்றி ஒலங்கா ஆகியோர் நமீபியாவுக்கு எதிரான போட்டியில் கையில் கறுப்புப்பட்டி அணிந்து விளையாடினர்.

இதற்கு ஐ.சி.சி.கடும் எதிர்ப்புத் தெரிவித்தது. விளையாட்டுடன் அரசியலைக் கலக்கக்கூடாது என்று எச்சரித்தது. இந்த எச்சரிக்கையையும் மீறி இந்தியாவுக்கு எதிரான் போட்டியில் ஹென்றி ஒலங்கா சேர்க்கப்பட்டதால அவர் களமிறங்கவில்லை இருந்தாலும் கறுப்புப்பட்டி அணிந்து அரங்கில்

(10.ஆம் பக்கம் பார்க்க)

## இன்று போட்டியில்லை

கேப்டவுன்,பெப்.21

கிரிக்கெட் உலகக்கிண்ண தொடரில் இன்று போட்டி எதுவும் நடைபெற மாட்டாது. இன்று நியூஸிலாந்து - கென்ய அணிகளுக்கிடையிலான போட்டி கென்யாவில் நடைபெறவிருந்தது.

எனினும், பாதுகாப்புக் காரணங்களுக்காக கென்யாவுக்குச் செல்வதற்கு நியூஸிலாந்து மறுத்துவிட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

# பெரிய அளவிலான துடுப்புக்கள்; இந்திய, ஸிம்பாப்வே வீரர்களிடம்

## புதனன்று திடீர் சோதனை

ஹராரே,பெப்.21

இந்திய, ஸிம்பாப்வே போட்டிகளுக்கு முன்பாக இவ்வணிகளின் வீரர்கள் பயன்படுத்தும் துடுப்புக்கள் பரிசோதிக்கப்பட்டன. சில வீரர்கள் விதிகளுக்கு மாறான துடுப்புகளைப் பயன்படுத்துகின்றமை அப்போது கண்டுபிடிக்கப்பட்டது.

உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாடும் இந்திய - ஸிம்பாப்வே அணிகளின் வீரர்கள் ஐ.சி.சியின் விதிமுறைக்கு மேலான அளவு கொண்ட துடுப்புகளைப் பயன்படுத்துகின்றனரென புகார் எழுந்தது.

இந்திய வீரர்களான கங்குலி, ஷேவாக் ஆகியோரின் துடுப்புகள் வரையறுக்கப்பட்ட அளவைவிடக் கூடுதலான அளவுகளில் உள்ளதாகத் தெரியவந்துள்ளது.

(11.ஆம் பக்கம் பார்க்க)




## கங்குலிக்கு அழைப்பாணை

புதுடில்லி,பெப்.21

கிரிக்கெட் உலகக்கிண்ண போட்டியில் இந்திய அணியின் மோசமான ஆட்டத்தைத் தொடர்ந்து ரசிகர்கள் தொடர்ந்த வழக்கில் அணித்தலைவர் கங்குலி, கிரிக்கெட் சபைத் தலைவர் டால்மியா ஆகியோருக்கு நீதிமன்றம அழைப்பாணை அனுப்பியுள்ளது.

கிரிக்கெட் உலகக் கிண்ண போட்டியில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆட்டத்தில் இந்திய அணி 9 விக்கெட்

(11.ஆம் பக்கம் பார்க்க)

# தப்பிவிட்டனர் இந்தியர்

ஒரு வழியாக இந்தியாவுக்கு நிம்மதி. ரசிகர்களின் கோபத்துக்கு ஒரு வடிகால் கிடைத்தது. ஸிம்பாப்வேயுடனான ஆட்டத்தில் ஒருவாறு வென்றது இந்தியா. இது பெரிய வெற்றி என்று சொல்லிவிட முடியாது என்றாலும், இந்தியாவுக்கு அவசியமான வெற்றி. இது இல்லை என்றால் இந்திய வீரர்கள் ரசிகர்களின் தொல்லைகளுக்குப் பதில் சொல்லிமாளாது. ஒருவாறு தப்பிவிட்டார்கள் இந்தியர்கள்.

இந்த ஆட்டத்தில் அவர்கள் ஓட்டங்களைக் குவித்திருக்க வேண்டும். தற்போதுள்ள நிலையில் அணிக்கு அது மிக. அவசியம். ஆனால், அவர்கள் அதனைச் செய்யத் தவறிவிட்டார்கள். கங்குலி இந்த ஆட்டத்திலும் தன் பொறுப்பற்ற தன்மையை வெளிக்காட்டினார். அணி வெற்றிபெற்ற போதும் அவரது துடுப்பாட்டம் சொல்லிக்கொள்ளும்படி அமையவில்லை. இந்திய அணி தன் தேறிய ஓட்ட சராசரியை உயர்த்த வேண்டுமெனின், ஓட்டங்களைக் குவித்தே ஆகவேண்டும். ஸிம்பாப்வேயுடனான ஆட்டம் அதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்தது. எனினும், இந்தியர்கள் அதனைப் பயன படுத்தத் தவறிவிட்டனர்.

நாணயச் சுழற்சியில் வென்றவர்

(10.ஆம் பக்கம் பார்க்க)

## SHARP Action of the day



நெதர்லாந்து வீரர் டி லீட் ஆஸி. ஆரம்ப துடுப்பாளர் மஹேர் ஆட்டமிழக்கச் செய்த மகிழ்ச்சியில்...

பிரவுன்ஸ் எலக்ரோனிக்ஸ் Browns
BROWNS ELECTORINICS

MICRO PC SYSTEMS
◆ கணனி விற்பனை ◆ பழுதுபார்த்தல் ◆ பராமரிப்பு
intel IBM hp Mercury PROLINK
175/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 077-7308417
MPAQ COMPUTERS

SHARP
உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சிறந்த சேவை
89, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-2225150
Browns ELECTRONICS

ASIAN COMPUTER EDUCATION
தரமான கணனிப் பாடநெறிகள்
2G,ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்

# பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல்ய கட்டடப்பொருள் விற்பனை நிலையத்துக்கு கீழ்க்காணும் வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

1. விநியோக விற்பனை பிரதிநிதி
   கல்வித் தகைமைகள்: க.பொ.த. (சா/த) பரீட்சையில் கணிதம், ஆங்கிலம் திறமைச் சித்தி உட்பட க.பொ.த. (உ/த) பரீட்சையில் சித்தி. அத்துடன் குறித்த பதவியில் ஆகக்குறைந்தது 3 வருடகால அனுபவம்.
2. சிட்டை லிகிதர்
   தகைமை: க.பொ.த. (சா/த) பரீட்சையில் கணிதம், ஆங்கிலம் உட்பட சித்தி.
3. விற்பனையாளர்
   பொருத்தமானவர்கள் சுயவிவரக் கோவையினை சுயமாகத் தயாரித்து கீழ்க்காணும் முகவரிக்கு 28.02.2003இற்கு முன்பதாக அனுப்பி வைக்கவும்.

விளம்பர இல. 1792,
மே/பா. உதயன் பணிமனை,
(14762) கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# மருதடி விநாயகர் மரக்காலை

எம்மிடம் மரப்பலகை வகைகள்

முதிரை - பலகை - 12", 14" .........26"வரை
வேம்பு - பலகை - 12", 14" .........24"வரை
முதிரை - தீராந்தி - 4x3
பாலை, வேம்பு - தீராந்தி - 4x3, 5x4, 6x4, 8x4, 5x2, 6x2

வேம்பு, தேக்கு, மருது, வாகை ஆகிய மரங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

மருதடி விநாயகர் மரக்காலை,
ஆலடிச்சந்தி,
மானிப்பாய்.
தொ.பே.இல.: 077 - 7176338
(14594)


## இளங்கலைஞர் மன்ற இசைவிழா நிகழ்ச்சி

யாழ்ப்பாணம்,பெப்.21

நல்லூர், இளங்கலைஞர் மன்றம் நடத்தும் வருடாந்த இசைவிழா கடந்த 14ஆம் திகதி முதல் எதிர் வரும் 23ஆம் திகதி வரை மன்றக் கலா மண்டபத்தில் இடம்பெறுகிறது.

இதில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4மணிக்கு வி.கே.கானமூர்த்தி குழுவினரின் நாதஸ்வர இசையும்-

பிற்பகல் 5 மணிக்கு குமாரதாஸ் பவப்பிரியாவின் பாட்டுக் கச்சேரியும்-

பிற்பகல் 5.25 மணிக்கு சுகன்யா சிவானந்தத்தின் பாட்டுக் கச்சேரியும்-

மாலை 6.15 மணிக்கு ஆர்.இராதா கிருஷ்ணனின் வயலின் இசையும்-

இரவு 7.15 மணிக்கு பரதகலா கேந்திரா மாணவிகளின் நடனமும் இடம் பெறுகின்றன. (ஒ)

## விவசாயப் பிரச்சினை தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.21

குடாநாட்டு விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் கலந்துரையாடல் ஒன்றை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா ஏற்பாடு செய்துள்ளார்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள், விவசாயிகள் சங்கங்கள் மற்றும் சம்மேளனங்களின் தலைவர்கள் இக்கலந்துரையாடலில் பங்கேற்பதாகத் தெரிவிக்கப்பட்டது (ஒ)


யாழ். வர்த்தகர்கள், விவசாயிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

# M/S A.M.T. TRANSPORT SERVICE

ஆகிய நாம் பெருமையுடன் அறியத்தருவது தொழில்நுட்ப விளக்க உரையும் வாகன கண்காட்சி நிகழ்ச்சியும் கலந்துரையாடலும்

★ டாட்டா கனரக வாகனம் (பேருந்துகள், பாரவூர்திகள் 250 - 350 வகைகள், ரிப்பர் வகைகள்)
★ மகேந்திரா உழவு இயந்திரம், இவற்றிற்கான உதிரிப்பாகங்கள்.

மேற்படி வாகனங்கள் சம்பந்தமான தொழில்நுட்ப விளக்க உரையும் கண்காட்சி நிகழ்ச்சியும் கலந்துரையாடலும்

**திரு.சி.வி.க.சிவஞானம்**
**(யாழ். ப.நோ.கூ.ச.தலைவர்)**

அவர்களின் தலைமையில் நாளை இடம்பெறவுள்ளது.

இடம்: இல.431, கோவில் வீதி, நல்லூர் (கந்தன் கருணை)
காலம்: நாளை (22.02.2003) சனிக்கிழமை
நேரம்: காலை 11.00 மணி.

விவசாய பெருமக்கள், கனரக வாகன உரிமையாளர்கள், கொள்வனவாளர்கள் அனைவரையும் இக்கருத்தரங்கில் பங்குபற்றிப் பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

# A.M.T. TRANSPORT SERVICE

பருத்தித்துறை வீதி, இருபாலை சந்தி,
கோப்பாய்.
தொலைபேசி: 0777 788473/021-222-5784, 0777 686220
தொலைநகல்: 342168
E-Mail: amttranss@slt net.lk.
(14761)


# உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

## உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

**தினம் ஒரு பரிசு - 14**

நாளை (22.02.2003) இடம்பெறவுள்ள இங்கிலாந்து பாகிஸ்தான் ஆட்டத்தில் அதிக ஓட்டங்களை குவிக்கும் வீரர் யார்?

முழுப்பெயர் : ..................................
முகவரி : ..................................
அ.அட்டை எண்: ..................................

இக் கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (22.02.2003) நண்பகல் 1மணிக்குள் தினம் ஒரு பரிசு - 14, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பலாம் அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் நேரில் சேர்க்கலாம். உடனே விரையுங்கள்.

உதயன்



## உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

கிரிக்கெட் உலகக் கிண்ணம் - 2003

**Super Six பரிசுகள்**

இம்முறை சுப்பர் சிக்ஸ் பிரிவுக்குள் நுழையக்கூடிய அணிகள் எவை?

1. .................... 2. ....................
3. .................... 4. ....................
5. .................... 6. ....................

உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
முடிவு திகதி: பெப்ரவரி 28

முழுப்பெயர் : ..................................
முகவரி : ..................................
அ.அட்டை எண்: ..................................

முதற் பரிசு
மைக்கிறோ பிசி தரும்
கணனி



2ஆம் பரிசு
சிங்கர் நிறுவனம் தரும்
தொலைக்காட்சி

விசேட பரிசுகள்
அருண்ஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்டின்
கூப்பன்கள்



Super Six பரிசு
ஓமாலா நிறுவனம் தரும்
சைக்கிள்கள்

3ஆம் பரிசு
ஷார்ப் நிறுவனம் தரும்
வானொலி

தினம் தினம் ஒரு பரிசு
ஏசியன் நிறுவனம் தரும்
கழிவுக் கூப்பன்கள்

ஆறுதல் பரிசுகள்
எக்ஸ்போ நிறுவனம் தரும்
விமான
ரிக்கெட்டுக்கள்

## உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

கிரிக்கெட் உலகக் கிண்ணம் - 2003

**மாபெரும் இறுதிப் போட்டி**

1. இறுதியில் கிண்ணத்தை வெல்லப்போகும் அணி எது?
   (.............................)
2. இறுதியாட்டத்தின் ஆட்டநாயகன் யார்?
   (.............................)

உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
முடிவு திகதி: மார்ச் 15

முழுப்பெயர் : ..................................
முகவரி : ..................................
அ.அட்டை எண்: ..................................

**தினம் தினம் ஒரு பரிசு:**
ஆட்டம் நடைபெறும் நாளுக்கு முதல் நாள் கேட்கப்படும் கேள்விக்கு நீங்கள் விடையளிக்க வேண்டும். சரியான விடை எழுதுபவருக்கு ஏசியன் நிறுவனம வழங்கும் 1000ரூபாவுக்கான 50கழிவுக் கூப்பன் கிடைக்கும்.

**விசேட பரிசுக் கூப்பன்கள்:**
முக்கிய ஆட்டங்களின்போது மேலதிகமாக ஒரு கேள்வி கேட்கப்படும். அதில் வெல்லும் அதிர்ஷ்டசாலிக்கு அருண்ஸ் ஸ்போட்ஸ் பொட் வழங்கும் 500 ரூபா பெறுமதியான பரிசுக் கூப்பன் கிடைக்கும்.

**Super Six பரிசுகள்:**
Super Six இற்கான சரியான அணிகளைத் தெரிவுசெய்யும் மூவருக்கு ஓமாலா நிறுவனம் வழங்கும் புத்தம் புதிய சைக்கிள்கள் காத்திருக்கின்றன. இதற்கான முடிவு திகதி இம்மாதம் 28ஆகும்.

**மாபெரும் இறுதிப் போட்டி:**
இது பெரும் பரிசுகளைக் கொண்டது. வெல்லும் 3 அதிர்ஷ்டசாலிகள் 1ஆம், 2ஆம், 3ஆம் பரிசுகளைப் பெறுவர். ஆறுதல் பரிசுகளாக 10 இருவழி விமானப் பயண ரிக்கெட்டுக்கள் காத்திருக்கின்றன. இதற்கான முடிவு திகதி மார்ச் 15 ஆகும்.

**விதிகள்:-**
ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம், போட்டோப் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா, அ.அட்டை பெறும் வயதுக்குக் குறைந்தவர்கள் பெற்றோரின் அ.அட்டை எண்ணைக் குறிப்பிடலாம், உதயன் மற்றும் உதயன் சார்ந்த நிறுவனங்களின் ஊழியர்கள், அவர்களது குடும்பத்தவர்கள் போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள், நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது, முடிவுகள் குறித்து எந்த விளக்கங்களுக்கும் தொடர்புகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. அனைத்து முடிவுகளும் மார்ச் மாதம் 27ஆம் திகதிய உதயனில் அறிவிக்கப்படும்.

உதயன்

# ஓராண்டில் நடந்ததும் நடக்கத் தவறியதும்

அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி நாளையுடன் ஓராண்டு பூர்த்தியாகின்றது.

அதனையொட்டி நாடுமுழுவதிலுமுள்ள பாடசாலைகளில் இன்றைய தினத்தை சமாதான நாளாகப் பிரகடனம் செய்துள்ளது பாடசாலைக் கல்வி அமைச்சு.

நாளைய தினம், நாடு முழுவதிலும் சமாதான தினத்தை அனுஷ்டிக்கும்படி அரசு கோரியுள்ளது.

அத்தினத்தையொட்டி நாடுமுழுவதிலும் சமாதானத் தீபம் ஏற்றும்படியும் 'மோதல் தவிர்ப்புக்கு நன்றி' என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட கொடிகளைப் பறக்கவிடும்படியும் தெற்கில் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது.

இதற்கு மாறான நிலைமை வடக்கில் வெளிப்பட்டுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டு ஒருவருடம் பூர்த்தியாகின்ற போதிலும், அதற்கு அமைவாக இதுவரை குடாநாட்டில் மக்களின் இயல்பு வாழ்க்கை உறுதிசெய்யப்படாமையை ஆட்சேபித்து நாளை சில மணிநேரம் யாழ். குடாநாட்டை ஸ்தம்பித நிலைக்குக் கொண்டுவருமாறு யாழ்.மாவட்ட மனித நேய அமைப்புகள் கேட்டிருக்கின்றன.

இதேவேளை, இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வுகாணும் தற்போதைய சமாதான முயற்சிகளை ஆக்ரோஷமாக எதிர்க்கும் சிங்களப் பேரினவாதிகளும்கூட, நாளைய தினத்தில் தெற்கில் தமது எதிர்ப்புப் போக்கை வெளிப்படுத்துவதற்கு முஸ்தீபு செய்துவருகின்றார்கள்.

எது எப்படி என்றாலும் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு ஓராண்டு பூர்த்தியாகும் இவ்வேளையில், அது தொடர்பாக மக்கள் தமது கருத்துக்களை சுதந்திரமாக - சுயாதீனமாக - வெளிப்படுத்தும் சூழ்நிலை நிலவுவது வரவேற்கத்தக்கதே.

மக்களின் கருத்துக்களை வெளிப்படுத்தும் நிகழ்வுகள் நாளை மட்டும் இடம்பெறப்போகின்றன என்பதல்ல. அண்மைக்காலத்தில் வடக்குக் கிழக்கில் இத்தகைய பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்று வருவதை கடந்த ஒரு சில வாரப் பத்திரிகைத் தகவல்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

அமைதிச் சூழலில் - சமாதானப் பேச்சுக் காலத்தில் - இடம்பெறும் அத்துமீறல்களுக்கு எதிராக மக்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்தும் நிகழ்வுகளாகவே அவை பெரும்பாலும் இடம்பெற்று வருகின்றன.

கறுப்புப் பட்டிப் போராட்டங்கள், கண்டனப் பேரணிகள், மறியற்போர்கள், ஆர்ப்பாட்டங்கள் என்று வடக்கு - கிழக்கில் தமிழ்பேசும் மக்களின் உணர்வலைகள் அண்மைக்காலத்தில் தொடராக வெளிப்பட்டுவருவதை அனைவரும் கவனத்தில் கொள்வது அவசியமாகின்றது.

யுத்தம் நின்றுவிட்டது; மோதல் ஓய்ந்துவிட்டது; அநியாயச் சாவுகள், உடல் பாதிப்புகள், உடைமை அழிவுகள் நின்றுவிட்டன; அமைதி நிலவுகின்றது என்று மக்கள் ஒருபுறம் சந்தோஷப்பட்டாலும், சமாதான முயற்சிகள் ஒரு தேக்க நிலையில் இறுகி நிற்பது குறித்து அவர்கள் மறுபுறத்தில் வேதனையில் ஆழ்ந்திருப்பதையும் நாம் மறந்துவிடமுடியாது.

சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவது உண்மைதான். ஆனால், அதற்கு அடிப்படையாக அமைந்திருக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் நிறைவேற்றப்படவேண்டிய - நிறைவுசெய்யப்படவேண்டிய - பல கட்டுப்பாடுகள், பொறுப்புகள், நடவடிக்கைகள் இன்னும் பூர்த்திசெய்யப்படவில்லை. இதுவே மக்கள் எதிர்ப்பு நிகழ்வுகள் பலவற்றிற்கு அடிப்படையாக அமைந்திருப்பதும் கவனிக்கத்தக்கது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டு ஓராண்டாகியும் யுத்தநிறுத்தம் வெற்றிகரமாகக் கடைப்பிடிக்கப்படுவதையும் அமைதிப் பேச்சுகள் தொடர்வதையும் இட்டு புளகாங்கிதம் அடைவது தப்பில்லை.

அதேவேளை, இந்த ஓராண்டு காலத்தில் நிறைவு செய்திருக்க வேண்டிய பல பணிகளைப் பூர்த்தி செய்யத் தவறியதால் இந்த சமாதான முயற்சிகளுக்கு எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பாதிப்புகள், ஆபத்துக்கள் குறித்தும் இந்தச் சந்தர்ப்பத்தில் சிந்திப்பது அவசியமாகின்றது.

சம்பந்தப்பட்டோர் அதை முன்கூட்டியே உணர்ந்து செயற்பட்டிருந்தால், நாளைய தினத்தில் வடக்கு - தெற்கு, கிழக்கு - மேற்கு என்ற வேறுபாடின்றி எங்கும் ஒரே எழுச்சி - மகிழ்ச்சி - நிகழ்வுகளாக இருந்திருக்கும் என்பது மட்டும் நிச்சயம்.

# குடிதண்ணீர் வசதி செய்துதரும்படி கைதடிப் பகுதி மக்கள் கோரிக்கை

கைதடி மத்தி, கைதடி கள்ளிநகர், கைதடி இராஜபுரி ஆகிய பகுதிகளுக்கு குடிதண்ணீர் வசதியைச் செய்துதருமாறு கோரி கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தினால் சாவகச்சேரி பிரதேச சபைக்கு மகஜர் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டதாவது:-

கைதடி மத்தி, கள்ளிநகர், கைதடி இராஜபுரி ஆகிய பிரதேசங்கள் மிகவும் பின்தங்கிய பிரதேசங்கள் ஆகும். குடிதண்ணீர்ப் பற்றாக்குறை இங்கு ஒரு பெரும் பிரச்சினையாக இருக்கின்றது.

எனவே, "எமது பகுதி மக்களின் ஏழ்மையையும் வசதியின்மையையும் கருத்திற்கொண்டு கைதடி மத்தியில் உள்ள பொதுக்கிணற்றையும், கைதடி இராஜபுரியில் உள்ள பொதுக் கிணற்றையும் மற்றும் குழாய்க்கிணற்றையும் புனரமைத்துத் தருவதோடு, கைதடி கள்ளிநகரில் ஒரு குழாய்க் கிணற்றையும் புதிதாக அமைத்துத்தருமாறும் கேட்டுக்கொள்கின்றோம். இவ்வுதவியானது எமது மக்களின் அடிப்படைத்தேவைகளில் முக்கியமானதும் அத்தியாவசியமுமான தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்துவைக்கும் என்பதனையும் தங்களிற்கு தெரியப்படுத்துகின்றோம் - என்று மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-75)

## திருவீதி மான்மியம்



வடக்கே இருந்து ஒருவன்
வந்தனன் "கொண்டா" தன்னில்
அடக்கொணா வேகத்தோடு
அங்கு வந்தது "ஜமகா" ஒன்று
இடப்பக்கமாக "சுசிக்கி" தன்னில்
இளையதோர் நங்கை வந்தாள்
நடக்கொணா கிழடு ஒன்று
நகர்ந்தது "வெஸ்பா" தன்னில்
கடந்திட சொறிநாய் ஒன்று
கன்னியோ அதன்மேல் மோத
வடகிழக்கிருந்து வந்தோர்
வனிதைமேல் வீழ்ந்துருண்டார்.

- விகடகவி.

## எழுதுநர் பதவிக்கு ஆள்சேர்ப்பு:

# நேர்முகத் தேர்வில் தெரிவானோருக்கு எதிர்வரும் 3ஆம் திகதிமுதல் நியமனம்

## மாகாணசபை அதிகாரி 'உதயனுக்கு' தகவல்

வடக்கு - கிழக்கு மாகாண எழுதுநர் மற்றும் அதனோடு இணைந்த சேவைகளுக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்காக அண்மையில் நடத்தப்பட்ட நேர்முகப்பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவானோருக்கு எதிர்வரும் மூன்றாம் திகதி முதல் நியமனம் வழங்கப்படவுள்ளது.

போட்டிப் பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட சமயம் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்தவர்களுக்குத் தற்போது நியமனம் வழங்கப்படுவதாக வடக்கு - கிழக்கு மாகாண பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் நேற்று 'உதயனு'க்கு இத்னைத் தெரிவித்தார்.

நியமனம் பெறுவதற்கு தெரிவுசெய்யப்பட்ட அனைவருக்கும் எதிர்வரும் 3ஆம் திகதிமுதல் திருகோணமலை உப்புவெளியில் அமைந்துள்ள மாகாண பொதுநிர்வாக அமைச்சின் விருந்தினர் விடுதியில் ஒருநாள் பயிற்சி வகுப்பு நடத்தப்படும்.

பயிற்சி வகுப்புக்காக திகதி குறிப்பிடப்பட்டு அழைக்கப்பட்டோர் தமக்குரிய தினங்களில் சமுகமளித்து பயிற்சியையும், நியமனக் கடிதத்தையும் பெற்றுக்கொள்ளலாம்.

நியமனம் பெற்ற யாழ்மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கான பயிற்சி வகுப்பு அழைப்புக் கடிதங்கள் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அழைப்புக் கடிதங்கள் கிடைக்கப்பெற்றோர் நேரில் சமுகமளித்து தமக்குரிய நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொள்ளலாம் - என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (எ)

# சமாதான சூழலை குழப்புவதற்கு பல முனைகளிலும் முயற்சிகள்!

## அரசியல்துறைப் பிரமுகர் அமிர்தாப் தெரிவிப்பு

கொழும்புத்துறை,பெப்.21

நாம் இப்போது சமாதான நீரோட்டத்தில் இணைந்துள்ளோம். அதன் வழியாக அரசியல் பேச்சில் ஈடுபட்டு வருகிறோம். அந்த அரசியல் சக்கரத்தைத் தடம்புரளச் செய்ய பல முனைகளில் முயற்சிகள் நடைபெறுகின்றன. இந்த நிலை தொடருமாயின் எமது ராணுவச் சக்கரம் சுழல ஆரம்பிக்கும்.

எமது இறைமை, சுதந்திரம், பாதுகாப்புக்குத் தடை வருமாயின் அதனைத் தகர்த்தெறிய நாம் தயங்கமாட்டோம்.

- இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பிரமுகர் அமிர்தாப் யாழ். பல நோ.கூ.சங்க கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்ற கூட்டுறவு ஊழியர்களுடனான சமகால அரசியல் நிலைவரம் தொடர்பான கருத்தரங்கில் தெரிவித்தார்.

பல நோ.கூ.சங்க பொது முகாமையாளர் மு.தெய்வேந்திரம் தலைமையில் இந்தக் கருத்தரங்கு நடைபெற்றது.

அரசியற்றுறைப் பிரமுகர் அமிர்தாப் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி ஒரு வருடம் பூர்த்தியடையும் நிலையில், தற்போது நடைபெறும் பல சம்பவங்கள் தொடர்பாக மக்கள் குழப்பமடைந்துள்ளனர். அவற்றைத் தெளிவுபடுத்த வேண்டிய கடப்பாடு எமக்கு உண்டு. நிராயுதபாணிகளாக அரசியல் பணிக்கு வந்த எம்மை இராணுவம் வலிந்து சீண்டி வருகிறது.

ஆனால், நாம் சமாதான வழியில் உறுதியாய் உள்ளோம். தேசியத் தலைவரின் கையொப்பத்தை மதித்து உணர்வுகளை அடக்கி, பொறுமை காத்து வருகின்றோம். நாம் ஒரு போதும் போரைத் தொடங்கமாட்டோம். எம்மீது போர் திணிக்கப்பட்டால் அதை எதிர்கொள்ளவும் நாம் தயங்கமாட்டோம். அதை கடந்த வரலாறுகள் எடுத்துக்கூறும்.

அரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட தமிழர் பிரச்சினை பல பேச்சுகளை கடந்தும் தீர்க்கப்படாதுள்ளது. சேர் பொன்.இராமநாதன், சேர்பொன்.அருணாசலம் காலம் தொடங்கி பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம், திம்பு பேச்சு, இலங்கை - இந்திய ஒப்பந்தம், பிரேமதாஸ, சந்திரிகா அரசுகளுடனான பேச்சுகள் அனைத்தும் தமிழர்களையும் ஏமாற்றும் பேச்சுகளாகவே அமைந்தன. தற்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசுடன் பேச்சு நடத்துகின்றோம். ஆனால், ஒப்பந்தத்தில் உள்ளவற்றை, பேச்சுக்களின் முடிவுகளை நடைமுறைப்படுத்துவதில் வேகம் போதாதுள்ளது. பாதுகாப்பு வலயங்கள் இன்னமும் அகற்றப்படவில்லை. அதேவேளை, செத்த பாம்புக்கு அடிப்பது போல் நிராயுதபாணிகளான பெண் போராளிகளை தாக்கியுள்ளது சிங்கள இராணுவம் புலிகளின் பகுதிக்குள் உளவு வேலைகளில் இராணுவம் ஈடுபட்டு வருகின்றது. இவை அனைத்தும் சமாதானத்தைக் குழப்பும் செயல்களாகவே நாம் கருதுகிறோம் - என்றார் அவர். (எ-30)

# தென்மராட்சிப் பிரதேச செயலக நடமாடும் அலுவலகம் ஆரம்பம்

தென்மராட்சி,பெப்.21

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் தென்மராட்சி கிழக்குப் பகுதி மக்களுக்கான நடமாடும் அலுவலகம் கடந்த செவ்வாய்க்கிழமை கொடிகாமம் பிரதேச சபை அலுவலகத்தில் பிரதேச செயலர் க.கேதீஸ்வரனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நடமாடும் அலுவலகம் வாரத்தின் பிரதி செவ்வாய்க் கிழமை தோறும் இயங்குமெனவும் -

இதில் பிரதேச செயலக காணிப் பிரிவு, அடையாள அட்டைப் பிரிவு, மோட்டார் போக்குவரத்துப் பிரிவு, உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவு ஆகியவற்றுடன் தென்மராட்சி கிழக்குப் பிரிவு கிராம அலுவலர்களும் சமுகமளிப்பர் எனவும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-117-74)

**நாளை**

மாசி 10
சனிக்கிழமை
(22.02.2003)
திதி :ஷஷ்டி
இரவு 9.44வரை.
நட்சத்திரம: சுவாதி
பிற்பகல் 3.06வரை.
சுபநேரம் : 3.31 - 5.01
ராகுகாலம் : 9..31 - 11.01
(பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

இருப்பவனுக்கு கொடுப்பதை விட இல்லாதவனுக்கு கொடுப்பதே தர்மம்.

# எமக்குத் தகவல் தராமலேயே புத்தர் சிலை நிறுவப்பட்டது!

## உதவிப் பிரதேச செயலர் தெரிவிப்பு

வலி.வடக்கு,பெப்.21

கந்தரோடைப் பகுதியில் நிறுவப்பட்டுள்ள புத்தர்சிலை தொடர்பாக ஏற்கனவே அரச அதிபருக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளேன். எமது பிரிவில் எமக்கு எந்தவித தகவலும் தரப்படாமலேயே இந்த புத்தர்சிலை நிறுவப்பட்டுள்ளது.

உடுவில் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் க.அருட்பிரகாசம் இவ்வாறு தெரிவித்தார்.

வலி.தெற்கு, வலி.வடக்கு பொது அமைப்புகளின் ஒன்றியங்கள் இணைந்து நேற்றுமுன்தினம் கந்தரோடையில் நடத்தப்பட்ட பேரணியின் முடிவில் உதவிப் பிரதேச செயலரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

மகஜரைப் பெற்றுக்கொண்டு உரையாற்றிய உடுவில் உதவிப் பிரதேச செயலாளர் தெரிவித்ததாவது:-

எமது பகுதியில் தொல்பொருள் திணைக்களத்திற்குச் சொந்தமான இடத்தில் புத்தர்சிலை நிறுவப்பட்டுள்ளமை ஒரு முரண்பட்ட செயலாகும். இதனைப்பற்றி எமது கலாசார உத்தியோகத்தர் மற்றும் அப்பகுதி கிராம அலுவலர்கள் ஆகியோரிடமிருந்தும் அறிக்கைகளைப் பெற்று அரச அதிபருக்கு அனுப்பியுள்ளேன். அத்துடன் மீண்டும் மேலதிக அரச அதிபருடன் நேரில்சென்று பார்வையிட்டு அறிக்கை வழங்கியுள்ளேன்.

இதேநேரம் எதிர்காலத்தில் இந்த விகாரை பற்றி ஏதாவது முன்னேற்றமான செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டால் இது சம்பந்தமாக இந்தப் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளை அழைத்துப் பேசி அவற்றுக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார். (ஒ-86)

## இளங்கலைஞர் மன்ற இசைவிழா

இன்றைய (21.02.2003) நிகழ்ச்சிகள்
மாலை 4.00 - 8.30

- மங்கள இசை - V.K. கானமூர்த்தி குழுவினர்
- மங்கள விளக்கேற்றல் - திரு.S.வெற்றிவேலாயுதம் ('வலம்புரி' நிர்வாக இயக்குநர்)
- பாட்டு - குமாரதாஸ் பவப்பிரியா
- பாட்டு - சுகன்யா சிவானந்தம்
- வயலின் சோலோ - R.இராதாகிருஸ்ணன், சைந்தவி இராதாகிருஸ்ணன்
- நாட்டியாஞ்சலி - வசந்தி குஞ்சிதபாதம் அவர்களின் "பரதகலா கேந்திர" மாணவிகள்.

(14742)



## முதல் வருட நினைவு



**தாமோதரம்பிள்ளை இரத்தினசபாபதி**

பூவுலகில்: 27.04.1915 விண்ணுலகில்: 28.01.2002

**ரதிமதி இரத்தினசபாபதி**

பூவுலகில்: 14.04.1930 விண்ணுலகில்: 21.02.2002

*ஒரு வருட ஞாபகார்த்த பிரார்த்தனைக்கூட்டம் 23.02.2003 ஞாயிற்றுக்கிழமை* மு.ப 11 மணிக்கு சென்.ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் (St.Johan's College, Auditoriam) நடைபெறவுள்ளது. அதில் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

*20, பேரின்பநாயகம் வீதி,*
*சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.* (14650)

அருட்திரு. இ.தில்லைராஜன்
குடும்பத்தினர்.



## முதலாம் ஆண்டு நினைவு நாள்

தோற்றம் 29 - 12 - 1935



மறைவு 21 - 02 - 2002

**அமரர்**

**கிறீஸ்ரி நல்லையா செல்வரத்தினம்**

ஆண்டவனின் நித்திய இளைப்பாறுதலில்
அமர்ந்திருக்கும் உங்களை அன்புடன்
நினைவு கூரும்...

நிரந்தர முகவரி:-
*'பழனி வாசல்'*
*வீமன்காமம், தெல்லிப்பழை.*
தற்காலிக முகவரி:-
*மானிப்பாய் வீதி,*
*உடுவில், சுன்னாகம்.*

திருமதி
T.செல்வரத்தினம் *(மனைவி)*,
சகோதரர்களும்,
மைத்துனர்களும்,
மருமக்களும். (14717)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணக வாழ்வில் 05 - 01 - 1934



விண்ணக வாழ்வில் 22 - 01 - 2003

**அமரர் கார்த்திகேசு கமிலஸ் கந்தசாமி**

*(ஓய்வுபெற்ற உப அதிபர், யா/இமையாணன் அ.த.க.வித்தியாலயம்)*

பாசத்தின் திருவுருவே!
பாரில் எமைத் தவிக்கவிட்டு
"மேய்ப்பர்" வழி நடத்தல் மிகவிரும்பி
மெய்வாழ்வு அடைந்துவிட்டீர்!
எம் வானில் பூத்த விடிவெள்ளி
அணைந்ததனால்
கண்ணீரில் நீந்தும் எங்கள் கனவு!

எங்கள் ஒளி விளக்கின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எமது இல்லத்தில் இன்று (21-02-2003) வெள்ளிக்கிழமை காலை 11.30 மணியளவில் நடைபெறும் நினைவுமலர் வெளியீட்டு நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

(14725)

*பருத்தித்துறை வீதி,*
*நெல்லியடி, கரவெட்டி.*

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமகள்,
சகோதரர், உறவினர்.


## ஜப்பானிய அதிகாரிகள் குழு இன்று யாழ். வருகிறது

யாழ்ப்பாணம்,பெப்.21

ஜப்பானிய வெளிநாட்டு அமைச்சின் அதிகாரிகள் குழுவொன்று இருநாள் விஜயத்தை மேற்கொண்டு இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகைதரவுள்ளது.

இன்று வருகைதரவுள்ள இக்குழுவினர் 10 மணிக்கு யாழ். வணிகர் கழகப் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். அதனைத் தொடர்ந்து, பிற்பகல் 1.30 மணிக்கு யாழ். செயலகத்தில் அரசாங்க அதிபரைச் சந்தித்துப் பேச்சு நடத்துவர். தொடர்ந்து பிற்பகல் 3.00மணிக்கு கைத்தொழில் வணிகர் மன்றப் பிரதிநிதிகளுடன் யாழ்.செயலகத்தில் இவர்கள் கலந்துரையாடுவர்.

நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். செயலகத்தில் வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசவுள்ளதுடன், அதனைத் தொடர்ந்து யாழ். பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர், பீடாதிபதிகள் மற்றும் துறைத் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்துவர். (எ-10-5)

## கடந்த ஆண்டில் 64,128 இறப்பு, பிறப்பு பத்திரங்கள் விநியோகம்

யாழ்ப்பாணம்,பெப்.21

யாழ்.மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தினால் கடந்த ஆண்டில் மட்டும் 64ஆயிரத்து 128 விவாக, பிறப்பு, இறப்பு பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக பதிவேடுகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இவற்றில் 41ஆயிரத்து 480 பத்திரங்களுக்குரிய இலக்கங்கள் குறிப்பிடப்பட்டு விண்ணப்பம் செய்யப்பட்டதாகவும், மிகுதி 22ஆயிரத்து 648 பத்திரங்களுக்குரிய இலக்கங்கள் குறிப்பிடப்படாமல் விண்ணப்பம் செய்யப்பட்டதாகவும் அந்தப் பதிவுகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

கடந்த பல ஆண்டுகளின் பின்பு இவ்வாறு அதிக எண்ணிக்கையிலான விவாக, பிறப்பு, இறப்புப் பத்திரங்கள் கடந்த ஆண்டிலேயே விநியோகிக்கப்பட்டுள்ளதாக பதிவாளர் அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (எ-10)

## சர்வோதய ஆதரவில் மிதிவெடி விழிப்புணர்வு கருத்தரங்குகள்

இலங்கை சர்வோதய அமைப்பினால் யாழ்.குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மிதிவெடி விழிப்புணர்வு தொடர்பான கருத்தரங்குகள் நடத்தப்பட்டுவருகின்றன.

தென்மராட்சி மற்றும் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிராமங்கள் உட்பட சுமார் 50 கிராமங்களில் இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் தற்பொழுது நடைபெற்று முடிந்துள்ளன. கடந்த 9மாத காலமாக நடைபெற்றுவரும் கருத்தரங்கில் 15பேர் 5 பிரிவுகளாகச் சென்று மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்திவருவதாகவும் இவர்களில் ஐவர் மிதிவெடியினால் அங்கவீனமானவர்கள் என்றும் - சர்வோதய அமைப்பின் பிராந்திய அதிகாரி எஸ்.வி.சங்கரப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இதற்கான நிதியுதவியை 'யுனிசெவ்' நிறுவனம் வழங்கிவருகின்றது என்றும் - தெரிவிக்கப்பட்டது.(எ-10)

## கசிப்பு வழக்கில் ரூபா 65 ஆயிரம் அபராதம்

வலி.வடக்கு,பெப்.21

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டமை, கசிப்பு காய்ச்சுவதற்கான உபகரணங்கள் வைத்திருந்தமை மற்றும் 20 போத்தல் கசிப்பு வைத்திருந்த குற்றத்திற்காக இளவாலை வாசி ஒருவருக்கு மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் ரூபா 65ஆயிரம் தண்டப்பணமாக விதித்தார்.

முன்னாள் இளவாலையைச் சேர்ந்த வியாகுலநாயகம் நஞ்சித் என்பவரே சுன்னாகம் மதுவரித் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் முன் ஆஜர் செய்யப்பட்டபோது இத்தொகை குற்றப்பணமாக விதிக்கப்பட்டது.

இதேவேளை -

அச்சுவேலிப் பொலிஸாரால் 2போத்தல் கசிப்புடன் பிடித்து நீதிமன்றின் முன்னர் ஆஜர் செய்யப்பட்ட நவக்கிரி புத்தூரைச் சேர்ந்த இராஜன் கந்தசாமி என்பவருக்கு 4 ஆயிரத்து ஐநூறு ரூபா தண்டமாக விதிக்கப்பட்டது. (எ-86)


உ

## ஏழாலை ஸ்ரீவசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்

நாட்டில் சமாதானம் அமைதி வேண்டி
விசேடபூஜை, பிரார்த்தனை.

காலம்: 22.02.2003 சனி
காலை 8.00 மணி விசேட அபிஷேகம்
10.00 விசேட பூஜை
11.00 தீப பூஜை, பிரார்த்தனை
11.30 சொற்பொழிவு
12.00 மகேஸ்வர பூஜை

அடியார்கள் அனைவரும் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

- தேவஸ்தானம்.

(சி-26620)



## செம்மணி இந்து மயானப் பாவனையாளர் கவனத்திற்கு!

சென்ற 29.12.2002 ஆம் திகதி நடைபெற்ற செம்மணி இந்து மயான சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் 2003 - 2004 ஆம் ஆண்டுக்கான நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

1. போசகர்கள்: திரு. பொன்.இராசதுரை, திரு. செ.தனபாலசிங்கம்
2. தலைவர்: திரு. செ.குகதாசன்
   உபதலைவர்கள்: திரு. எஸ்.இலட்சுமிகாந்தன் (கி.சே.), திரு. ச.சிவானந்தன்
3. செயலாளர்: லயன் வ.பரமசிவம் (ஜே.பி.)
   உபசெயலாளர்: திரு. கி.பத்மராசா (ஜே.பி.)
4. பொருளாளர்: திரு. இ.தணிகைநாதன்
5. செயற்குழு உறுப்பினர்கள்: திருவாளர்கள் இ.இராஜகுலேந்திரன், வி.பொன்னுத்துரை, எஸ்.சத்தியமூர்த்தி, கு.பாலசுப்பிரமணியம், எஸ்.குகநேசன்
6. கணக்காய்வாளர்: திரு. பி.குமாரசாமி

அன்பார்ந்த பாவனையாளர்களே, மேற்படி சபையின் பெருமுயற்சியால் அமைக்கப்பட்ட மழைக்காலத் தகனக் கொட்டகைகளின் மேற்கூரைத் தகடுகளும், மயான நுழைவாயில் கதவுகளும், யுத்த நேரத்தில் திருடர்களால் அபகரிக்கப்பட்டதை நீங்கள் அறிவீர்கள். இதில் ஒரு கொட்டகை தற்போது புனரமைக்கப்பட்டு பாவனையில் உள்ளது. மற்றைய கொட்டகையின் கூரைத்தகடு வேய்தல், ஏனைய திருத்த வேலைகள் யாவும் சபையின் நிதித் தட்டுப்பாடு காரணமாக மேற்கொள்ள முடியாமலுள்ளது. மேற்படி புனரமைப்பு வேலைகளை மேற்கொள்வதற்கு உதவ விரும்பும் பொது அமைப்புக்கள், தனிப்பட்டவர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், நலன் விரும்பிகள் சபையின் செயலாளருடன் தொடர்புகொள்ளுமாறு சபையின் சார்பாக அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். மயானப் பாவனையாளர்களின் நன்மைகருதி குறைந்த செலவில் தகனஞ்செய்வதற்கு ஒரு காவலாளியை நியமித்துள்ளோம். அவரிடம் 4 தூக்கு விறகும் உரிய கட்டணமும் செலுத்தி தகனக் கடமைகளைச் செய்வதற்கு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளதென்பதை அறியத்தருகின்றோம்.

கணக்குஇலக்கம்:- ஹற்றன் நஷனல் வங்கி - யாழ்-கிளை 428301- 2

செ.குகதாசன்
தலைவர்.

இ.தணிகைநாதன்
பொருளாளர்.

லயன் வ.பரமசிவம் (ஜே.பி.)
கௌரவ செயலாளர்.

(14756)



## கோல்டன் ஈகிள் பாதுகாப்புச்சேவை

(பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரம் பெற்றது)

வெற்றிடங்கள் - கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்

1) கல்வித் தராதரம் :- க.பொ.த. (சா.த.) சித்தி.
   (இளைப்பாறிய பொலிஸ் / படை உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்).
2) உயரம் :- 5' 4"
   மார்பு :- 32"
   வயது :- 22 வயதுக்கு மேல்.
3) நல்ல தேகாரோக்கியமும், கண்பார்வையும் இருத்தல் வேண்டும்.
4) நேர்முகப்பரீட்சை:- 22.02.2003 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு.
   கீழ்க்கண்ட ஆவணங்களுடன் பிரசன்னமாயிருக்கவும்.
   a. கிராம அதிகாரியின் நற்சான்றிதழ் (06 மாதங்களுக்கு உட்பட்டது.)
   b. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்.
   c. கல்வித்தராதரம்.
   d. தே.அ.அ., வி.அ.அ. (போட்டோ பிரதி)
5) கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் சலுகைகள்.
   (E.P.F, E.T.F, Attendance Bonus + Allowance)

*இல.43, கல்லூரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(c/26617)

- பணிப்பாளர்.



உ

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



பண்டிதர்

**நல்லதம்பி கந்தையா**

*(இளைப்பாறிய அதிபர்)*

தோற்றம் 05-01-1928 மறைவு 23-02-2000

திதி: 21-02-2003

*ஆண்டுகள் சில கடந்தும்*
*ஆறவில்லை எம் உணர்வு*
*அன்று உம் அறிவுரைகள்*
*இன்று எம் நினைவலைகள்*
*நாளை நம் உயர்விற்கு*
*வேண்டும் உம் ஞான ஒளி!*

- பேரப்பிள்ளைகள்.

*மீசாலை கிழக்கு,*
*மீசாலை.* (14665)

# ஓய்வூதியச் சட்டத்தில் புதிய நடைமுறை வருகிறது சேமலாப நிதித் திருத்தச்சட்டம்

## 47 மேலதிக வாக்குகளால் அது நிறைவேற்றம்

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நீதித்துறையினருக்கும் விசேட வரப்பிரசாதங்களை வழங்கியுள்ள அரசு, அரச ஊழியர்களின் ஓய்வூதியத் திட்டத்தை ஒழித்து அப்பாவி ஏழைகளின் வயிற்றில் அடித்துவிட்டது என்று குற்றஞ்சுமத்தினார் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ.

கடந்த செவ்வாயன்று நாடாளுமன்றத்தில் நிதி அமைச்சர் கே.என். சொக்ஸி, ஊழியர் சேமலாபநிதித் திருத்தச் சட்டம், உள்நாட்டரசிறை வரிகள் திருத்தச் சட்டம் ஆகிய இரு திருத்தச்சட்டங்களைச் சமர்ப்பித்தார்.

இவ்விடயங்கள் தொடர்பான விவாதம் காலை பத்து மணிமுதல் பிற்பகல் மூன்று மணிவரை நடைபெற்றது.

வழமையாகத் தூங்கி வழியும் சபை நேற்றுமுன்தினம் முழுநாளும் சுறுசுறுப்பாகவும் அதேவேளை உறுப்பினர்களின் பேச்சுக்கள் காரசாரமாகவும் அமைந்திருந்தன.

பொ.ஐ.மு. உறுப்பினர்களும் ஜே.வி.பியினரும் இந்த இரண்டு சட்டத்திருத்தங்களையும் கடுமையாக விமர்சித்தனர்.

### ரொனி டி மெல்

பல வருடங்கள் நிதி அமைச்சராக இருந்து செயற்பட்ட முன்னாள் நிதி அமைச்சர் ரொனி டி மெல் விவாதத்தை ஆரம்பித்துப் பேசினார்.

உள்நாட்டு இறைவரிகள் திருத்தச் சட்டத்தைப் போன்று பொ.ஐ. முன்னணியும் பல சட்டங்களை முன்னர் சமர்ப்பித்தது. கறுப்புச் சந்தைக்காரர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கியது. கறுப்புப் பணத்தை வெளியில் கொண்டுவர பல முயற்சிகள் மேற்கொண்டது. ஆனால், அவை வெற்றியளிக்கவில்லை. தவறான திட்டங்களினாலேயே பொ.ஐ.முன்னணி அரசைப் பொதுமக்கள் வீட்டிற்கு அனுப்பினர் என்று கூறிய ரொனி டி மெல், வரி ஏய்ப்பாளர்களுக்கும் பொது மன்னிப்பு வழங்குவதால் அரசு பல கோடி ரூபாவை இழக்க நேரிடும் என்று எச்சரிக்கை விடுத்தார்.

நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பே வெள்ளையர்களால் ஏற்படுத்தப்பட்ட அரச ஊழியர்களுக்கான ஓய்வூதியத்திட்டத்தை ஒழிக்கக்கூடாது என்றும் அவர் கூறினார்.

### ஹந்துன்நெத்தி

இந்த அரசு தவறான நடவடிக்கைகளினால் கூடிய விரைவில் மண் கவ்வப்போகின்றது. அப்போது இவர்களுடைய தேர்தல் செலவுகளுக்குப் பணம் தேவை. அதற்கு முன்னோடியாகவே கறுப்புச் சந்தைக்காரர்களுககும் மன்னிப்பளித்து சலுகைகள் வழங்கி ஆதரவு திரட்டுகிறது அரசு. வரியாக நாட்டுக்குக் கிடைக்கவேண்டிய பல கோடி ரூபா இவர்களுக்கு தேர்தல் நிதியாகக் கிடைக்கும். அதற்கான முயற்சிதான் இது என்றார் ஜே.வி.பி. உறுப்பினரான சுனில் ஹந்துன்நெத்தி.

### மஹிந்த யாப்பா

பொ.ஐ.மு. உறுப்பினரான மஹிந்த யாப்பா அபேவர்த்தன, அரசு ஊழியர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தவர்களுக்கும் அந்திம காலத்தில் கிடைக்கும் ஓய்வூதியம் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. இதில் கைவைக்கக்கூடாது. ஓய்வூதியத்திட்டத்தை நீக்கிவிடுவதால் அரசதுறை ஊழியர்களின் தொழில் அக்கறையும் இல்லாமல் போய்விடும் என்றார்.

### பந்துல குணவர்த்தன

இவர்களுக்குப் பதில் அளிப்பது போல் பேசினார் பிரதி அமைச்சர் பந்துல குணவர்த்தன. எதிர்க்கட்சிகள் நினைப்பதுபோல் நாம் வங்குரோத்து நிலையை அடைந்துவிடவில்லை. இது வரை வரி செலுத்தாதவர்களுக்குப் பொது மன்னிப்பு ஒன்றை வழங்குவதன்மூலம் முடக்கி வைக்கப்பட்டுள்ள கறுப்புப் பணத்தை வெளியில் கொண்டுவரமுடியும். ஊழியர் சேமலாபநிதித் திருத்தச்சட்டம் ஏற்படுத்தப்படுவதால் தற்பொழுது சேவையில் இருக்கும் ஊழியர்கள் தொடர்ந்தும் ஓய்வூதியம் பெறுவர். இந்த ஆண்டு ஜனவரி மாதத்திற்குப் பின் நியமனம் பெறும் அரச ஊழியர்களே ஊழியர் சேமலாப நிதித்திட்டத்திற்கு உள்வாங்கப்படுவார்கள் எனக் கூறினார்.

### தினேஷ் குணவர்த்தன.

பிரதி அமைச்சருக்குப் பதிலடி கொடுத்தார் மக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினரான தினேஷ் குணவர்த்தன.

சேமலாபநிதிச் சட்டத்தை எதிர்த்து வழங்கக்கூடிய நிதித்துறை ஊழியர்கள் வெற்றி பெற்றுள்ளனர். இவர்களுடைய ஓய்வூதியத்திட்டம் மாற்றப்படக்கூடாது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இதனால் அமைச்சர் இவர்களுக்கு விலக்களித்துள்ளார்.

அதேவேளை, இந்த நாட்டைப் பாதுகாப்பதற்காக தமது உயிரைத் தியாகம் செய்யும் முப்படையினருக்கும் பொலீஸாருக்கும்கூட ஓய்வூதியம் இல்லாமல் போகின்றது. இதை நாம் வன்மையாக எதிர்க்கின்றோம்.

பிரபல தொழிற்சங்கவாதியான பிலிப் குணவர்த்தனவின் பரம்பரையில் வந்த பிரதி நிதியமைச்சர் தோட்டத் தொழிலாளர்களுக்கும் ஓய்வூதியத் திட்டத்தை வழங்கவேண்டும். ஆனால், அவரோ உள்ளதையும் இல்லாமல் செய்யப்போகின்றார் என்று சாடினார் தினேஷ் குணவர்த்தன.

"கடந்த ஏழு வருடங்களாக நீங்கள் ஆட்சியில் இருந்தபோது தேங்காய்துருவிக்கொண்டா இருந்தீர்கள்? தோட்டத் தொழிலாளர்களை நடுத்தெருவுக்குக் கொண்டு வந்தவர்களே நீங்கள்தான்!" என ஆளும் தரப்பினர் கோஷம் போட்டனர்.

### அஸ்வர் கூறிய கதை

எதிர்க்கட்சியினருக்கு அவ்வப்போது பதிலடி கொடுத்துக்கொண்டே இருந்த நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் கடந்த ஏழு ஆண்டு காலத்தில் அரச ஊழியர்களும் தோட்டத் தொழிலாளர்களும் கூட பழிவாங்கப்பட்டனர். உங்களுடைய ஆட்சி தொடர்ந்து நடந்திருந்தால் அநேகமானோர் தற்கொலை செய்துகொண்டிருப்பார்கள். பாவம் பொதுஜன ஐக்கிய முன்னணி! ஜே.வி.பியுடன் கட்டாயத் திருமணம் செய்துகொண்டது. நன்நடத்தைக் காலத்திலேயே விவாகரத்தும் செய்துவிட்டது. இவர்கள்தான் தற்கொலை செய்துகொண்டிருக்கவேண்டும். ஆனால், அதைச் செய்யமாட்டார்கள் என்று கூறிய அமைச்சர், 'ஆனந்த விகடன்' சஞ்சிகையில் வந்த கதை ஒன்றையும் சபையில் கூறினார்.

அமைச்சர் அஸ்வர் கூறிய கதை வருமாறு:-

"அழகான பெண்மணி ஒருவர் சுட்டு விரலில் ரத்தம் சொட்ட சொட்ட டாக்டரிடம் வந்து என்னைக் காப்பாற்றுங்கள்" என்றாராம்.




"என்னம்மா சுட்டுவிரலில்தானே காயம். இந்தக் காயம் எப்படி ஏற்பட்டது?" என்று கேட்டார் டாக்டர்.

"டாக்டர் நான் தற்கொலை செய்ய முயற்சித்தேன். அதனால் இந்தக் காயம் ஏற்பட்டது. என்னைக் காப்பாற்றுங்கள்!" என்றார் அந்தப் பெண்.

"தற்கொலை செய்ய எத்தனையோ வழிகள் உள்ளன. எப்படி உன்கையில் காயம் ஏற்பட்டது?" என்று கேட்டார் டாக்டர்.

"ஐயா! நான் மார்பில் துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்யலாம் என்று நினைத்தேன். ஆனால், அண்மையில்தான் பல லட்சம் ரூபா செலவு செய்து மார்பகங்களை அழகுபடுத்தினேன். அதை வீணடிக்கக்கூடாது. அதனால் வாய்க்குள் சுட்டுக் கொள்ள நினைத்தேன். சில மாதங்களின் முன்தானே பல ஆயிரம் ரூபா செலவழித்து 'பல்செற்' ஒன்றை பூட்டினேன். அது பழுதாகிவிடக்கூடாதல்லவா?

"முயற்சியைக் கைவிடாது காதில் சுட்டுக்கொண்டாவது சாகலாம் என யோசித்தேன். காதில் சுட்டால் வெடித்துச் சத்தம் அதிகமாகக் கேட்குமே என்று பயமாக இருந்தது.

"அதனால்தான் சுட்டுவிரலில் சுட்டுக்கொண்டேன் ஆனால் சாகவில்லை. ஐயோ அம்மா! இரத்தம் போகிறது. என்னைக் காப்பாற்றுங்கள்!" என்று அழுதாளாம் அந்தப் பெண்மணி.

- இதுதான் கதை.

எல்லாவற்றையும் செய்திருப்போம். ஆனால், தொடர்ந்து ஆட்சி செய்ய முடியாமல் போய்விட்டது என்று பம்மாத்து விடுகின்றனர் பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பியினரும் என்று வெளுத்து வாங்கினார் அமைச்சர் அஸ்வர்.

### மகிந்த ராஜபக்ஷ

தொடர்ந்து உரையாற்றவந்த எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, அமைதியாகத் தனக்கே உரிய பாணியில் சில விடயங்களைக் கூறிவிட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதே கைவைத்துவிட்டார்.

ஐந்து வருடங்களுக்கு மேல் எம்.பியாக இருந்துவிட்டால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஓய்வூதியம் பெறுகின்றனர். ஆனால், காலங்காலமாக உழைக்கும் ஊழியர்களின் ஓய்வூதியத்துக்கு ஆப்பு வைத்துவிட்டது அரசு. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், நீதித்துறையைச் சேர்ந்தவர்களுக்கும் தரப்பட்டுள்ள வரப்பிரசாதங்கள் நாட்டிற்காக உழைப்பவர்களுக்கு வழங்கப்பட்டால் என்ன?

முப்படையினர், ஆசிரியர்கள், வைத்தியத்துறையினர், பொலீஸார் என சேவையாற்றுபவர்களை அரசு புறக்கணிக்கக்கூடாது என்றார் மகிந்த ராஜபக்ஷ.

### நிதியமைச்சர் பதில்

விவாதத்திற்குப் பதில் அளித்துப்பேசிய நிதி அமைச்சர் சொக்ஸி, இங்கு பேசிய எதிர்க்கட்சியினர் சட்டத் திருத்தத்தை முற்றாக புரிந்து கொள்ளாமல் பேசுகின்றனர்.

இதுவரைகாலமும் தமது சொத்துக்கள், வருமானங்கள், தொடர்பாக சரியான விவரங்களை சமர்ப்பிக்கத் தவறியவர்களுக்கு அவற்றைச் சமர்ப்பிப்பதற்கு 2003ஆம் ஆண்டு ஜூன் 30ஆம் திகதிவரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இக்காலப்பகுதிக்குள் அனைத்து விவரங்களையும் சமர்ப்பிப்பவர்களுககு வரி மன்னிப்பு வழங்கப்படும். இவர்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளும் வாபஸ் பெறப்படும். தவறினால் இக்காலப்பகுதிக்குப்பின் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

இப்பொழுது நடைமுறையிலுள்ள ஓய்வூதியத் திட்டம் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும். ஆனால், 2003ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிக்குப் பின் புதிதாகச் சேர்த்துக் கொள்பவர்களுக்கு சேமலாப நிதித் திட்டம் ஏற்புடையதாகும். இவர்களுடைய சம்பளத்தில் 8 வீதத்தை இவர்கள் முதலீடு செய்யவேண்டும். அதேவேளை, 12 வீதத்தை அரசு செலுத்தும். இவ்விரண்டு தொகையும் ஊழியரின் பெயரில் வைப்பிடப்படும். இப்பொழுது ஓய்வூதியம் பெறுபவர்களின் சேவை 30 வருடமாக இருக்கிறது. தற்போது 32 வருடங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது. 32 வருட சேவையை முடித்தவர்களுக்கு மாத சம்பளத்தில் 70 வீதம் ஓய்வூதியமாகக் கிடைக்கும் - என்றார்.

இறுதியாக இரண்டு சட்ட மூலங்களும் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டன.

ஊழியர் சேமலாப நிதி திருத்தச் சட்டத்திற்கு ஆதரவாக 100 வாக்குகளும், எதிராக 53 வாக்குகளும் கிடைத்தன. 47 மேலதிக வாக்குகளால் அது நிறைவேற்றப்பட்டது.

உள்நாட்டு நிலை வரித் திருத்தச் சட்ட வரைவுக்கு எதிர்க்கட்சியினர் கொண்டுவந்த திருத்தங்கள் நிராகரிக்கப்பட்டன. அதேவேளை, நிதி அமைச்சரால் முன்வைக்கப்பட்ட சில திருத்தங்களுடன் ஆதரவாக 97 வாக்குகளையும் எதிராக 49 வாக்குகளையும் பெற்று 48 மேலதிக வாக்குகளால் அது நிறைவேற்றப்பட்டது. (ஏ)

# புலிகளின் நடவடிக்கைகளுக்கு சர்வதேச ரீதியில் அங்கீகாரமா?

## கொதிக்கிறார் விமல் வீரவன்ஸ எம்.பி.

அரசும் புலிகளும் செய்துகொண்ட ஒப்பந்தத்தால் தமிழ்மக்களுக்கோ அல்லது அரசுக்கோ எந்தவிதமான நன்மையும் ஏற்படவில்லை. தமிழர் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி உயிருக்குப் பயந்து நாட்டைவிட்டே ஓடிவிட்டார். ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் தாக்கப்படுகின்றனர். ஜனநாயக முறையில் அரசியல் நடத்தமுடியவில்லை. ஆனால், புலிகளின் காட்டு தர்பாருக்கும் சர்வாதிகாரத்திற்கும் சர்வதேச அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டுகின்றார் ஜே.வி.பி. பிரசார செயலாளரான விமல் வீரவன்ஸ எம்.பி.

நேற்றுமுன்தினம் காலை நாடாளுமன்ற குழு அறையில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே விமல் வீரவன்ஸ இவ்வாறு குற்றஞ்சுமத்தினார்.

சமாதான உடன்படிக்கை என்ற பெயரில் நாட்டைக் காட்டிக்கொடுத்து நாட்டின் இறைமையைக் குழிதோண்டிப் புதைப்பதற்காகச் செய்யப்பட்ட ஓர் இராஜதுரோக ஒப்பந்தம் இது.

இந்த ஒப்பந்தம் ஒருபோதும் வெற்றி பெறப்போவதும் இல்லை; நன்மையளிக்கப்போவதும் இல்லை. ஆனால், தனித் தமிழீழம் ஒன்றை உருவாக்கும் ஆபத்துடையது இந்த ஒப்பந்தம் என்பது மட்டும் உண்மை.

சமாதானம், சமாதானம் என்று கூறிக்கொண்டு நாட்டுமக்களைப் பட்டினி போட்டு வதைக்கின்றது அரசு. வாழ்க்கைச் செலவும் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகளும் தினசரி அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. இதனால், அதிவிரைவில் பட்டினிச் சாவுகள் நாட்டின் சனத்தொகையைக் குறைத்துவிடும். இந்த அரசு நாட்டுமக்களைப் பட்டினிச்சாவில் இருந்து காப்பாற்ற எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

நாட்டைக் காட்டிக் கொடுக்கும் இந்த ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டு ஒரு வருடமாகின்றது. பிரயோசனம் இல்லாத இந்த ஒப்பந்தத்தை எதிர்த்தும், வாழ்க்கைச் செலவைக் குறைக்க நடவடிக்கை எடுக்கத் தவறிய அரசைக் கண்டித்தும் இன்று (வியாழக்கிழமை) பேலியகொடையில் இருந்து மாபெரும் எதிர்ப்புப் பேரணி ஒன்றை நடத்துகின்றோம்.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் சுமார் 25ஆயிரம் பேர் கலந்துகொள்வார்கள். கூடிய விரைவில் ஏனைய எதிர்க்கட்சிகளுடன் இணைந்து பத்து லட்சம் பொதுமக்களைத் திரட்டிப் பாரிய எதிர்ப்புப் பேரணி ஒன்றை நடத்தவுள்ளோம் - என்றார் விமல் வீரவன்ஸ.

ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினரான நிமால் ஹந்துன்நெத்தியும் இந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் கருத்துரை வழங்கினார்.

அவர் கூறியதாவது:-

இந்த அரசு தான் 'கொண்டுவந்துள்ள உள்நாட்டரசிறை திருத்தச் சட்டதின்மூலம் வரி ஏய்ப்புச் செய்த கறுப்புச்சந்தைக்காரரைக் காப்பாற்ற முனைகின்றது. இப்பொழுது வரி செலுத்தாமல் 'டிமிக்கி' கொடுத்த 15ஆயிரம் பேருக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குகள் நடைபெறுகின்றன. புதிய சட்டத்தின்மூலம் இவர்களுடைய வழக்குகளும் வாபஸ் பெறப்பட இடமுண்டு.

இன்றைய அரசில் பங்காளிகளாக இருக்கும் பல அரசியல்வாதிகளுக்கு எதிராகவும் வரி ஏய்ப்பு வழக்குகள் இருக்கின்றன.

இவர்களையெல்லாம் காப்பாற்றுவதற்காகவே அரசு உள்நாட்டரசிறை சட்டத்தில் புதிய திருத்தத்தைக் கொண்டுவந்துள்ளது.

அதேவேளை, பரம்பரையாக அனுபவித்து வந்த ஓய்வூதிய முறையை அரசு இல்லாதொழித்து, அரச ஊழியர்களின் வயிற்றில் அடித்துவிட்டது.

இந்த அரசு அதிவிரைவில் கவிழ்ந்துவிடும் என்பது உறுதியாகிவிட்டது. அப்போது நடைபெறும் தேர்தல் செலவுகளுக்கு இந்த கறுப்புச் சந்தைக்காரர்களிடம் இருந்து கோடி கோடியாக நிதி உதவியைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடனேயே இந்த வரி மன்னிப்பு சட்டத்தை அவசரமாக அரசு கொண்டுவந்துள்ளது என சுனில் ஹந்துன்நெத்தி எம்.பி. கூறினார்.

இந்த செய்தியாளர் மாநாட்டில் விமல் வீரவன்ஸவுடன் ஜே.வி.பி. உறுப்பினர்களான ஆர்.சந்திரசேகரன், சுனில் ஹந்துன்நெத்தி ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஏ)



உரும்பிராய் தெற்கிலுள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு வீட்டுப் பாவனைப் பொருள்கள் புனர்வாழ்வு அமைச்சினால் அகதிகளுக்கான ஐ.நா. தூதராலயத்தின் ஊடாக வழங்கப்பட்டன. இந்நிகழ்வின்போது பயனாளி ஒருவருக்கு வீட்டுப் பாவனை உபகரணங்கள் வழங்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

டொன் பொஸ்கோ அண்மையில் றக்கா வீதி, ஆலடியில் ஐந்தரைப் பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: எஸ்.ஏ.தர்மலிங்கம், 344, கண்டி வீதி, புங்கன்குளம் சந்தி, யாழ்ப்பாணம். (14753)

## தவறிவிட்டது

நாச்சிக்குடா, விநாயகபுரத்தைச் சேர்ந்த மரியதாஸ் மருதநாயகம் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.8028355493v) பொன்னாலைக்கும் மாதகலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சூ.மரியதாஸ், பிரதான வீதி, மாதகல் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (14760)

கச்சேரி மொழிபெயர்ப்பாளர் கடைக்கு முன் நிறுத்தப்பட்டிருந்த பெண்கள் லுமாலா சைக்கிள் ஒன்று தவறுதலாக மாறி எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. எடுத்தவர்கள் பின்வரும் விலாசத்துடன் உடன் தொடர்புகொள்ளவும். தொடர்பு: இல.37, சோமசுந்தரம் அவென்யூ, சுண்டுக்குளி. (14754)

சிவகுல வீதி, உரும்பிராய் மேற்கு என்னும் முகவரியைச் சேர்ந்த கிருஸ்ணகோபால் கௌரிசங்கர் என்பவரது தே.அ.அட்டை (இல.813122413V) 19.02.2003 அன்று உரும்பிராய்க்கும் மருதனார்மடத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வசந்தன் கிறீம் ஹவுஸ், உரும்பிராய்ச் சந்தி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (14767)

## மணமகள்கள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1967 ஆசிரியர், 1975 பட்டதாரி ஆசிரியர், 1965 MBBS Doctor, 1972 எஞ்சினியர், 1971 பட்டதாரி ஆகியவர்களுக்கு அழகிய மணமகள்கள் தேவை. தொடர்பு: கிருஷ்ணா திருமண சேவை, செங்குந்த வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (14759)

## வயோதிப மாது விபத்தில் காயம்

ஓட்டோவும் வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்ஸும் மோதிக்கொண்டதில் ஓட்டோவில் பயணம் செய்த வயோதிபமாது படுகாயமடைந்தார்.

நேற்று காலை மந்திகைச் சந்திக்கு சமீபமாக நடைபெற்ற இந்த விபத்தில வதிரி, தனிப்பனையடியைச் சேர்ந்த எஸ்.தங்கம்மா (75 வயது) என்பவரே காயமடைந்தவர் ஆவார்.

காயமடைந்த இவர், மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்துக்குள்ளான ஓட்டோவின் முன்பகுதி பலத்த சேதத்திற்குள்ளானது. ஓட்டோ சாரதி சிறு காயங்களுக்குள்ளானார்.

(ஒ-173)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



J/222 இளவாலை வடமேற்கு
கிராம உத்தியோகத்தர்

### திரு. P.இராசேந்திரம்

அவர்கள் கிராம உத்தியோகத்தர் தரம் I இற்கு பதவி உயர்வு பெற்றதையிட்டு உளமார மகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம். அத்துடன் அவரது சேவைகள் மேலும் தொடர பலகோடி வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

இளவாலை வடக்கு,
இளவாலை.

(14776) - இலுப்பையடி ஞானவைரவர் தேவஸ்தானம் பரிபாலன சபை.

## பாராட்டி வாழ்த்துகிறோம்

**திரு. ச.சிவகுமார் கிராம அலுவலர் - பன்னாலை J/224**



பன்னாலை கிராமத்திலுள்ள பாடசாலை, கிராம அபிவிருத்திச் சங்கம், விவசாயிகள் சம்மேளனம், கணேச சனசமூக நிலையம், கணேசா முன்பள்ளி, கணேசா அறநெறிப்பாடசாலை, கணேசன் விளையாட்டுக்கழகம் போன்ற எல்லா பொது ஸ்தாபனங்களின் செயற்பாடுகளை ஊக்குவித்து தமது தன்னலமற்ற சேவையினால் மக்களின் நலனுக்காக நேர்மையுடன் அயராது பல வருடங்கள் உழைத்து வருவதுடன், மக்களின் நன்மை, தீமைகளில் கலந்து மக்களுடன் ஒன்றிணைந்துள்ள

### திரு. ச.சிவகுமார் அவர்கள்

கிராம அலுவலர் தரம் I இற்குப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு மிக மகிழ்ச்சியுடன் அவரைப் பாராட்டுகிறோம்.

*அவர் மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று, தம் சேவையை நலமுடன் புரிய எல்லாம் வல்ல எம்பெருமான் அருள்புரிவாராக.*

*பன்னாலை,*
*தெல்லிப்பழை.*

(14771) - கணேசன் விளையாட்டுக் கழகம்.

## இரண்டாம் ஆண்டு நினைவில்...

ஆழி மண்ணில் முத்தாய்
11 - 04 - 1978



ஆழக் கடலில் வித்தாய்
21 - 02 - 2001

### கடற்கரும்புலி மேஜர் விடுதலை

(கந்தையா இந்திராணி)

முடியெனச் சொன்ன கயவரை வென்று
வெடியென வெடித்தாய் கடலிலே அன்று
காற்றிலே கலந்து கடலிலே கரைந்தாய்
ஈற்றிலே மலர்ந்தாய் கரும் வேங்கையாக!

*21.02.2001 அன்று இவருடன் வீரகாவியமான அனைத்து போராளிகளுக்கும் வீரவணக்கங்கள்.*

*ஆழியவளை,*
*தாளையடி.*

(சி-26623) - குடும்பத்தினர்.

## விநியோகஸ்தர்கள் தேவை

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மிருக மருந்துத் தயாரிப்புகளை விநியோகம் செய்ய விரும்பும் தனிப்பட்டவர்கள் அல்லது நிறுவனங்கள், வரையறுக்கப்பட்ட பிறவுண் அன் கம்பனியின் மிருக மருத்துவப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

*கடிதம் அல்லது தொலைபேசி மூலம் உடன் தொடர்பு கொள்ளவும்.*

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:-

**திரு. டி.எம்.எஸ்.சல்டின், உதவிப் பொதுமுகாமையாளர்**

மிருக மருத்துவப் பிரிவு
வரையறுக்கப்பட்ட பிறவுண் அன் கம்பனி
481, டி.பி.ஜாயா மாவத்தை, கொழும்பு - 10
தொலைபேசி : 01 - 694118 அல்லது 697411

(சி-26624)

Intervet ZAGRO Biomin

## MODERN EDUCATION CENTRE

**NELLIADY**

**G.A.Q. - FIRST IN COMMERCE**
**B.A. Part I - B.COM.**
**B.A. Part II -**

துரித மீட்டல் வகுப்புகள்
ஆரம்பம்

*குறிப்பு :* ஆசிரியர்கள், உத்தியோகத்தர்களுக்கு விசேட நேரசூசி ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

பொருளியல் - அரசியல் விஞ்ஞானம்
சனி, ஞாயிறு காலை 9.30 மணி

(சி-26628) ஆங்கிலம் - சனி, ஞாயிறு காலை 10.30 மணி

## அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம்

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்

சமாதான தினத்தன்று விசேட வழிபாடு

**தேசிய சமாதான தினத்தையொட்டி நாளை (22.02.2003) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிமுதல் மேற்படி காளிகோயிலில் விசேட பூஜை, பிரார்த்தனை, அமுது வழங்கல் என்பன நடைபெறும்.**

(14769) - தேவஸ்தானம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

ஆவரங்கால் மேற்கு கிராம அலுவலர் (யா/277)
உயர்திரு.

### இராசா கணேசலிங்கம்

அவர்கள் தன்னலமற்ற தமது மகத்தான சேவையினால் மக்களின் நலனுக்காக உழைத்து கிராம அலுவலர் தரம் I இற்கு பதவியுயர்வு பெற்றமையையிட்டு நாம் அவரை மகிழ்ச்சியுடன் பாராட்டுகின்றோம். அவர் மேலும் மேலும் பல உயர் பதவிகளைப் பெற்று, எமது பகுதி மக்களுக்கு அவரது சேவை மேலும் தொடர வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

(14765) கிராம அபிவிருத்திச் சங்கம்,
ஆவரங்கால் மேற்கு.

## துயர் பகிர்கின்றோம்

எமது சகமாணவி ச.ஸ்ரீப்பிரியாவின் அன்புத் தந்தையார்

### கார்த்திகேசு சந்திரராசா

அவர்களின் இழப்பையிட்டு எமது அஞ்சலிகளைச் செலுத்துவதுடன், அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தவர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*சித்தமருத்துவத்துறை,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

(14758) - 14ஆம் அணி.

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 25-06-1926
உதிர்வு 09-01-2003

### அமரர் வித்துவான் முருகேசு விருத்தாசலம்

*(ஓய்வுபெற்ற அதிபர், யா/சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம்)*

**09.01.2003இல்** சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியை இன்று **(21.02.2003)** வெள்ளிக்கிழமை காலை **8.00** மணிக்கு யம்புகோள இந்து மயானத்தில் நடைபெறும். நாளை **(22.02.2003)** சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பணிப்புலம்,*
*பண்டத்தரிப்பு.*

(14757) - குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



சங்கானைப் பிரதேச செயலராகவும்
யு.என்.எச்.சி.ஆர். நிறுவன
அதிகாரியாகவும் இருந்து
வலிகாமம் மேற்குப் பிரதேச மக்களுக்கு
பல வருடங்கள்
மகத்தான சேவையாற்றிய

### கார்த்திகேசு சந்திரராசா

அவர்களின் அகால மரணம் இப்பிரதேச மக்களுக்கு ஒரு பேரிழப்பாகும். அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தாரோடு நாமும் எமது துயரைப் பகிர்வதோடு, கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

*அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.*

(சி-26622) கிராம உத்தியோகத்தர்கள்,
பிரதேச செயலகம்,
சங்கானை.

யாழ். மாநகரசபையின்

# உறுப்பினர் பதவியிலிருந்து இறுதிவரை விலகாதோர்

யாழ்.பொதுநூலகத் திறப்பு விழா விவகாரம் தொடர்பாக மாநகர சபை உறுப்பினர்கள் தாம் தமது உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்வதாக உறுதியளித்திருந்தனர். இதனடிப்படையில் பெரும்பாலான உறுப்பினர்கள் தமது இராஜினாமாக் கடிதங்களை மாநகர ஆணையாளரிடம் கையளித்தனர்.

எனினும், ஈ.பி.டி.பி. அமைப்பைச் சார்ந்த 5 உறுப்பினர்கள் தமது இராஜினாமாக் கடிதங்களை இறுதி வரை சமர்ப்பிக்கவில்லை என்று கூறப்படுகிறது. கடந்த 13ஆம் திகதி மாலை யாழ்.மாநகர ஆணையாளர் அலுவலகத்தில் கூட்டப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் அப்போதைய மேயர் செ.கந்தையனும் அனைத்து மாநகரசபை உறுப்பினர்களும் தமது பதவியை இராஜினாமாச் செய்வதாக உறுதிபடக்கூறப்பட்டது. ஆயினும், ஈ.பி.டி.பி. அமைப்பைச் சார்ந்த மா.கனகரட்ணம், மோசஸ் எட்வேட், து. இளங்கோ, கே.எம்.கமால்தீன், எம். ஜேசுதாசன் ஆகியோர் மாநகரசபையின் பதவிக்காலம் காலாவதியாகும் வரை தமது இராஜினாமாக் கடிதங்களைச் சமர்ப்பிக்கவில்லை.

உள்ளூராட்சி அமைப்புகளின் பதவிக் காலம் மேலும் நீடிக்கப்படலாம் என்று முன்னர் எதிர்பார்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-8)

கொக்கட்டிச்சோலையில்

# ஏழு சிறுவர்களை புலிகள் பெற்றோரிடம் ஒப்படைத்தனர்

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தாமாக இணையவந்த ஏழு சிறுவர்களை புலிகள் நேற்றுமுன்தினம் கொக்கட்டிச்சோலை புலிகளின் காரியாலயத்தில் வைத்து யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் ஒப்படைத்தனர்.

18வயதை எட்டாத இந்த ஏழு சிறுவர்களும் தாமாகவே இயக்கத்தில் சேர வந்ததாகக் கண்காணிப்புக் குழு பிரதிநிதி லைலா வட்டாவி, யுனிசெவ் பிரதிநிதி அண்டி ஜேம்ஸ் ஆகியோரிடம் புலிகள் தெரிவித்தனர்.

இந்தச் சிறுவர்களின் பெற்றோர்களும் தமது பிள்ளைகள் தாமாகவே புலிகளிடம் இணையச் சென்றதாகச் செய்தியாளர்களிடம் தெரிவித்தனர்.

16 வயதான பொன்னையா சுமன் என்ற சிறுவன் தான் பெற்றோரிடம் செல்லவிருப்பமில்லை என அடம்பிடித்தான்.

ஏழு சிறுவர்களும் தாம் மீண்டும் பெற்றோரிடம் செல்லவிரும்பவில்லை என அந்த அதிகாரிகளிடம் தெரிவித்தனர்.

க.விக்னேஸ்வரன் (மத்திய முகாம்), சு.பாபு (கல்முனை), தா. நந்தகுமார் (மண்டூர்), அ.சசிகுமார் (வைக்கேஸ்), வ.வரதராசன் (மண்டூர்), தி.தங்கத்துரை (நெல்லிக்காடு), பொ. சுமன் (மத்திய முகாம்) ஆகிய இந்தச் சிறுவர்களை மட்டு.-அம்பாறை அரசியல்துறைத துணைப் பொறுப்பாளர் கிருசன், கண்காணிப்புக் குழு மற்றும் யுனிசெவ் நிறுவன அதிகாரிகள் முன்னிலையில் பெற்றோரிடம் ஒப்படைத்தார். (எ)

## கண்டி வீதியில் காவலரண்கள் அகற்றப்பட்டன

யாழ்ப்பாணம்,பெப்.21

மிருசுவிலில் இருந்து கொடிகாமம் வரையிலான கண்டிவீதிப் பகுதியில் படையினரால் அமைக்கப்பட்டிருந்த காவலரண்களில் பெரும்பாலானவை நீக்கப்பட்டுள்ளன. இக்காவலரண்களில் இருந்த படையினர் உட்பகுதிகளில் அமைந்துள்ள இராணுவ முகாம்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு மே மாதம் தென்மராட்சிப் பகுதியில் இடம்பெற்ற யுத்தத்தின் போது இக்காவலரண்கள் அமைக்கப்பட்டன.

(ஒ-15)

## கையெழுத்து சஞ்சிகை போட்டி

மாணவரிடையே எழுத்தாற்றலையும் ஆக்கத்திறனையும் விருத்தி செய்வதற்காக மாகாணக் கல்வித் திணைக்களம் இந்த ஆண்டும் சஞ்சிகைப் போட்டியை நடத்தவுள்ளது.

பாடசாலை மாணவர்கள் தாம் கற்கும் வகுப்புகளுக்கு அமைவாக; கூட்டாகச் செயற்பட்டு பொருத்தமான பிரிவுகளில் பங்குபற்றலாம். அதிபர்களுக்கு இது தொடர்பான விவரங்களை பாடசாலை மாகாணக கல்விப் பணிப்பாளர் எஸ். மகாலிங்கம் அறிவித்துள்ளார். (ஒ-88)

## யாழ்.ஆசிரியர்கள் மட்டுநகர் பயணம்

ஜி.சீ.ஈ.உயர்தர பரீட்சையை எதிர்நோக்கும் மட்டக்களப்பு பிரதேச கணித, உயிரியல் மாணவர்களின் நலன் கருதி ஒழுங்குசெய்யப்பட்டுள்ள வழிகாட்டல் கருத்தரங்கொன்றில் பங்கேற்பதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து ஆசிரியர்களான இ. குமரன், க.சிவத்திரன், ரி.செங்காதரன், யுதர்மகுலசிங்கம், பகமல்தாசன், ஆகியோர் இன்று வெள்ளிக்கிழமை மட்டக்களப்பிற்கு பயணமாகின்றனர்.

(ஒ)

# தெய்வீக ஸ்தலங்களில்



மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம் மீது பாடப்பட்ட அருட்பாடல் ஒலிப்பேழை வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்ற போது, பாடல்களைப் பாடிய மகா வித்துவான் பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயருக்கு பேராசிரியர் அ.சண்முகதாஸ் பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (எ-90)



உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் ஆலயத்தின் மணவாளக் கோலவிழாவில் பண்ணிசை நிகழ்வு வழங்கிய கலாபூஷணம் எஸ்.ஆர்.திருஞானசம்பந்தனுக்கு ஆலயத் திருப்பணிச் சபையின் செயலாளர் ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம் பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (எ)



வட்டுக்கோட்டை கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயம் இந்து கலாசார அமைச்சின் நிதியுதவியுடன் ஆலயச் சூழலில் உள்ள விழிப்புலனற்றோருக்கு உதவு தொகை வழங்கி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஆலய பரிபாலன சபைத் தலைவர் விழிப்புல வலுவிழந்த ஒருவருக்கு கொடுப்பனவை வழங்குவதைப் படத்தில் காணலாம். (வட்டுக்கோட்டை செய்தியாளர்)



தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை வருடந்தோறும் நடத்திவரும் அறிஞர்கள், பெரியார்கள் கௌரவிப்பு விழாவில் பிரபல ஆங்கில ஆசிரியர் ரீ.என்.பஞ்சாட்சரத்துக்கு 'ஞானபண்டித விமலதாசன்' என்ற பட்டத்தை சிவதொண்டன் நிலையத்தைச் சேர்ந்த செல்லத்துரை சுவாமிகள் வழங்குவதைப் படத்தில் காணலாம். (எ-173)

# நம்பிக்கையே வாழ்வின் ஆதாரம்

வாழ்வின் ஆதாரமே நம்பிக்கை தான். நம்பிக்கைகள் தாம் வாழ்வின் வளமாக்கிகள், ஊக்கிகள், தூண்டி



கள், உந்துவிசைகள் ஆகும். சமயத்தின் ஆதாரமும் அடிப்படையும் நம்பிக்கையே.

சைவசமயத்தவர்கள் பண்டைக் காலந்தொட்டுப் பல சம்பிரதாயங்களையும் ஆசாரங்களையும் மேற்கொண்டு வருகின்றனர். அவ்வாறு மேற்கொள்வதால் நன்மைகளையே அடைந்துகொண்டு வருகின்றனர்.

இவை பரம்பரை பரம்பரையாகப் பேணப்பட்டு வருபவை. சம்பிரதாயங்கள் பலவற்றிற்கு விஞ்ஞான பூர்வமான விளக்கங்களையோ, காரணங்களையோ தந்துவிட முடியாது. அவ்வாறு தர முடியாமையினால் அவை பகுத்தறிவுக்கு ஒவ்வாதவை என்றும் மூடப்பழக்க வழக்கங்கள் என்றும் அவற்றை விலக்கிவைப்போரும் உள்ளனர்.

சிலர் சம்பிரதாயங்களுக்கும் ஆசாரங்களுக்கும் விஞ்ஞான விளக்கங்கள் கொடுப்பதற்கு முயன்று பார்க்கின்றனர். இன்றைய உலகில் எம்மாற் புரிந்து கொள்ளமுடியாதவை, விளக்கம் கூற முடியாதவை ஏராளம். அதனால் அவற்றையெல்லாம் பொய் என்றோ, மூடநம்பிக்கைகள் என்றோ

ஞானக்கதிர்

தள்ளிவிட முடியுமா? விஞ்ஞானம் வளர்ச்சிபெற்றாலும் அச்சக்தியைக் கூட இயக்க அதற்கு மேற்பட்ட சக்தி ஒன்று உண்டு என்பதை யாம் உணர வேண்டும், மதிக்கவேண்டும்.

சம்பிரதாயங்கள் , ஆசாரங்கள், சமய ஒழுக்கங்கள், நம்பிக்கைகள், மரபுகள், பாரம்பரியங்கள் என்பன தொன்றுதொட்டுப் பரம்பரை பரம்பரையாகவே கைக்கொள்ளப்பட்டு வருபவை.

அவை மனித சமுதாயத்திற்கு ஒவ்வாதனவென்றால் எப்போதோ அழிந்து போயிருக்கும். அவை பயன் உள்ளவையாக இருந்து வந்தமையினாலும் மனித சமுதாயத்தை வாழ்வித்து வருகின்றமையினாலும்தான் இற்றை வரை நிலைத்து நிற்கின்றன.

அவை அனுபவத்திரள், வாழ்க்கை அனுபவங்களாகத் தொடர்ந்து வருபவை. பண்பாடாக ஒட்டிக் கொண்டவை - பேணப்படுபவை - காலத்தைவென்று நிற்பவை. அவற்றை நாமும் அறிந்து வாழ்க்கையிற் கடைப்பிடிப்பதால் நன்மையே பெறுவோம். மூடநம்பிக்கைகள் என ஒதுக்கித்தள்ளி விடுவோமாயின் முன்னோரின்அனுபவங்களை அலட்சியம் செய்தவர்கள் ஆவோம். அவர்களின் அனுபவங்களிலிருந்து பெறக்கூடிய வாழ்க்கை நலன்களை ஏன் இழக்க வேண்டும்? நம் முன்னோர் அளித்த அருஞ்செல்வங்கள் பேணிப் பாதுகாக்கப்பட வேண

க.சிவசங்கரநாதன்

டியவை. சைவசமய ஆசாரங்கள், ஒழுக்கங்கள் என்பவற்றை அறிந்து பின்பற்ற வேண்டியது நமது கடமை.

சைவ ஆசாரங்கள், நம்பிக்கைகள் என்பனவற்றை நோக்குவோம், பெரியோர் தரும் பொருளை ஒருகையால் வாங்கக் கூடாது. சான்றோர்க்கு ஒரு கையால் ஒன்றைக் கொடுக்கக் கூடாது. இரண்டு கையாலும் வாங்க வேண்டும், இரண்டு கையாலும் கொடுக்க வேண்டும்.

மாலைப் பொழுதில் அதாவது பகலும் இரவும் அல்லாத இரண்டுங்கெட்ட நேரத்திற் படுத்து உறங்குதல், வழிநடந்து செல்லுதல், உணவு உண்பது தவிர்க்கப்பட வேண்டும்.

புல் விளை நிலம், பசுச்சாணம், இடுகாடு, வழிப்பாதை, தீர்த்தம் உள்ள இடம், ஆலயம், நிழல் உள்ள இடம், பசுக்கள் நிற்கும் இடம் வெண்மையான சாம்பல் மேடு ஆகிய இடங்களில் மலசலம் கழித்தல், எச்சில் உமிழ்தல் ஆகாது. ஒருவர் ஓரிடத்திற்குப் புறப்பட்டுச் செல்லும் போது பின்னின்று கூப்பிடக்கூடாது, தும்மக்கூடாது, மறந்தும் எங்கே போகிறீர் என்று கேட்டல் ஆகாது. திங்கள், புதன், சனி ஆகிய நாள்களில் ஆடவர்களும் செவ்வாய்,வெள்ளி நாளகளில் பெண்களும் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்யலாம். அமாவாசை, பௌர்ணமி, சிராத்தம் முதலான கர்மங்கள் செய்யும் நாளகள், ஜன்மநட்சத்திரம், விரததினங்கள், உபவாச காலங்கள் ஆகியவற்றில் எண்ணெய் தேய்த்துக்குளிக்கக் கூடாது.

அட்டமி, நவமி, அமாவாசை, பௌர்ணமி, கிரகணகாலம், ஜன்மநட்சத்திரம், மஹாளயபட்சகாலம், மாதப்பிறப்பு, வெள்ளிக்கிழமை ஆகிய காலங்களில் முடிவெட்டுதல், சவரம் செய்தல் ஆகாது.

வீட்டில் ஒரு பொருள் இல்லையென்றால் அதை எவரிடமும் இல்லை என்று சொல்லாமல் அப்பொருளை வாங்கி வாருங்கள் என்று கூறவேண்டும். இல்லை என்ற சொல்லைப் பாவிப்பதைத் தவிர்ப்பதும் நல்லது.

இரவில் வீட்டைக் கூட்டுதலோ, கூட்டியள்ளிய குப்பையை வீட்டுக்கு வெளியே கொண்டுபோய்க் கொட்டுதலோ கூடாது. இவ்வாறு செய்தால் வீட்டில் இலட்சுமீகரம் போய்விடும்.

தலையை விரித்துப் போட்டுக் கொண்டு வீட்டில் உட்காரவோ, நடக்கவோ, வெளியிற் செல்லுதலோ கூடாது. மங்கள காரியங்களின் போது அவிழ்த்து விரித்த கூந்தலுடன் நிற்கக் கூடாது.

எரிகின்ற விளக்கையோ, தீபத்தையோ வாயினால் ஊதி அணைக்கக்கூடாது.

இரவு நேரங்களில் மரங்களின் கீழே தங்குதல் கூடாது. குடும்பத்தவர், நண்பர், உறவினர் ஆகியோரைத் தூர இடங்களுக்கு வழியனுப்பிய பின்பும் வீட்டிற் சுப காரியங்களை நடத்தி விட்டும் உடனே வீடு கழுவுதல், ஸ்நானம் ஆகாது.

வெள்ளிக்கிழமைகளிலும் மற்றும் நாள்களில் இரவு வேளைகளிலும் வீட்டிலிருந்து பணம், பொருள்கள், நூல்கள் ஆகியவற்றை எடுத்துப் பிறருக்குக் கொடுக்கக் கூடாது. இரவில் வேட்டி, துணிவகைகளைத் தோய்க்கக்கூடாது. பூமியை உழுதல், மரம் வெட்டுதல், இரகசியம் பேசுதல் என்பவையும் இரவிற் செய்தல் தவிர்க்கப்பட வேண்டும்.

இவ்வாறு ஒழுகினால், வாழ்விலே சுகமும் சுபீட்சமும் பெறலாம் என ஆசார நூல்கள் கூறுகின்றன. எனவே, நல்ல நம்பிக்கைகளைப் பேணி, நல்லவர்களாக, ஒழுக்கம் உள்ளவர்களாக வாழும்போதுதான் கடவுளின் திருவருள் முழுமையாகக் கிடைக்கும். கடவுளின் திருவருளினால் தான் நாம் நினைத்த காரியங்கள் கைகூடுகின்றன. எமது வாழ்வு செழிக்கிறது என்பதை உணர்வோமாக. ★

# தப்பிவிட்டனர் இந்தியர்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் 'ஸிம்பாப்வேயினர். முதலில் களத் தடுப்பில் ஈடுபட அவர்கள் முடிவுசெய்தார்கள். சொந்த மண்ணில் துரத்திப் பிடிப்பது இலகு என்று அவர்கள் நினைத்திருக்கலாம். முன்னரே எதிர்பார்க்கப்பட்டது போன்று இந்தியத் துடுப்பாட்ட வரிசையில் பாரிய மாற்றம் தெரிந்தது. ஆரம்பத் துடுப்பாளராக சச்சினுடன் ஷேவாக் களமிறங்கினார். மூன்றாவது, நான்காவது ஆட்டக்காரர்கள் வரிசையிலும் மாற்றங்கள் செய்யப்பட்டன. கங்குலி 4ஆவது ஆட்டக்காரர் ஆக்கப்பட்டார். இந்தியர்களின் இந்தத் துடுப்பாட்ட வரிசை அவர்களுக்கு அதிர்ஷ்டமாக அமையும் என்றே தோன்றுகின்றது. இந்தியர்களைப் பொறுத்தவரையில் எதனையும் திடமாகச் சொல்ல முடியாது.

புதனன்று ஆட்டத்தில் ஆரம்பத் துடுப்பாளர்களாகக் களமிறங்கிய சச்சினும் ஷேவாக்கும் அணிக்கு அற்புதமான ஆரம்பம் ஒன்றைக் கொடுத்தனர். சச்சினின் ஆட்டம் ரசிகர்களுககுப் பெரும் விருந்து. ஆரம்ப ஜோடி அதிரடியாக 99 ஓட்டங்களைக் குவிததது. ஸிம்பாப்வே வேகப்பந்து வீச்சாளர்களின் பந்துகள் எல்லைகள் தேடி ஓடிக்கொண்டிருந்தன. அண்டி பிளவர் சொன்னது போன்று இந்தியப் பீரங்கிகள் முழங்கத் தொடங்கியிருந்தன. ஆனால், 99 ஓட்டங்களைப் பெற்ற போது 38 பந்துகளில் 6 பௌண்டரிகளுடன் 36 ஓட்டங்களைக் குவித்த ஷேவாக் ஆட்டமிழந்தார். ஹைவிட்டலின் பந்து. 'கட்' செய்ய முயன்றார். பந்து அவரை ஏய்த்துவிட்டு மட்டையின் விளிம்பில் வழுக்கிக் கொண்டு விக்கெட்டுடனேயே ஒட்டி நின்ற அந்த சுட்டிப் பையன், ஸிம்பாப்வேயின் விக்கெட் காப்பாளர் தைபூவின் கைகளில நச்சென நின்றது. ஷேவாக் அவுட். வந்தவர் மீண்டும் இளம் வீரர் மொங்கியா. ஓட்டங்களைக் குவிப்பதற்கு முயன்றார். ஆனால், முடியவில்லை. தொடர்ந்து பந்துகளைத் தடுத்தாடிக் கொண்டிருப்பது அவருக்கு சினத்தை வரவழைத்திருக்க வேண்டும். கிராண்ட் பிளவரின் சுழல் பந்து ஒன்றை முன்னேறி வந்து தாக்கினார். உயர்ந்து எழுந்த பந்து ஹேண்டாவிடம் சென்று சேர்ந்து கொண்டது. 37 பந்துகளில் அவர் பெற்றது 12 ஓட்டங்கள் மட்டும். ஆரம்பத்தில் இருந்த ஓட்ட விகிதம் இப்போது சரிய ஆரம்பித்தது.

வந்தவர் தலைவர் கங்குலி. மறுமுனையில் டெண்டுல்கர் அற்புதமாக ஆடிக்கொண்டிருந்தார். இம்முறை கங்குலி பொறுப்பாக ஆடுவார் என்ற எதிர்பார்ப்பிருந்தது.

அவர் வந்ததும் என்னவாயிற்றோ தெரியவில்லை. நன்றாக ஆடிக் கொண்டிருந்த டெண்டுல்கர், கிராண்ட் பிளவரின் சாதாரண பந்து ஒன்றை சரியாகக் கணிக்காமல் ஆடினார். அதுவே அவருக்கு எமனானது. முன் காலில் சென்று பந்தைத் தடுத்தாட முயன்றார். முன்காலுக்கு சற்று முன்பாக வீழ்ந்து எழுந்த பந்து சற்றே திரும்பி வலது இலக்கை உராய்ந்து விட்டுச் சென்றது. 92 பந்துகளில் 10 பௌண்டரிகளை விளாசி 81 ஓட்டங்களைக் குவித்தார். கங்குலி நிற்கின்றார்தானே என்று எண்ணி அவர் வெளியேறினார் போலும். முதல் விக்கெட் வீழ்ந்தபோது 99 ஓட்டங்கள் 142 ஓட்டங்களுக்குள் 3ஆவது விக்கெட் சாய்ந்தது. எனக்கு அதைப்பற்றியெலலாம் கவலையில்லை என்பது போன்று, கொஞ்ச நேரம் நின்றாடி விட்டு பின்னர் விளாச முயன்றார் கங்குலி. அவரின் முதல் முயற்சி வெற்றிகரமாக அமைந்தது. விளாசலில் கிடைத்தது ஒரு சிக்ஸ். ஆனால், மீண்டும் அது பலிக்கவில்லை. பிலிங்னபுட்டின் பந்தை அவர் தூக்கி அடிக்க 'மிட் ஓவ்' திசையில் நின்ற ஹீத் ஸ்ரீக் அதனை அழகாக ஏந்திக்கொண்டார். கங்குலி குனிந்த தலையுடன் 'பெவிலியன்' திரும்பினார். 36 பந்துகளில் அவர் பெற்றது 24 ஓட்டங்கள் மட்டும். பின்னர் வந்தவர்களினால் திராவிட் மட்டும் கொஞ்சம் நன்றாகச் செய்தார். 55 பந்துகளில் 2 பௌண்டரிகள் உட்பட 43 ஓட்டங்கள் குவித்தார் அவர். கைவ் 24 பந்துகளில் 25 ஓட்டங்கள் விளாசினார். ஒரு பௌண்டரி, ஒரு சிக்ஸர் அதில் அடக்கம். இறுதியில் 50 ஓவர்கள் முடிவில் இந்தியர்கள் 7 விக்கெட்டுக்களை இழந்து 255 ஓட்டங்களைப் பெற்றனர். இந்த ஓட்ட எண்ணிக்கை சுமாரானது. எனினும் இந்தியர்களுக்கு அது போதாது.

ஸிம்பாப்வே அணியின் நிரந்தரப் பந்து வீச்சாளர்கள் சிறப்பாக எதுவும் செய்யவில்லை. எனினும், பகுதிநேரப பந்துவீச்சாளர் கிராண்ட் பிளவர் அற்புதமாகப் பந்து வீசி இரு முக்கிய விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். 6 ஓவர்கள் பந்து வீசி அவர் கொடுத்தது 14 ஓட்டங்களை மட்டும்.

பதிலுக்குக் களமிறங்கிய ஸிம்பாப்வே அணி ஆரம்பம் முதலே திணறியது. ஸ்ரீநாத் தன் முதல் ஓவரிலேயே வேர்முலனை 'பெவிலியனு'க்குத் திருப்பினார். ஆரம்பமே சரியில்லை. 23 ஓட்டங்களுக்குள் விர்ஷாட்டின் விக்கெட்டை மீண்டும் பிடுங்கி எறிந்தார் ஸ்ரீநாத் ஸிம்பாப்வேயர்களின் துடுப்பாளர்கள் எவரும் சிறப்பாக நின்று ஆடவில்லை. விக்கெட்டுக்கள் ஒரு சீரான இடைவெளியில் வீழ்ந்து கொண்டே இருந்தன. எந்த ஒரு நபரும் 30 ஓட்டங்களைத் தாண்டவில்லை. சுட்டிப் பையன் தைபூ மட்டும் கடைசி வரை ஆட்டமிழக்காமல் நின்றாடி அணியின் ஆகக் கூடுதலான ஓட்ட எண்ணிக்கையான 29 ஓட்டங்களைக் குவித்தான். சிரேஷ்ட ஆட்டக்காரர்கள் அவனிடம் பாடம் கற்கவேண்டும் பொறுப்புடன் செயற்படுவது எப்படி என்று.

துடுப்பாட்டத்தில் பொறுப்பாகச் செயற்படாத கங்குலி, அந்தக் குறையை பந்துவீச்சில் நிவர்த்தி செய்தார். 5 ஓவர்கள் பந்து வீசினார் அவர். 22 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். அவற்றில் 'மெய்டின் ஓவரும் ஒன்று. அணியின் ஏனைய பந்துவீச்சாளர்களும் சிறப்பாகவே செய்தனர். இறுதியில் 44.4 ஓவர்களில் 172 ஓட்டங்களுடன் மடங்கியது ஸிம்பாப்வே. அன்டி பிளவர் கூறியது போன்று அவர்கள் இந்தியர்களுக்குப் பெரிதாக எந்தச் சவாலையும் அளிக்கவில்லை. இந்தியாவின் ஒரு பீரங்கி மட்டும் முழங்கியதிலேயே அவர்கள் சுருண்டு போனார்கள். அத்தனை பீரங்கிகளும் முழங்கியிருந்தால்?

அன்றைய பீரங்கியாக இருந்த சச்சின் டெண்டுல்கரே ஆட்டநாயகன்.

புதனன்று நடந்த மற்றோர் ஆட்டத்தை என்னென்று சொல்வது. இலங்கை - கனடா அணிகளிடையேயான ஆட்டம் அது. பாத்திரக் கடைக்குள் யானை புகுந்த கதையாக ஆனது கனடா அணி. இலங்கை பந்து வீச்சாளர்களின் முன்னால் அவர்களால் நிற்கமுடியவில்லை. மைதானத்துள் வருவதும் 'பெவிலியனு'க்குத் திரும்புவதுமாக இருந்தார்கள் அவர்கள். அத்தனை பாதுகாப்புக் கவசங்களையும் உடலில் அணிந்து கொள்வதற்கு எடுத்துக்கொண்ட நேரத்தைக்கூட மைதானத்தில் நிற்பதற்கு அவர்கள் செலவழிக்கவில்லையே என்று தோன்றியது. இலங்கைப் பந்துவீச்சாளர்களின் துவம்சம் செய்யப்பட்டதில் வெறும் 36 ஓட்டங்களுக்குள்ளேயே சுருண்டு கொண்டது கனடா. இலங்கையர்களுக்கு சாதனையானது. களமிறங்கிய இலங்கையர்களுக்கு அதிர்ச்சி வைததியம் கொடுத்தார் பூர்வீகத்தில் இலங்கைத் தமிழரான சஞ்சயன் துரைசிங்கம். அந்த இழப்பு இலங்கைக்குத் தாங்க முடியாதது தான். ஆனாலும், சொற்ப நேரத்திலேயே வெற்றி பெற்றது இலங்கை. அத்தப்பத்துவும் சங்ககாரவும் பௌண்டரிகள் அடிப்பதிலேயே கவனம் கொண்டிருந்தனர். உத்தியோக பூர்வமாக ஆட்டம் முடிவதற்கு 2 மணி நேரங்கள் இருக்கும் போதே இலங்கையின் வெற்றி உறுதியானது.

ஐ.சி.சி. இத்தகைய அர்த்தமற்ற ஆட்டங்களை நடத்துவது குறித்து அதிகம் சிந்திக்கவேண்டும். கிரிக்கெட்டை இழிவுபடுத்தும் வகையிலான இத்தகைய ஆட்டங்கள் மூலம் கிரிக்கெட் எந்த வளர்ச்சியையும் பெறப் போவதில்லை. இலங்கைக்கே தாம் இவ்வாறு பலவீனமான அணிகள் மீது பெரும் வெற்றிகளைப் பெறுவது ஏதோ மாதிரி இருந்திருக்க வேண்டும். அதனால்தான் "இது தவிர எமக்கு வேறு வழியில்லை" என்று சொன்னாரோ? எப்படியிருந்தாலும் இத்தகைய ஆட்டங்கள் கிரிக்கெட்டைக் கேவலப்படுத்துவனவாகவே அமையும் என்பதில் மாற்றுக்கருத்து இருக்காது.

*- கனிமொழி.*

## செய்முறைப்போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.21

வண்ணை - சாந்தையர் மடம் ஸ்ரீகற்பக விநாயகர் ஆலய சைவசமய அபிவிருத்திக்கழகம் ஆண்டு தோறும் நடத்தும் நீதி நூல் மனனப்போட்டி மற்றும் செய்முறைப்போட்டி ஆகியன நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் காலை 9.00 மணிமுதல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

மத்திய பிரிவு, மேற்பிரிவு ஆகிய இரு பிரிவுகளாக நடத்தப்படும் செய்முறைப் போட்டிகளில் மாலைகட்டுதல், கோலம்போடுதல், தோரணம் பின்னுதல் ஆகிய போட்டிகள் இடம் பெறும். (எ-5)

## திருக்குறள் மனன, எழுத்துப் போட்டிகள்

நல்லூர் கோட்டப் பாடசாலைகளுக்குட்பட்ட தரம் 3 முதல் 13 வரையிலான மாணவர்களுக்கான திருக்குறள் மனன, எழுத்துப் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன என நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எ-9)

# எதையும் சந்திக்க...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தார்.

ஐ.சி.சி. எச்சரிக்கையையும் மீறி அரசியல் காரணங்களுக்காக மீண்டும் கறுப்புப்பட்டி அணிந்த விவகாரம் அங்கு கடும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது பற்றி இதுவரை ஐ.சி.சி அறிவிக்கவில்லையென்றாலும் உலகக் கிண்ண தொடர் முடிந்ததும் இருவர் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் படும் என ஸிம்பாப்வே கிரிக்கெட் யூனியன் அறிவித்துள்ளது.

இது பற்றி அண்டி பிளவர் கூறுகையில்:-

"அரசின் கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வண்ணம் கறுப்புப் பட்டி அணிந்து விளையாடுவது என்ற முடிவில் உறுதியாக இருக்கிறேன். இது கடினமான முடிவுதான். ஆனால், இங்கு சூழ்நிலை அப்படி இருக்கிறது. கடைசிவரை இந்த முடிவில் உறுதியாக இருப்பேன். எதற்கும் தயார்"- என்றார்.

ஒலங்கா கூறுகையில், "அணியில் என்னை சேர்க்காமல் விடலாம். ஆனால், இது நான் மகிழ்ச்சியுடன் எடுத்த தீர்மானம்தான்" - என்றார். (ம-5)


யாழ். மாவட்ட சமாதான நீதிவான்கள் சங்கம்

விசேட பொதுக் கூட்டம்

காலம் - இன்று (21.02.2003) வெள்ளிக்கிழமை மாலை 2.00மணி

இடம் - யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைமையகக் கேட்போர் கூடம்

விடயம் - புரிந்துணர்வு ஒப்பந்த ஒருவருட பூர்த்தியும் சமாதானத்தை வலியுறுத்தலும்.

※ சகல சமாதான நீதிவான்களையும் தவறாது சமுகமளிக்கும்படி வேண்டுகிறோம்.

குறிப்பு:- பொது அமைப்புகளின் பிரதிநிதிகளையும் இக்கூட்டத்தில் கலந்து ஆலோசனை வழங்குமாறு வேண்டுகின்றோம்.

இணைச் செயலாளர்கள்
சு.சி.அருளானந்தம்
ச.தேவதாசன்

(14786)

உவகையுடன் பாராட்டுகிறோம்



ஜே/321, மீசாலை வடக்கு,
கிராம அலுவலர்
திரு.கந்தையா சுந்தரராசா

அவர்கள் தமது பதவியில் முதலாம் தரத்திற்கு பதவி உயர்வு பெற்றமையை இட்டு அவர்களை எமது நெஞ்சு நிறையப் பாராட்டுகின்றோம். அவர் இன்னும் பல உயர்வுகளைப் பெற்று குடும்பத்துடன் சீரும் சிறப்பும் பெற எல்லாம்வல்ல தட்டாங்குளம் விநாயகப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

மீசாலை வடக்கு,
மீசாலை.

மீசாலை வடக்கு சனசமூகநிலையம்,
தட்டாங்குளம் விநாயகர் ஆலயம் சார்பாக.
(14782)

31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 1934 - 04 - 29

மறைவு 2003 - 01 - 23

திருமதி நவரத்தினம் இராசமணி
(சுழிபுரம் கிழக்கு)

குடும்பத்தின் தீபமாய் குலம் காத்த குலவிளக்காய்
நலம் காத்தே நாளுமே நம் குடும்பம் காத்து நின்றாய்
நோய்வடிவில் காலனும் உம் உயிரை பறித்துச்செல்ல
பிள்ளைகள் நாம் கதறுகின்றோம் உம் பிரிவைத்தாங்காது
முத்தான முத்தே சொத்தே எம் தாய் நீயே!
செத்தாலும ஆறாது உம்முடனே எம் நினைவு!

சுழிபுரம் கிழக்கு, (14775)

உங்கள் நினைவுடன் வாழும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

வீடு விற்பனை

நல்லூர், செம்மணி வீதி, நாயன்மார் கட்டுச் சந்தி, பாரதி வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- வ.அன்பழகன்
12, பாரதி வீதி, நாயன்மார் கட்டு.
(14785) T.P. 0777 - 113050

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 10 - 11 - 1965

உதிர்வு 03 - 03 - 2002

அமரர் இராசேந்திரம் இந்திரகுமாரன்

பாசத்தின் இனிய முகம் என்றும் நாம் மறவோம்
நெஞ்சை விட்டகலாது உனது நினைவுகள்!

- குடும்பத்தினர்

நிரந்தர முகவரி:- 66, காரைக்காட்டு வீதி,
வண்ணார்பண்ணை.
தற்காலிக முகவரி:- ராஜமஹால்
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

(14788)


## மரண அறிவித்தல்கள்

### இராஜரட்ணம் ஜெயச்சந்திரன்

துன்னாலையைப் பிறப்பிடமாகவும், கைதடி நுணாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜரட்ணம் ஜெயச்சந்திரன் திங்கட்கிழமை (17.02.2003) அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜரட்ணம் - மகேஸ்வரி தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - காமாட்சி தம்பதிகளின் மருமகனும் சிறிமலரின் அன்புக் கணவரும் சாளினி, தாரணி, விதுஷன், தர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் சிறிசந்திரன் (பப்புவா நியூகினியா) ஆகியோரின் சகோதரனும் சிவசோதிமலர், ஜீவமலர் ஆகியோரின் மைத்துனரும் கந்தசாமியின் (U.N.C.R) சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.02.2003) சனிக்கிழமை மட்டுவில் தெற்கு, கந்தசாமியின் இல்லத்தில் நடைபெற்று, கைதடி நுணாவில், குச்சப்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(14783)

தகவல்:
சிறிமலர் (மனைவி)
குடும்பத்தினர்

### செபஸ்தியாம்பிள்ளை கென்லி (அன்பு)

மட்டுவில் வடக்கு, வைத்தியசாலை வீதியைச் சேர்ந்தவரும் அன்பத்தான் என அழைக்கப்படுபவரும், முன்னாள் ஆரோக்கியவாசா வைத்திய சாலை ஊழியரும், தற்போது பருத்தித்துறை பழைய பிரதேச செயலகத்திற்கு அருகில் உள்ள கராஜ் ஊழியருமான செபஸ்தியாம்பிள்ளை கென்லி அவர்கள் நேற்று (20.02.2003) வியாழக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற செபஸ்தியாம்பிள்ளை - அருந்தோனியா ஆகியோரின் அன்பு மகனும் பரிதாவின் அன்புக் கணவரும் நெல்சன், பானுஜா ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (21.02.2003) வெள்ளிக் கிழமை பி.ப 3.00 மணியளவில் மட்டுவில் லூர்துமாதா ஆலயத்தில் நடைபெற்று, ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

(14787)

தகவல்:
மனைவி,மக்கள்

# தேசிய பெரு விளையாட்டு விழா; யாழ்.அணிக்கு இரு வெற்றிகள்

கிளிநொச்சி,பெப்.21

கிளிநொச்சியில் தமிழீழ தேசிய விளையாட்டுவிழா நேற்று கோலாகலமாக ஆரம்பமானது. முதலில் லெப்.கேணல் விக்ரர் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இடம்பெற்றது. முதல் ஆட்டத்தில் யாழ்மாவட்ட அணி வெற்றியட்டியது.

யாழ்.மாவட்ட அணிக்கும் கிளிநொச்சி மாவட்ட 'ஏ' அணிக்கும் இடையில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் யாழ். அணி 4-1 என்ற கோல் கணக்கில் வென்றது.

ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக இருந்தது. இடைவேளைக்கு முன்னர் யாழ். அணி வீரர்களான சேர்ச்சில், வின்சிங், கமல்ராஜ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோல்களை அடித்தனர். கிளிநொச்சி அணி வீரர் ச.மோகனதாஸ தன் அணி சார்பில் ஒரு கோலைப் போட்டார்.

இடைவேளைக்குப் பின்னர் யாழ். அணி வீரன் கமல்ராஜ் மற்றொரு கோலை அடித்தார்.

தொடர்ந்து வவுனியா மாவட்ட அணிக்கும் முல்லைத்தீவு அணிக்கும இடையில் மோதல் நடந்தது. அதில், வவுனியா அணி 4-1 என்ற கோல் அடிப்படையில் வென்றது. வவுனியா அணி வீரர்களான தவராசா 2 கோல்களையும் பிரகாஷ், பாஸ்கரன ஆகியோர் தலா ஒவ்வொரு கோல்களையும் முல்லைத்தீவு அணி வீரரான செ.காண்டீபன் ஒரு கோலையும அடித்தனர்.

மேஜர் சோதியா ஞாபகார்த்த கிண்ணத்துக்கான மின்னொளியில் நடந்த வலைப்பந்தாட்டப்'போட்டியில் மன்னார் மாவட்ட அணியும் கிளிநொச்சி மாவட்ட அணியும் மோதின. மன்னார் அணி 32-12 என்ற புள்ளி வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

மாலதி படையணித் தளபதி தமிழ்ச்செல்வி, போர் பயிற்சிக கல்லூரிப் பொறுப்பாளர் அஜந்தினி ஆகியோர் போட்டிகளை ஆரம்பித்து வைத்தனர்.

மேஜர் அல்பேட் ஞாபகார்த்த கரபந்தாட்டப் போட்டியும் நேற்றிரவு மின்னொளியில் இடம்பெற்றது. இந்த ஆட்டத்தில் பங்குபற்றிய வீரர்கள் தமிழீழ கல்விப்பேரவைப் பொறுப்பாளர் வெ.இளங்குமரனுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

அம்பாறை மாவட்ட அணிக்கும் யாழ். மாவட்ட அணிக்கும் இடையில் நடநத ஆட்டத்தில் யாழ். அணி 3-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்றது.

(ம-3)

## பரிசளிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.21

உலகத் தமிழ் பண்பாட்டியக்கத்தின் இலங்கை கிளை நடத்திய பொது அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் வைபவம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறும.

(ஐ-ரி)

## நாடக வீடியோ காட்சி

யாழ்ப்பாணம்,பெப்.21

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் துணை நிறுவனமான 'செயல்திறன்' அரங்க இயக்கம் திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் (சிறிய முத்துத்தம்பி பாடசாலை முன்பாக) உள்ள காரியாலயத்தில் பரதி சனிக்கிழமை தோறும் 'தேட்டம' என்ற பெயரில் நாடக வீடியோ படக் காட்சியைக் காண்பிக்கவுள்ளது.

இந்தத் தொடரில் நாளை 22 ஆம திகதி சனிக்கிழமை முறபகல் 10 மணிக்கு குழந்தை ம.சண்முகலிங்கத்தின் 'வேள்வித்தீ' என்ற நாடகப் பிரதி காண்பிக்கப்படவுள்ளது.

(ஐ-ரி)

## உள்ளூராட்சி செயலாளர்களுக்கு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.21

குடாநாட்டில் உள்ள உள்ளூராட்சிச் சபைகளின் செயலாளர்கள் மற்றும் ஆணையாளர்களுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று இனறு முற்பகல் 10 மணிக்கு யாழ்.உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

உள்ளூராட்சி அமைச்சின் மாகாண ஆணையாளர் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றி சபைகளின் செயற்பாடுகள் தொடர்பாக விளக்கமளிக்கவிருக்கின்றார்.

(ஐ-3)

### நாளை புரிந்துணர்வு ஒப்பந்த ஓராண்டு நிறைவு:

# சுதந்திர சதுக்கத்தில் பிரதான நிகழ்வு; பிரதமர் சமாதான விளக்கேற்றுவார்

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஓராண்டு நிறைவு தினமான, நாளை பிரதான நிகழ்வு கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் இடம்பெறும். இதில் பிரதமர் ரணில் வக்கிரமசிங்க கலந்துகொண்டு சமாதான விளக்கேற்றுவார். அதேவேளை, நாடு முழுவதிலும் சமய அனுஷ்டானங்களும் சமாதான முயற்சிகள் குறித்து மக்களுக்கு அறிவுறுத்தும் நிகழ்வுகளும் நடைபெறும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியடையப் போகிறது. இக்காலத்தில் அரசாங்கம் எந்தளவுக்கு வெற்றி அடைந்துள்ளது என்று பத்திரிகையாளர் ஒருவர் அமைச்சரிடம் வினவினார.

அதற்குப் பதிலளித்து அமைச்சர் பீரிஸ் கூறியதாவது:-

கடந்த ஒரு வருடத்தில் வன்முறைகள் நிறுத்தப்பட்டுள்ளன; உயிரிழப்புகள் இல்லை; சூழல் மாற்றப்பட்டு விட்டது; மக்களின் மனதில் இருந்த அச்சம் நீங்கியது; அரசியல் தீர்வு ஒன்றைக் காணும் முயற்சியில் நாம் ஈடுபட்டிருக்கிறோம்.

அதேவேளை, சமாதானப் பேச்சுக்களில் பின்னடைவுகளும் சிக்கல்களும் ஏற்படுவது இயற்கை. பிரச்சினை ஏற்படாமல் முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சி என்று கூறக்கூடிய எதுவும் உலகில் இதுவரை இருந்ததில்லை.

எமக்கு ஏற்படும் பிரச்சினைகளை, இடையூறுகளாக நாம் நினைப்பதில்லை. அவற்றைச் சமாதான முன்னெடுப்புக்களின் ஒரு பகுதியாகவே காண்கிறோம. பிரச்சினைகள் ஏற்பட்டால் நாம் அவற்றைத் தீர்ப்போம்.

ஜப்பானில் எதிர்வரும் மார்ச மாதம் 18ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை நடைபெறும் பேச்சுக்களுக்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அப் பேச்சுக்களில் சமஷ்டி ஆட்சியில் கடைப்பிடிக்கப் படும் பொருளாதார நடைமுறைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்படும் - இவ்வாறு அமைச்சர் பீரிஸ சொன்னார்.

(ஐ)

## குரெஞ்சே பற்றி...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில், தென்னாபிரிக்க அணியில் இடம்பிடித்துள்ள வீரர்களில் சிலர் அந்த அணியின் முன்னாள் தலைவர் மறைந்த ஹன்சிகுரெஞ்சேயின் தலைமைத்துவத்தை ஒப்பிட்டுப பேசி பொலக்கை விமர்சனம் செய்து வருகின்றனர்.

தென்னாபிரிக்க அணியின் கிப்ஸ், ஒரு புத்தக வெளியீட்டு விழாவில் ஹன்சி குரெஞ்சேயை நினைவு கூர்ந்தது, "அவரது இழப்பு தென்னாபிரிக்க அணிக்கு பெரும் இழப்பு. அவர் இல்லாத குறையை இன்னும் உணர்கிறோம்'' என்கிற ரீதியில் பேசினார்.

இந்த உலகக்கிண்ணதொடர் ஆரம்பமாவதற்கு முன்னர், தென்னாபிரிக்க அணியின் வீரர்கள் அலன் டொனால்டும், ஜொன்ரி ரோட்ஸும் இந்த உலகக் கிண்ணத்தை வென்று ஹன்சி குரெஞ்சேயுக்குச் சமர்ப்பிக்கப் போவதாகக் கூறியிருந்தனர்.

வீரர்களின் இம்மாதிரியான பேச்சுக்களை தென்னாபிரிக்க கிரிக்கெட்சபையின் அதிகாரிகள் கண்டித்துள்ளனர்.

குறிப்பாக, தென்னாபிரிக்க அணியின் தடுமாற்றத்துக்கு ஷோன் பொலக்கின் தலைமைத்துவம்தான் காரணம். குரெஞ்சே போல அவர் இல்லை என்றெல்லாம் தென்னாபிரிக்க அணியில் இடம்பெற்றுள்ள வீரர்கள் சிலர் வெளிப்படையாக விமர்சித்ததில் தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையின் தலைவர் மிகுந்த எரிச்சல் அடைந்துவிட்டார்.

தற்போது என்ன செய்ய வேண்டுமோ அதை மட்டும் செய்யுங்கள். மீதமுள்ள ஆட்டங்கள் அனைத்திலும் வென்று சுப்பர்சிக்ஸ்"க்கு தகுதிபெறமுயலுங்கள்.

"பொலக்கை நீங்கள் யாரும் விமர்சிக்க வேண்டாம். அணித்தலைவருக்கு உங்களால் முடிந்த முழு ஒத்துழைப்பைக்கொடுத்து தென்னாபிரிக்க கிரிக்கெட் ரசிகர்களை திருப்திப்படுத்துங்கள். அதை விடுத்து, தேவையற்ற விவகாரங்களைக்கிளப்பி தலைவரை பலவீனப்படுத்தாதீர்கள்"- என்று தென்னாபிரிக்க கிரிக்கெட் சபைத் தலைவர் ஜெரால் மஜோலா வீரர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும், இது குறித்து தென்னாபிரிக்க அணியின் பயிற்சியாளர் எரிக் சைமன்சிடம் பேசியுள்ளதாகவும் மஜோலா செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

(ம-5)

# ஸ்ரீ தலதா மாளிகை குண்டுத்தாக்குதல் வழக்கு விசாரணை மே 5 இற்கு ஒத்திவைப்பு

கண்டி,பெப்.21

கண்டி ஸ்ரீதலதா மாளிகை மீதான குண்டுத் தாக்குதல் சம்பவ வழக்கு மே மாதம் 5 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இந்த வழக்கு கண்டி மேல் நீதிமன்ற நீதிபதி சிசர டி ஆப்ரு முன்னிலையில் விசாரணைக்காக நேற்று எடுத்துக்கொள்ளப்பட்ட பின்னர் மே 5 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

1998 ஜனவரி 25 ஆம் திகதி தலதா மாளிகை மீது குண்டுத் தாக்குதல் நடத்த உதவி மற்றும் ஒத்தாசை புரிந்தார்கள் என்று நான்கு பேர் மீது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நான்கு எதிரிகளில் மூவர் மாத்திரமே நேற்று விளக்கமறியலில் இருந்து கண்டி மேல் நீதிமன்றத்துக்கு பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் சிறை அதிகாரிகளால் அழைத்து வரப்பட்டனர்.

முதலாவது எதிரியான சுப்பிரமணியம் (திருகோணமலை) இற்றை வரை கைது செய்யப்படவில்லை. ஏனைய மூன்று எதிரிகளுமான முத்துலிங்கம் சிவராஜா அல்லது மாஸ்ரர் (கரடியனாறு தமிழ் மகா வித்தியாலயம்), முத்துசாமிப்பிள்ளை தர்மலிங்கம் (பிரதான வீதி, திருகோணமலை), கிருஷ்ணசாமி ராமச்சந்திரன் (மகாவலித் தோட்டம், உடபேராணை) ஆகியோரே நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி அப்பாப்பிள்ளை விநாயகமூர்த்தியும், அரசுத் தரப்பில் புவனேகு அலுவிகாரையும் ஆஜராகினர்.

வழக்கை இந்த வாரமும் அடுதத வாரமும் விசாரணைக்கு எடுத்துக் கொள்வதில் தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினையை இரு பகுதியினரும் குறிப்பிட்டனர். எனவே, விசாரணைகது உகந்த ஒரு காலத்தை ஒதுக்குமாறும் நீதிபதியிடம் அவர்கள் பரிந்துரைத்தனர்.

எதிரிகளிடம் ஒப்புதல் மூலம் பெறப்பட்டதாகக் கூறப்படும் வாக்குமூலங்களின் அடிப்படையிலே இவ்வழக்கு தொடரப்பட்டிருப்பதாக எதிரிகளின் சட்டத்தரணி விநாயகமூர்த்தி சுட்டிக்காட்டினார். எதிரிகளுக்கு குற்றப பத்திரிகை வாசித்தல் மற்றும் நீதிமன்றக் கருமங்கள் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளில் மொழிபெயர்க்கப்படவேண்டி இருப்பதால் தொடர்ந்து நிர்ணயிக்கப்படும் திகதியில் இருந்து வழக்கை நடத்தலாம் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

சட்டத்தரணிகளின் பரிந்துரைகளை நீதிபதி ஏற்றுக்கொண்டார்.

இதனை அடுத்து வழக்கு விசாரணை மே 5 இற்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்த வழக்கில் மொத்தம் 108 பேர் சாட்சிகளாக அழைக்கப்படவுள்ளனர். 149 குற்றச்சாட்டுகள் நான்கு எதிரிகள் மீதும் சுமத்தப்பட்டிருக்கின்றன. 29 பொருள்கள் தடயப்பொருள்களாகவும் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இந்த வழக்கைப் பார்வையிட நேற்றும் பலர் நீதிமன்றம் வந்திருந்தனர்.

(ஐ-10)

## பெரிய....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஸிம்பாப்வே அணியில் கிரெய்க் வைஷாட் 5 மி.மீ. கூடுதலான அளவு துடுப்பைக் கொண்டு விளையாடுகிறார் எனக் கூறப்பட்டது.

இதையடுத்து, இந்திய - ஸிம்பாப்வே அணிகளுக்கு இடையே ஹராரேயில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்துக்கு முன்பு வீரர்களின் துடுப்பை சோதனை செய்ய மத்தியஸ்தர் கிளைவ் லொயிட் திட்டமிட்டார்.

ஐ.சி.சி. விதிகளின்படி போட்டிகளில 4.25 அங்குலத்திற்கு மேல் அகலமான துடுப்புக்களைக் கொண்டு விளையாடுவது நிருபிக்கப்பட்டால் குறித்த வீரருக்குத் தடை விதிக்கப்பட வாய்ப்புளளமை குறிப்பிடத்தக்கது.

இது குறித்து போட்டியின் பின்னர் கிளைவ் லொயிட் கருத்துத் தெரிவிக்கையில்:-

"சில இந்திய வீரர்களும், ஒரு ஸிம்பாப்வே வீரரும், உரிய அளவைவிட அகலமான துடுப்புகளைப் பயன்படுதுவது இந்திய - ஸிம்பாப்வே போட்டிக்கு முன் கண்டறியப்பட்டது. அதன் பின் அத் துடுப்புகள் மாற்றப்பட்டன.

இவ்விடயத்தில் மேலதிக நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப் படமாட்டாது.

இவ்விடயத்தில் வீரர்களிடம் தவறு இல்லை. துடுப்புத் தயாரிப்பாளர்களே தவறான அளவீட்டில் இவற்றைத் தயாரித்துள்ளனர்.'' - என்றார்.

இதேவேளை, உலகக் கிண்ணத் தொடரில் மேலும் திடீர சோதனைகள் நடத்தப்படும் என சர்வதேச கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

(ம-5)

## கங்குலிக்கு அழைப்பாணை...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வித்தியாசத்தில் மோசமான தோல்வி கண்டது.

இந்திய அணியின் மோசமான தோல்வியைத் தொடர்ந்து ஆக்ரோஷமான ரசிகர்கள் பல்வேறு நகரங்களில் தங்கள் கதாநாயக வீரர்களின் உருவப் படத்தை எரித்து எதிர்ப்புத் தெரிவித்தனர். சில வீரர்களின் வீடுகள மீதும் தாக்குதல் நடத்தினர்.

இதேவேளை, குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த ரசிகர்கள் மூன்று பேர் அங்குள்ள மாவட்ட நீதிமன்றம் ஒன்றில பொது நல வழக்குத் தொடர்ந்தனர்.

"இந்திய அணியின் மோசமான ஆட்டம் கோடிக்கணக்கான ரசிகர்களின மனதை புண்படுத்துகிறது. விளம்பரததில் விருப்பம் காட்டும் வீரர்கள் ஆட்டத்தில் அதிக ஆர்வம் காட்டுவதில்லை.

மேற்படி தோல்விக்குக் காரணமான இந்திய அணித்தலைவர் கங்குலி, கிரிக்கெட் சபைத் தலைவர் ஜக்மோகன் டால்மியா, விளையாட்டு அமைச்சக செயலாளர் ஆகியோரிடம் விசாரணை நடத்த வேண்டும். இனிவரும் போட்டிகளில் ஒழுங்காக விளையாடும் வகையில் புதிய திட்டங்களை வகுக்குமாறு அணித் தலைவருக்கும் சபைத் தலைவருக்கும் உத்தரவிட வேண்டும்" - இவ்வாறு மனுதாரர்கள் கோரியிருந்தனர்.

இந்த வழக்கு இணை சிவில் நீதிபதி சி.டி.தாவே முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. இது தொடர்பாக இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் கங்குலி, சபைத் தலைவர் ஜக் மோகன் டால்மியா, மத்திய அரசு விளையாட்டுத்துறைச் செயலாளர் ஆகியோருக்கு அறிவித்தல் அனுப்புமாறு நீதிபதி உத்தரவிட்டார். எதிர்வரும் 24 ஆம் திகதி அறிவித்தலில் தாங்களோ அலலது பிரதிநிதிகள் மூலமோ விளக்கம அளிக்கும்படி கூறப்பட்டுள்ளது.(ம-5)

# அரசுக்கு எதிராக ஜே.வி.பி.ஆர்ப்பாட்டம் பொலீஸார் கண்ணீர்ப்புகை பிரயோகம்

கொழும்பு,பெப்.21

அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியாவதை முன்னிட்டு அரசுக்கு எதிராக ஜே.பி.பியினர் நேற்று நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணி மீது பொலீஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இந்தக் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் கொள்ளுப்பிட்டி ஜேம்பீரிஸ் மாவத்தைக்கு அருகே இடம்பெற்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்களான ஜி.எல்பீரிஸ், மிலிந்த மொறகொட ஆகியோருக்கு எதிராகக் கோஷங்களுடன் பேலியகொடையில் இருந்து பிற்பகல் 3.15 மணிக்கு பேரணி ஆரம்பமானது.

பல்லாயிரக்கணக்கானோர் இந்தப பேரணியில் கலந்துகெண்டனர். லிப்டன் சுற்று வட்டாரத்தைக் கடந்து பேரணி அலரி மாளிகையை நோக்கிச் சென்றபோது கொள்ளுப்பிட்டி ஜேம்ஸ பீரிஸ் மாவத்தைக்கு அருகில் வைத்து கலகம் அடக்கும் பொலீஸாரால் இந்தப் பேரணி தடுத்து நிறுத்தப்பட்டது. அப்போது பொலீஸாருக்கும் ஆர்ப்பாட்டக் காரருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

அலரிமாளிகைக்கு அருகில் செல்ல முற்பட்ட ஆர்ப்பாட்டக்காரரை பொலீஸார தடுத்து நிறுத்தினர்.

பேரணியின் நிறைவில் ஜே.வி.பியின் எம்.பிக்கள் தலைமையில் கூட்டமும் இடம்பெற்றது.

ராஜா யாழ்ப்பாணம்
6 ஆவது வாரமாக
விஜய், ஸ்நேகா, மணிவண்ணன், வடிவேல்
வசீகரா
10.30, 2.30, 6.30
21 - 24 வரை
SPIDER MAN இரவு 9.30 மட்டும

நிறைஞ்சனாஸ் சங்கானை
பிரசாந், சிம்ரன் நடித்த
ஜேசூ (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (புதியநேரம்)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு (8.45) (புதிய நே.)
M.I.2

நாகம்ஸ் சுன்னாகம்
மாதவன் மீராஜஸ்மின்.ரகுவரன்.விவேக்
நடித்த
ரன் (ரீல்ஸ்)
காட்சிகள் தினசரி 11.00, 2.00, 6.30
நாளை முதல் "பாபா"

# யாழ்.நூலகத் திறப்பு சர்ச்சை: நாடாளுமன்றத்தில் இன்று விவாதம்

யாழ்.பொது நூலகத்தைக் குறித்த திகதியில் திறந்து வைப்பதில் ஏற்பட்ட சிக்கல்கள் தொடர்பான விவாதம் இன்று நாடாளுமன்றில் இடம்பெறவுள்ளது.

நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இந்த நாடாளுமன்ற விவாதத்தை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இந்த விவாதத்தை ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் ராமலிங்கம் சந்திரசேகரன் முன்மொழிந்தார்.

## எங்களது ஆட்டவலுவில்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அணியுடன் சிறப்பாக ஆடாமை என்பன போன்ற மோசமான செயற்பாடுகளால் இந்திய அணி மீது ரசிகர்கள் கடும் கோபம் கொண்டிருந்தனர். அதனால் கடும் அழுத்தத்துக்கு உள்ளாகி இருந்தார் கங்குலி. இந்த வெற்றி அவருக்கு சிறு ஆறுதலைக் கொடுத்துள்ளது. எனினும் இந்த ஆட்டதிலும் தாம் இன்னும் 25 முதல 30 ஓட்டங்களைக் குவித்திருக்க வேண்டும் என்று கங்குலி தெரிவித்தார்.

"நாம் ஒரு அருமையான ஆரம்பத்தைப் பெற்றோம். ஆனால், பின்னர் நடுவில் பல ஓவர்கள் நெருக்கடியில் சிக்கிக்கொண்டோம். நாம் பெற்ற 255 என்ற இலக்கு, ஒரு முயனால் முடிந்துவிடக்கூடிய ஒரு இலக்குத்தான். நாம் இன்னும் 30 ஓட்டங்களை மேலதிகமாகப் பெற முயன்றிருக்க வேண்டும். அப்போதுதான் நாம் இலகுவான - பாதுகாப்பான - வெற்றியைப் பெற்றிருக்க முடியும்'' - என்றார் அவர்.

சிம்பாப்வேயுடனான வெற்றிதாம் 'சுப்பர் சிக்ஸ்"'க்குள் செல்வதற்கு அவசியமான ஒன்று என்று கருத்துத் தெரிவித்த கங்குலி, அடுத்து வரும் இங்கிலாந்து மற்றும் பாகிஸ்தான் அணிகளுடனான ஆட்டங்களும் மிக முக்கியமானவையாக இருக்கும் என்று தெரிவித்தார். "வெற்றி மிக முக்கியமானது. இங்கிலாந்து சிம்பாப்வேக்கு வரவில்லை. அதனால் வெற்றிக்கான 4 புள்ளிகள் எமக்கு மிக முக்கியமானவை'' - என்றார் அவர்.

# புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மே.19 ஆம் திகதி ஆஜராக நோட்டீஸ்

## ஒப்பந்தத்துக்கு எதிரான மனுக்கள் மீது நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு,பெப்.21

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறையாவதை ரத்துச் செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மூன்று மனுக்களை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் ஆராய்ந்தது.

அம்மனுக்களில் இரண்டாவது பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகளின் இயக்கத தலைவர் வே.பிரபாகரன் எதிர்வரும் மே மாதம் 19 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராக நோட்டீஸ் பிறப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

தேசியப் பத்திரிகைகளிலும், தமிழ்ப் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கும் அறிவித்தல்கள் மூலம் இந்த நோட்டீஸ் பிறப்பிக்கப்படவேண்டுமெனவும் நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்த அறிவித்தல்களைப் பிரசுரிப்பதற்கான செலவை மனுதாரர்களே ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் நீதிமன்றம் தெரிவித்தது. சிங்கள தேசிய அமைப்பின் அதன் செயலாளர் பியசேன திஸநாயக்கா, ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா, சிஹல உறுமய சார்பில் சம்பிக ரணவக்க ஆகியோர் இம்மனுக்களைத் தாக்கல் செய்திருக்கின்றனர்.

மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவி ஷிரானி திலகவர்த்தன, கே.ஸ்ரீபவன், பி.விஜயரத்ன ஆகிய நீதிபதிகள் இம்மனுக்களை விசாரணைக்கு எடுத்துக் கொண்டனர். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட வே.பிரபாகரனும் சட்டமா அதிபரும் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றனர். (ஐ)

### புரிந்துணர்வு ஒப்பந்த ஓராண்டு பூர்த்தி:

# கிழக்கில் நாளை ஹர்த்தால் அனுஷ்டிப்பதற்கு அழைப்பு!

கொக்கட்டிச்சோலை,பெப்.21

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஒருவருடம் பூர்த்தியாகியும் தமிழ்மக்களுக்கு உரிய பலன் கிடைக்கவில்லை. இதனால், ஒருவருட பூர்த்தி தினமான நாளை கிழக்கு மாகாணத்தில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கவும்.

- இவ்வாறு மட்டு மாவட்ட பொது ஒன்றியம் அழைப்பு விடுத்து துண்டுப் பிரசுரம் விநியோகித்துள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஒருவருடமாகியும் தமிழ் பேசும் மக்களுக்கு உரிய பலன் எதுவும் கிட்டவில்லை.

உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் தமிழ் பேசும் மக்களின் நிலங்கள் அபகரிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஒருவருடமாக புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி எதுவும் நடைபெறவில்லை.

நெடுந்தீவுக் கடற்பரப்பில் கடற்படையினரின் அடாவடித்தனத்தால் மூன்று கடற்புலிகள் தமது உயிரை நீத்துள்ளார்கள்.

அண்மையில் மானிப்பாயில் பெண் போராளிகள் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதல் போன்ற அரச படைகளின் நடவடிக்கைகள் என்பன பாரிய மீறல் சம்பவங்களாகும்.

எனவே, இந்தத் தினத்தில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு தமிழ் மக்கள் கேட்கப்படுகின்றார்கள்.- என துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# பெண்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்தனர். கல்லூரி வாசலை மறித்து காவலிலும் நின்றனர்.

பொலீஸாரின் இத்தடையினால் மாதர் சங்கங்கள் பேரணியை நடத்துவதற்கு மேற்கொண்ட முயற்சிகள் கைகூடவில்லை. அதனால் கல்லூரி வளவுக்குள் திரண்டிருந்தோர் அங்கேயே தமது எதிர்ப்பைக் காட்டினர்.

ஆக்ரோஷமான கோஷங்களுடன் கண்டனமும் தெரிவித்தனர்.

"பெண்கள் சமுதாயம் இனிமேல் பொங்கி எழும், களத்தில் புறமுதுகிட்டவனே சமாதானம் வேண்டாமா?" என்ற வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளும் அங்கு காணப்பட்டன.

அமைதியான முறையில் ஒன்றுகூடி தமது எதிர்ப்பைக் காட்டும்படியும் கண்காணிப்புக் குழுவினரிடம் ஆட்சேப மகஜரைக் கையளிக்கும்படியும் க.துரைரட்ணசிங்கம் எம்.பி., மாதர் சங்கத்தினரைகேட்டுக்கொண்டார்.

அதனையடுத்து, அங்கு வந்த கண்காணிப்புக்குழுப் பிரதிநிதியிடம் மகஜர் கையளிக்கப்பட்டது. மாதர் சங்கங்களின் ஒன்றியத் தலைவி கண்மணி இரத்னவடிவேல் கூடியிருந்தோர் மத்தியில் மகஜரை வாசித்து கண்காணிப்புக்குழு உறுப்பினரிடம் கையளித்தார். (ஐ-10)

# கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாலை மாணவிகளின் கண்கவர் உடற பயிற்சி இடம்பெற்றது.

இந்த விழாவில் பங்குபற்ற வடக்கு - கிழக்கின் சகல மாவட்டங்களில் இருந்தும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீர, வீராங்கனைகள் கிளிநொச்சியில் திரண்டு இருக்கின்றனர்.

பெரு விளையாட்டு விழாவையொட்டி மஞ்சள், சிவப்பு கொடிகளாலும் மின்சார பல்புகளாலும் அலங்கரிக்கப்பட்டு கிளிநொச்சி நகரம் விழாக் கோலமாகக் காட்சியளிக்கிறது.

வன்னியின் பல பகுதிகளிலிருந்தும் குடாநாட்டிலிருந்தும் பெருந்திரளான பொதுமக்கள் நிகழ்ச்சிகளைக் காண கிளிநொச்சிக்கு படையெடுத்துச் சென்றுள்ளனர். (ஐ-3-8-ரி)

# 'பிக் - அப்'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மம் கிழக்கு பிரதேச சபையின் தலைவர் பூ.குணசிங்கம் காயமடைந்தார். அவரது 'பிக்-அப்' வாகனமும் சேதமடைந்தது.

இச் சம்பவம் குறித்து விசாரணை நடத்திய பொலீஸார் சேதமடைந்த 'பிக்-அப்' வாகனத்தைத் தடயப்பொருளாகப் பொறுப்பேற்று அது பற்றி நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்தனர்.

அந்த வாகனத்தை பிரதேச சபையின் உப தலைவராக இருந்த தம்மிடம் ஒப்படைக்கும்படி ஈ.பி.டி.பியைச சேர்ந்த யூ.எல்.ஏ.ரவி நீதிமன்றில் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

இந்த மனு மீதான விசாரணை சாவகச்சேரி நீதிவான் கந்தையா அரியநாயகம் முன்னிலையில் இடம்பெற்றது.

சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் தடயப்பொருளாக வைக்கப்பட்டிருக்கும் 'பிக்-அப்' வாகனத்துக்கான உரிமை ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு நீதிவான் மனுதாரருக்கு உத்தரவிட்டார்.

இந்த உத்தரவுக்கமைய மனுதாரர் ஆவணங்களை மன்றில் சமர்ப்பித்தார்.

எனினும், ஆவனங்களின்படி, வடக்கு புனரமைப்பு அதிகார சபையான 'RRAN' இற்கு இந்த 'பிக்-அப்' வாகனம் சொந்தமானது என இனங்கண்ட நீதிவான், அதனை மனுதாரரான யூ.எல்.ஏ.ரவிக்கு ஒப்படைப்பதற்கு அனுமதி மறுத்தார்.

'RRAN' அமைப்பு உரிமைகோரினால் இந்த வாகனத்தை அந்த அமைப்புக்கு வழங்குவது தொடர்பாகப் பரிசீலிக்க முடியும் எனவும் நீதிவான் குறிப்பிட்டார்.

அத்துடன், நீதிமன்ற உத்தரவு இன்றி வாகனத்தைப் பெற எவருக்கும் அனுமதி வழங்கக்கூடாது எனவும நீதிவான் சாவகச்சேரி பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

யாழ்.குடாநாட்டில் ஈ.பி.டி.பி., புளொட் அமைப்புக்களைச் சேர்ந்த பிரதேச சபைத் தலைவர்களுக்கு வழங்கப்பட்ட 12 'பிக்-அப்' வாகனங்களை தமது பதவி காலாவதியான பின்னரும் சபை நிர்வாகத்திடம் மீள ஒப்படைக்க அவர்கள் பின்னடித்து வருவது தெரிந்ததே. அவ்ற்றில் ஒன்றே இப்போது அவர்களால் மீளப்பெற முடியாத நிலையில் நீதிமன்றப் பிடியில் சிக்கியிருக்கிறது. (ஐ)

# தென்னாபிரிக்கப் பிரதிநிதிகள் தமிழ்ச்செல்வனுடன் பேச்சு

தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸின் முக்கிய தலைவர்களில் ஒருவரான றொயில் மேஜர் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் நேற்று கலந்துரையாடியுள்ளார்.

நேற்று விமானம் மூலம் யாழ்ப்பாணம் வந்த இவர், கண்டி வீதி வழியாக வாகனத்தில் கிளிநொச்சி சென்றார். அங்கு தமிழச்செல்வனுடன் கலந்துரையாடினார்.

ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் மூத்த உறுப்பினரான இவருடன் தேசிய காங்கிரஸின் மற்றொரு முக்கிய அங்கத்தவரான இஸ்மயில் ஏபிரகாமும வந்திருந்தார்.

இக்கலந்துரையாடலில் தமிழச்செல்வனுடன் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், செயலகத்தின் துணைப் பொறுப்பாளர் செல்வி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இருமணி நேரம் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் தற்சமயம் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகள குறித்து தென்னாபிரிக்க பிரதிநிதிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. (ஐ-3-ரி)

# புரிந்துணர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமான பரிமாணங்களைக் கொண்டது. தென்னாபிரிக்கா பிரச்சினைக்கும் எமது விவகாரத்துக்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன. நாங்கள் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்கின்றோமே தவிர தீர்வை அல்ல.

எங்களது வரலாறு, போராட்ட சூழ்நிலை என்பனவற்றுக்கு ஏற்ப நாங்கள் வேறுபட்டிருக்கின்றோம்.

*கேள்வி:* அடுத்தடுத்த கட்டப் பேச்சுக்கள் தென்னாபிரிக்காவிலும் நடைபெறுமா?

*தமிழ்ச்செல்வன்:* அடுத்த ஆறாவது கட்டப் பேச்சுக்கள் ஜப்பானில் தான் நடைபெறவுள்ளன. ஏழாவது கட்டம் எங்கு நடக்கும் என்பதை நோர்வேதான் தீர்மானிக்கும்.

*கேள்வி:* ஒரு விடுதலைப் போராட்டத்தை நடத்தி முடித்த நாடு என்ற ரீதியில் தென்னாபிரிக்க அரசு ஸ்ரீ லங்கா அரசுக்கும் தமிழர்களுக்கும் எவ்வாறான ஆதரவை வழங்கும் என எதிர்பார்க்கிறீர்கள்?

*தமிழ்ச்செல்வன்:* இனப்பிரச்சினை அங்கும் பெரும் வன்முறையாகக் கட்டவிழ்ந்து பெரும் யுத்தமாக விரிவடைந்தது. நீண்ட விடுதலைப் போராட்டம் நடந்த அந்த நாட்டில் ஒரு மாற்றம், தீர்வுக்கு இணக்கம் ஏற்பட்டது. அங்கு நடந்தவை போல ஆக்கிரமிப்பு, அடக்குமுறை, வன்முறை இங்கும் நடந்தன. நாங்கள் இப்போது அரசுடன் ஓர் இணக்கம் கண்டிருக்கிறோம். அதன் மூலம் தீர்வை எட்டுகின்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கின்ற எங்களுக்கு தென்னாபிரிக்க அனுபவங்கள் உதவியாக இருக்கும்.

*கேள்வி:* தென்னாபிரிக்காவின் சமஷ்டி முறை தொடர்பாக ஏதாவது ஆராயப்பட்டதா?

*தமிழ்ச்செல்வன்:* இன்று (நேற்று) நடைபெற்றது ஓர் ஆரம்பகட்ட சந்திப்பு. எல்லா விடயங்களையும் விரிவாகக் கலந்து பேசுவதற்கு இது மட்டும் போதாது. எங்களது அரசியல் குழு விரைவில் தென்னாபிரிக்காவுக்குச் செல்லவிருக்கின்றது. அந்த நேரத்தில் இது போன்ற விடயங்கள் குறித்து விரிவாக பேசுவதற்கு இயலும். (ஐ-ரி)

# போர் நிறுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லைத்தீவுக் கடலில் புலிகள் ஆயுதப் பயிற்சியில் ஈடுபடுவது, நெடுந்தீவுக் கடல் சம்பவம் ஆகியவை குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் பேச்சு நடத்துவர் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

## World Cup Score card - 2003



ரூ. 16910 முதல் தொலைக்காட்சிப் பெட்டிகள்
சிங்கர்
புதிய பார்வை
இல. 1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P:021-222 5408


நாணயச் சுழற்சி: ஹொலண்ட்

ஆட்டநாயகன்: டி.மார்டின் — *முடிவு: 75 ஓட்டங்களால் ஆஸ்திரேலியா வெற்றி*

### ஆஸ்திரேலியா

துடுப்பாட்டம்

| | | | |
|---|---|---|---|
| ஜி.மஹேறர் | c/வான்பன்ஞ் | b/லீட் | 26 |
| எம்.ஹைடன் | c/ஷிபேர்லி | b/லீட் | 33 |
| டி.மார்டின் | not out | | 67 |
| டி.லெமன் | not out | | 29 |
| *உதிரிகள்* | | | 15 |
| மொத்தம் | (36 ஓவர்கள்) | | 170/2 |

*களம் இறங்காதவர்கள்:* ஏ.சிமென்ஸ், ஏ.பிக்சல், ஜி.டி.மெக்ராத், ஐ.ஹார்வி, ஜே.கிலெஸ்பி, எம்.பெவன், ஆர்.பொண்டிங்

பந்துவீச்சு

ஷிபேர்லி: 7-0-42-0, லெப்றோவ்: 8-2-19-0, லீட்: 7-0-34-2
குளோபன்பர்க: 7-0-32-0, ஈஸ் மேஜர்: 5-0-17-0, வான் பன்ஞ்:2-0-20-0

### ஹொலண்ட்

துடுப்பாட்டம்

| | | | |
|---|---|---|---|
| வான் ட்ரூஸ்ட் | c/பிக்சல் | b/லெமன் | 23 |
| வான் பன்ஞ் | c/மார்டின | b/கிலெஸ்பி | 01 |
| ஷைன்டெறன்ட் | c/மஹேறர் | b/கிலெஸ்பி | 05 |
| வான்நூர்த் விக் | lbw | b/லெமன் | 13 |
| டி லீட் | c/மஹேறர் | b/பிக்சல் | 24 |
| ஸ்கொட் | lbw | b/பிக்சல் | 08 |
| ஷிபேர்லி | | b/ஹார்வி | 09 |
| குளோபன்பர்க் | c/பொண்டிங் | b/பிக்சல் | 09 |
| லெப்றோவ் | not out | | 14 |
| சிமிற்ஸ் | c/மஹேறர் | b/ஹார்வி | 00 |
| ஈஸ் மேஜர் | c/பொண்டிங் | b/ஹார்வி | 00 |
| *உதிரிகள்* | | | 15 |
| மொத்தம் | (30.2 ஓவர்கள்) | | 122/10 |

பந்துவீச்சு

மெக்ராத்: 3-1-10-0, கிலெஸ்பி: 3-0-7-2, லெமன்: 8-0-27-2, சிமென்ஸ்: 7-0-36-0, பிக்சல்: 5-0-13-3 ஹார்வி: 4.2-0-25-3

(ஆட்டத்தின் போது மழை குறுக்கிட்டதனால் இரு அணிகளுக்கும் பந்து வீச்சு 36 ஓவர்களாகக்குறைக்கப்பட்டது. எனினும் ஹொலண்டுக்கு டக்வோர்த் லூயிஸ் முறைப்படி 36 ஓவர்களில் 198 ஓட்டங்கள் வெற்றியிலக்காக நிர்ணயிக்கப்பட்டது.)


தென்னிந்தியாவில் இருந்து

முதன்முறையாக யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமிக்கு வருகைதந்துள்ள பரம்பரை சோதிடக் கலையில் புகழ்பெற்ற சிவபால ஜோதிடர்
ராஜகுருசாமி அவர்கள்
★ கைரேகை ★ ஜாதகம் ★ எண்கணிதம்
★ பெயர்ராசி ★ திருமணப்பொருத்தம்
இவற்றில் பலவருட அனுபவமும் புகழும் பெற்றவர்.
நேரம்: காலை 9.00 - மாலை 5.00 வரை
ராஜகுருசாமி
மிலஸ்ஸ் மல்ரி கொம்பிளக்ஸ்
60/1 (112), TEMPLE ROAD [Near ICRC], JAFFNA.
(14772)



இந்திய பரம்பரை ஜோதிடர்
அருள்வாக்கு

அம்பிகா அம்மா

* கைரேகை, ஜாதகம், தொழில் முன்னேற்றம், திருமணத் தடை, கல்வியில் பிரச்சினை, தீராத வியாதி போன்ற எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படும்.
26.02.2003 வரை மட்டும் தங்கி இருப்பார்கள்.
எல்லா நாளும் சாத்திரம் கூறப்படும்.
சந்திக்குமிடம்: மடோனா லொட்ஜ்
121, கஸ்தூரியார் வீதி,
(ஸ்ரீ முருகன் ஜுவல்லர்ஸ்/லிங்கன் கூல்பார் அருகில்)
யாழ்ப்பாணம்.
(14263)



இரசாயனவியல்
A/L 2004 Apr.
சேதன இரசாயனம்
ஆரம்பம்
22.02.2003
மாலை - 5.00
ஆசிரியர்:
A.சிவகுமார்
(I.Chem.C)
BRIGHTSMAN Institute
Brown Road - Jaffna.
(14550)



UNAITED INSTITUTE
KACHCHERI NALLUR ROAD.
ENGLISH
(SPOKEN WITH GRAMMAR)
By : Mr.BRITO
START ON : 21.02.2003, 4p.m.
E.S.L, G.A.Q., 1st in.Com.
By : Mr.BRITO
SAT., SUN. 2.00 p.m.
பட்டப்படிப்புக்கள் கல்லூரி
57/13, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(14773)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.02.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


# ஈரானில் பெரும் விமான விபத்து; 302 இராணுவத்தினர் உயிரிழப்பு

தெஹ்ரான்,பெப்.21

ஈரானின் தென்கிழக்குப் பகுதியில் உள்ளூர் போக்குவரத்தில் ஈடுபட்டிருந்த இராணுவ விமானம் ஒன்று வீழ்ந்து நொறுங்கியதில் இராணுவ உயர் அதிகாரிகள் பலர் உட்பட 302 பேர் உயிரிழந்தனர்.

மிக மோசமான காலநிலை காரணமாகவே இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

விமானம் வீழ்வதற்கு சற்று முன்னர் கட்டுப்பாட்டு நிலையத்துடன் பேசிய விமானி கடும் பனிமூகர் இருப்பதாகத் தெரிவித்தார். அவர் பேசிக் கொண்டிருக்கும் போதே விமானத்துடனான தொடர்புகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டன.




அந்த விமானம் ஷகீடனில் இருந்து கெர்மன் நோக்கிச் சென்று கொண்டிருந்தது. அதில் 18 விமானப் பணியாளர்கள் இருந்தனர். ஏனையவர்கள் அனைவரும் ஈரானிய பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

உள்ளூர் நேரப்படி நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணிக்கு விமானத்துடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. அதன் பின்னர் விமானத்தைத் தேடும் படலம் தீவிரமாக நடந்தது. மீட்புப் பணியாளர்கள் நேற்று விமானத்தின் சிதைவுகளைக் கண்டு பிடித்தனர். ஆனால், விமானத்தில் இருந்தவர்களில் எவரும் உயிருடன் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் எவையும் இல்லை என்று அவர்கள் கூறுகின்றனர்.

விமானம் விபத்துக்குள்ளான போது, அந்தப் பகுதியில் கடும் பனிப்பொழிவு இருந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

விபத்துக் குறித்து விமான நிலைய அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில், கட்டுப்பாட்டு நிலையத்துடன் விமானி இறுதியாகப் பேசும் பொழுது "நான் விமான நிலையத்தை எட்டுவதற்கு முயன்றுகொண்டிருக்கின்றேன். தரையிறங்குவதற்கு ஏற்றவாறு காலநிலை நன்றாக இருக்கின்றதா? என்று கேட்டார். அந்தச் சமயத்தில் அவரது தொடர்பு திடீரென இழக்கப்பட்டது" - என்று அவர் கூறினார்.

மலைகள் நிறைந்த அந்தப் பகுதியில் மலை முகடுகள் பனியால் மூடப்பட்டிருக்கலாம். அதனால் விமானம் அதில் மோதி விபத்துக்குள்ளாகி இருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

ஈரானின் பெருந்தலைவர் ஆயத்துல்லா கொமேனி கெர்மனுக்கு விஜயம் செய்வதற்கான முன்னேற்பாடுகளை மேற்கொள்வதற்காகவே இந்தப் படையினர் விமானத்தில் சென்று கொண்டிருந்தனர். (ம)

## போரை எதிர்க்கும் மொடல் அழகிகள்

லண்டன்,பெப்.21

ஈராக் மீது போர் தொடுக்கக் கூடாது என்று பல்வேறு நாடுகளில் எதிர்ப்புக் கிளம்பி வருகின்றது. அமெரிக்காவுக்கு இங்கிலாந்து துணை போகக் கூடாது என்று இங்கிலாந்து பிரதமர் ரொனி பிளயரையும் வற்புறுத்தி வருகிறார்கள்.

ஆனால், இதை ரொனி பிளயர் பொருட்படுத்தவில்லை. இதனால் மாடல் அழகிகள் களத்தில் இறங்கி உள்ளனர். லண்டனில் உள்ள ஆடைத் தயாரிப்பு நிறுவனம் புதுவித 4 ஷேர்ட்டுக்களைத் தயாரித்து வருகின்றது. ரொனி பிளயருக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், போர் வேண்டாம் என்று வற்புறுத்தியும் அந்த 4 ஷேர்ட்டுக்களிலும் வாசகங்கள் உள்ளன. மொடல் அழகிகள் இதை அணிந்து வருவதைப் பார்த்து லட்சக்கணக்கானவர்கள் இவற்றை வாங்க ஆரம்பித்து இருக்கிறார்கள். (ம)

உலக அரங்கில்

# பாக். விமானப்படைத் தளபதி விமான விபத்தில் உயிரிழப்பு

## மேலும் 17 பேரும் பலியாகினர்!

பாகிஸ்தான் இராணுவத்துக்குச் சொந்தமான ஒரு விமானம் நேற்றுக் காலை விமான நிலையத்தில் இருநது புறப்பட்டுச் சென்ற சிறிது நேரத்தில் விபத்துக்குள்ளானது. அதில் விமானப் படைத் தளபதி உட்பட 17 பேர் உயிரிழந்தனர்.

இஸ்லாமாபாத் அருகே உள்ள சாக்லா விமானப்படைத்தளத்தில் இருந்து பஞ்சாப் மாநிலம் கோகாத் விமானப் படைத்தளம் நோக்கிச் சென்று கொண்டிருந்த போது, இடையில் விபத்துக்குள்ளாகி வீழ்ந்து நொறுங்கியது.

மேற்குப் பாகிஸ்தானில் உள்ள சிறிய கிராமம் ஒன்றில் விமானம் வீழ்ந்து நொறுங்கியது. அதில் பயணம் செய்த விமானப்படைத் தளபதி முஷாரப் அஷ்மீர் உட்பட 17 படையினரும் அந்த இடத்திலேயே பலியாகினர்.

மோசமான காலநிலையாலேயே இந்த விபத்து நிகழ்ந்ததாக அதிகாரிகள் கூறினர். எனினும், இதில் தீவிரவாதிகளின் சதி வேலை ஏதாவது இருக்கின்றதா என்பது குறித்து விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. விபத்து நடந்த இடத்துக்கு உடனடியாக மீட்புப் பணியாளர்கள் அனுப்பப்பட்டுள்ளனர்.

விமானப்படைத் தளபதி உயிரிழந்தமை பாகிஸ்தான் அதிபர் முஷாரப்புக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கின்றது. (ம)

# புதிய தலைமுறை அணுவாயுதம் தயாரிக்க அமெரிக்கா முயற்சி!

அமெரிக்கா பலம்வாய்ந்த ஆழமான பதுங்கு குழிகளைத் தாக்கி அழிக்கக்கூடிய புதிய தலைமுறை சிறிய அணு ஆயுதங்களைத் தயாரிப்பதற்கான திட்டங்களை வகுத்துவருகின்றது. அமெரிக்க உயர் அதிகாரிகள் இந்தத் தகவலை உறுதிப்படுத்தியுள்ளனர்.

ஆழமான நிலத்தடி பதுங்குகுழிகளில் மறைத்து வைக்கப்பட்டுள்ள இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்களை அழிப்பதற்கு இத்தகைய புதிய தலைமுறை அணுவாயுதங்கள் தேவை என்று வாஷிங்ரன் கருதுகின்றது.

தனக்கு ஆபத்தான இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்களை வைத்திருக்கும் நாடுகளின் மிரட்டல்களைச் சமாளிப்பதற்காகவே அதிபர் புஷ் இந்த புதிய தலைமுறை அணுவாயுதங்களை உற்பத்தி செய்வதற்குத் தீர்மானித்திருக்கின்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் புதிய அணுவாயுதத்தை உருவாக்குவது குறித்து ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று அமெரிக்க பாதுகாப்புத் தலைமையகமான பென்ரகனைச் சேர்ந்த சிரேஷ்ட அணு விஞ்ஞானி தலைமையில் இரகசியமான முறையில் நடைபெற்றுள்ளது. அமெரிக்க இணையத் தளம் ஒன்று இது தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளது. இதில் புதிய அணுவாயுதங்களைத் தயாரிப்பது குறித்து ஆராயப்பட்டுள்ளது. அதனை எப்படி சோதனை செய்வது என்பது குறித்தும் விவாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இந்த யோசனையை அமெரிக்க காங்கிரஸிடமும் மக்களிடமும் எப்படிக் கொண்டுசெல்வது என்பது குறித்தும் அங்கு கூடியிருந்தவர்கள் அலசியிருக்கின்றனர்.

ஈராக் தன்னிடம் இருக்கும் இரசாயன ஆயுதங்களையும் உயிரியல் ஆயுதங்களையும் நிலத்தடி பதுங்கு குழிகளில் உருமறைப்புச் செய்து வைத்திருக்கின்றது என்று அமெரிக்கா குற்றஞ்சாட்டிவரும் வேளையில், அமெரிக்காவின் இந்த புதிய அணுவாயுதத் திட்டம் குறித்த செய்தி வெளியாகி உள்ளது. (ம)

# தீவிரவாதிகள் கண்மூடித்தனமாக சுட்டதில் 14 கிராமவாசிகள் பலி!

மணிலா,பெப்.21

பிலிப்பைன்ஸின் தென்பகுதித் தீவான மின்டானோவிலுள்ள கிராமம் ஒன்றில் மோரோ தீவிரவாதிகள் திடீரெனப் புகுந்து நடத்திய தாக்குதலில் கிராமவாசிகள் 14 பேர் பலியாகினர்.

கிராமத்துக்குள் புகுந்த தீவிரவாதிகள் கிரனேட் தாக்குதல்களை நடத்தியதுடன், கண்டபடி துப்பாக்கிப் பிரயோகமும் செய்தனர்.

கடந்த வாரம் இந்தப் பகுதியில் பிலிப்பைன்ஸ் இராணுவம் தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது. அதற்கான பதிலடியாகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மோரோ இஸ்லாமிய விடுதலை முன்னணி என்ற அமைப்பே இந்தத் தாக்குதலை நடத்தியதாக இராணுவத்தினர் தெரிவிக்கின்றனர்.

இது தவிர தீவின் நகரப் பகுதியில் நடந்த மற்றொரு தாக்குதலில் குறைந்தது ஒருவர் கொல்லப்பட்டார் என்று பொலிஸார் கூறினர். நகரின் சந்தைக்கு அருகில் குண்டு ஒன்று வெடித்ததில் இந்த அனர்த்தம் நிகழ்ந்தது. இந்தத் தாக்குதலையும் மோரோ தீவிரவாதிகளே நடத்தினார்கள் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.


மோரோ தீவிரவாதிகளின் பலமான நிலை என்று கருதப்படும் மின்டோனா தீவில் கடந்த வாரம் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது 140இற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக இராணுவ அதிகாரிகள் கூறுகின்றனர். இதனால் ஆத்திரமடைந்தே அவர்கள் இந்தப் பழிவாங்கும் தாக்குதல்களை நடத்தியதாக அறிவிக்கப்படுகின்றது.

ஆனால், மோரோ தீவிரவாத இயக்கத்தின் பேச்சாளர் தம் மீதான இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ளார். அதேநேரம் 50 தீவிரவாதிகள் கிராமத்துக்குள் புகுந்து கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததுடன், கிரனேட் தாக்குதலையும் நடத்தியதாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்திருக்கின்றார்.

நீண்டகாலமாகத் தொடரும் இந்த கிளர்ச்சியால் நூற்றுக்கணக்கானவர்கள் இதுவரை உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)




ஈராக்குக்கு எதிராக அமெரிக்கா போர் தொடுப்பதை கண்டித்து உலகெங்கும் ஆர்ப்பாட்டம் பேரணிகள் இடம்பெற்றுவருகின்றன. அவ்வாறு இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றில் அதிபர் புஷ்ஷையும் அவருக்கு ஆதரவாகச் செயற்படும் அவுஸ்திரேலிய பிரதமர் ஜோன் கவாட்டையும் கேலி செய்யும் வகையில் அமைந்த உருவ பொம்மைகளை இங்கு காண்கிறீர்கள்.



அமெரிக்கா உருவாக்குவதற்கு திட்டமிட்டுள்ள புதிய தலைமுறையைச் சேர்ந்த அணுஆயுதத்தின் செயற்பாட்டு மாதிரியை விளக்கும் படம் இது.

நிலத்துக்கு கீழே மிக ஆழமான பகுதியில் அமைந்திருக்கும் இலக்கை நிலத்தை ஊடறுத்துச் சென்று தாக்கி அழிக்க வல்ல திறனை அந்த அணு ஆயுதம் பெற்றிருக்கும். ஏவுகணைகளிலும் விமானங்களிலும் எடுத்துச் சென்று தாக்கும் வகையில் அது அமைந்திருக்கும்.

புதிய கொம்ப்யூட்டர் பாடநெறிகள்



Diploma in Computer Software Engineering

Professional Diploma in Graphic Design

Diploma in Web Multimedia

Diploma in Visual Programming

அனைத்து பாடநெறிகளுக்கும் இலவச பாடநூல்கள்

ASIAN COMPUTERS
2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
Tel : 021-222 5677

# வர்த்தகத்தில் வீழ்ச்சி கண்டபோதும் சளைக்காமல் உழைத்து உயர்ந்தவர்

## "அரலிய இம்பெக்ஸ்" ராஜ்குமார் பெற்ற புதிய சந்தை வாய்ப்புகள்

*கேள்வி:-* அரலிய விற்பனை இலட்சனையின்கீழ் சந்தைப்படுத்தப்பட்ட 'ரின்மீன்' அதிக பிரபல்யம் பெற்றது. இதுவரையும் நீங்கள் கடந்துவந்த பாதையை ஒருமுறை மீட்டுக் கூற முடியுமா?

*பதில்:-* எனது பெற்றோர் வர்த்தகத்துறையுடன் தொடர்புடையவர்கள் அல்லர். எனது தந்தை சுகாதார திணைக்களத்தில் பணியாற்றினார்.

மாத்தளை புனித தோமஸ் கல்லூரியில் கல்வி கற்கும்போது, வைத்தியராக வருவதே எனது இலட்சியமாக இருந்தது. ஆனால், அரசியல் காரணங்களால் எனது பெயர் அந்தப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டது. அத்துடன், எனது எதிர்காலமும் மாற்றப்பட்டது. 'மயூர காமண்ட்' என்ற நிறுவனத்தில் நான் எழுதுவினைஞராகச் சேர்ந்தேன். அப்போது எனக்கு மாதாந்த சம்பளம் 330 ரூபா மட்டும் தான். அங்கு கடினமாக உழைத்தேன்.

பின்பு களஞ்சியப் பொறுப்பாளராகப் பதவி உயர்வும் 5,500 ரூபா சம்பள உயர்வும் கிடைத்தது. எனினும், அந்நிறுவனத்தில் ஏற்பட்ட சில சிக்கல்களால் நிறுவனம் மூடப்பட்டது.

அதனால், பிரான்ஸ் லங்கா நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்தேன். அங்கு விற்பனை முகவராக பணியாற்றியதால் 3,000 ரூபா மட்டுமே சம்பளமாகக் கிடைத்தது. அந்நிறுவனம் பழச்சாறு ஒன்றை இறக்குமதி செய்தது. அந்தப் பழச்சாறு காரமானது என்பதால் கடைகள் அதனை வாங்க மறுத்துவிட்டன. எப்படியோ கடை முதலாளிமாரை சம்மதிக்க செய்து ஓரிரு போத்தல்களையாவது விற்பனை செய்தேன்.

அதன் பின்பு, அந்நிறுவனம் கருவாடு இறக்குமதி செய்தது. அதில் ஒரு தொகையை சந்தைப்படுத்த முடியாமல் இருந்தது. அந்தக் கருவாட்டை விற்கும் பொறுப்பு எனக்கு கொடுக்கப்பட்டது. நான் அந்தக் கருவாட்டை எடுத்துக் கொண்டு நாடு முழுவதும் சென்றுவிற்றேன்.

இத்தகைய சூழ்நிலையில் அந்நிறுவனத்தினால் புறக்கோட்டையில் கடை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. அதன் நிர்வாகப் பொறுப்பு என்னிடம் தரப்பட்டது. வியாபார நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக அதுவும் மூடப்பட்டது. அக்கடைக்கு சாமான்களை விற்பனை செய்தவர்கள் பணத்திற்காக என்னிடமே வந்தனர். என்னிடம் பணம் இருக்கவில்லை. இந்த நிலைமையை நான் அவர்களுக்குத் தெளிவுபடுத்தினேன். எனது சொந்த வியாபாரம் ஒன்றை ஆரம்பிக்க அவர்களிடமே உதவி கேட்டேன். சிலர் உதவி செய்தனர். ஆனால், அதிகமானோர் புறக்கணித்துவிட்டனர்.

*கேள்வி:-* உங்கள் சொந்த வியாபாரத்தை ஆரம்பிக்க யார் உதவினார்கள்?

*பதில்:-* புதிய ஒரு வியாபாரத்தை ஆரம்பிக்கும்போது பல பொருள்களை கடனுக்குப் பெற நேர்ந்தது. அப்போது கொழும்பு கறுவாத் தோட்ட செலான் வங்கி கிளையில் எனக்கு அறிமுகமான அதிகாரி ஒருவர் இருந்தார். என்னை வியாபாரத்தை ஆரம்பிக்குமாறும் அவர் எனக்கு உதவுவதாகவும் கூறினார்.

அப்போது 'அரலிய' என்ற விற்பனைப் பெயரில் 1989 ஆம் ஆண்டில் இந்த வியாபாரத்தை ஆரம்பித்தேன். 'ரின்மீன்' கண்டேனர் ஒன்றை இறக்குமதி செய்யும் தேவை எமக்கு இருந்தது.

அதற்குத் தேவையான 10 லட்சம் ரூபா கடனை 'செலான் வங்கி' யிலிருந்து இலகுவாகப் பெற்றுக் கொள்ளமுடிந்தது. அதனால், இரண்டு வாரங்களுக்குள் 'ரின்மீன்' கண்டேனரை இறக்குமதி செய்தோம். அதன் பின்பு படிப்படியாக ஒருநாளைக்கு 20-25 கண்டேனர்களை இறக்குமதி செய்யும்நிலை ஏற்பட்டது. அதே போன்று சந்தையிலும் அரலிய 'ரின் மீன்'களுக்கு நல்ல கேள்வி ஏற்பட்டது. அதன் பின்பு வேறு பல உலர் உணவுகளையும் அதே விற்பனை இலட்சனையின் கீழ் சந்தைப்படுத்தினோம்.

*கேள்வி:-* நீங்கள் தற்போது ஏற்றுமதியிலும் ஈடுபட்டிருக்கிறீர்கள். அது பற்றிக் கூறமுடியுமா?

*பதில்:-* ஆம். ஆரம்பத்தில் நாம் இறக்குமதியில் ஈடுபட்டிருந்தோம். ஆனால், தற்போது எமது வியாபாரத்தின் போக்கு மாறிவிட்டது. உள்நாட்டு உணவுப் பொருள்களை நாம் இப்போது அவுஸ்திரேலியா, கனடா, டுபாய், இத்தாலி மற்றும் இலங்கையர்கள் வசிக்கும் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றோம். உள்நாட்டு உணவுகளைத் தயாரித்து, அவற்றின் தரத்தைப் பேணுவதில் எனது மனைவி பொறுப்பாக இருக்கின்றார். அது வியாபார நடவடிக்கைகளில் எனக்கு பெரும் ஒத்துழைப்பாக உள்ளது.

*கேள்வி:-* உங்களுக்கு முதலில் 'செலான் வங்கி' உதவி வழங்கியதாகக் கூறினீர்கள். அதன் பின்பு அரசாங்கத்தினதும் ஏனைய வங்கிகளினதும் ஒத்துழைப்பு எவ்வாறு இருந்தது?

*பதில்:-* உண்மையிலேயே நான் உச்சிக்கே சென்று கீழே வீழ்ந்தவன். 1999 - 2000 பகுதியில் எனக்குப் பாரிய அளவிலான வீழ்ச்சி ஏற்பட்டது. வியாபாரத்தைத் தொடர்ந்து நடத்தமுடியாத நிலை ஏற்பட்டது. நான் அடிமட்டத்திற்கே வீழ்ந்துவிட்டேன். அதிலிருந்து மீளமாட்டேன் என்று பலர் நினைத்தனர். அப்போது நான் தனித்துவிடப்பட்டேன். நான் நாட்டைவிட்டே ஓடிவிடுவேன் என்று சிலர் நினைத்தார்கள். சில வங்கிகள் கூட எனக்கு பிரச்சினைகளை ஏற்படுத்தின. ஆனால், செலான் வங்கி அப்படிச் செய்யவில்லை. அவர்கள் எனக்கு உதவி செய்தார்கள். எனது வியாபாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப தைரியம் தந்தார்கள். இப்போது எனக்கு செலான் வங்கி 2 கோடி ரூபா கடனை வழங்கியது.

அதனை நான் இலகு முறையில் திருப்பிச் செலுத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டது. அதன்மூலம் நான் மேலும் தைரியமடைந்தேன். எனது வியாபாரத்தை மீண்டும் கட்டியெழுப்பினேன். அதற்காக செலான் வங்கிக்கு நான் எனது நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றேன். அவ்வாறு வேறு எவருமே உதவி செய்ததில்லை.

*கேள்வி:-* வியாபாரத்தில் வீழ்ச்சி அடைந்து மீண்டும் எழும்பிய உங்களின் எதிர்காலத் திட்டங்கள் என்ன?

*பதில்:-* நாம் தற்போது புதிய சந்தை வாய்ப்புக்களைத் தேடி செல்கிறோம். அதேபோல் எமது ஏற்றுமதிகளில் ஏதாவது புதியதொன்றை அறிமுகப்படுத்த முயற்சி செய்கின்றோம். கடந்த மாதமும் இவ்வாறு புதிய பொருள் ஒன்றை ஏற்றுமதி செய்தோம். அதேபோல இஞ்சாட் கருவாடு வகைகளையும் ஏற்றுமதி செய்ய முயற்சி எடுத்து வருகின்றோம்.

- இவ்வாறு கூறினார் எம்.ராஜ்குமார்.



ரீ.என்.எல்.தொலைக்காட்சி 'நேருக்கு நேர்' நிகழ்ச்சியில் தொழில் அதிபர் எம்.ராஜ்குமாரை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும், 113 கம்பனிகளைக் கொண்டு சிலிங்கோ குரூப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி காண்கின்றார்கள்.

**ரீ.என்.எல். தொலைக்காட்சியின் வர்த்தக ஸ்பெஷல் - நேருக்கு நேர் நிகழ்ச்சியில் கடந்த 18ஆம் திகதி தோன்றி, தனது தொழில் முன்னேற்றம் பற்றி விளக்கினார் தொழில் அதிபர் எம்.ராஜ்குமார்.**

**வர்த்தக ஸ்பெஷல்**

**தனக்கென ஒரு வர்த்தகத்தை ஆரம்பித்து உச்சத்திற்கே சென்றார் அவர். திடீரென வீழ்ச்சி ஏற்பட்டது. ஆயினும் கலங்கவில்லை. மீண்டும் ஒரு எழுச்சியை ஏற்படுத்திக் கொண்டார். அவர்தான் அரலிய இம்பெக்ஸ் நிறுவனத்தின் அதிபர் எம்.ராஜ்குமார்.**

**ஒரு சாதாரண எழுதுவினைஞராக தொழிலை ஆரம்பித்த ராஜ்குமார், தொழில் ஏற்ற இறக்கங்களின் மத்தியில் இன்று உலர் உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்கிறார். அத்துடன் புதிய சந்தை வாய்ப்புகளையும் தேடிக் கொண்டிருக்கிறார்.**

**'அரலிய' நிறுவனத்தின் தகரத்தில் அடைக்கப்பட்ட மீன்வகை, வாடிக்கையாளர் மத்தியில் மிகவும் பிரபல்யம் பெற்றது. தனது வாழ்க்கையிலும் வர்த்தகத்துறையிலும் ஏற்பட்ட ஏற்றத் தாழ்வுகளை விவரிக்கின்றார் எம்.ராஜ்குமார்.**

**ரீ.என்.எல். தொலைக்காட்சியில் தொழில் அதிபர் எம்.ராஜ்குமாரை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும், 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குரூப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி கண்டனர்.**

**செவ்வியை இங்கே படித்துப் பாருங்கள்.**

## சிவராத்திரி விழா கொண்டாட ஏற்பாடு

இந்து கலாசார அமைச்சின் யாழ். பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் திருநெல்வேலி சிவன் கோயிலில் எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை மகா சிவராத்திரிவிழா கொண்டாடப்படவுள்ளது.

அன்றையதினம் பகல் முழுதும் ஆலயத்தில் அகண்டநாம பஜனை இடம்பெறும். இரவு விசேட பூஜைகளைத் தொடர்ந்து விசேட சொற்பொழிவுகள், பட்டிமன்றம் மற்றும் வில்லிசை முதலிய கலைநிகழ்வுகள் இடம்பெறும் என அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் தெரிவித்தார். (எ-10)



வேல் அமுதன் எழுதிய சிறுகதைத் தொகுப்பு நூல் 'ஓர்மம்' அண்மையில் இணுவில் தெற்கு பரராச சேகரப்பிள்ளையார் கோவிலடி மத்திய நூல் நிலையத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

நூலின் பிரதியை அண்ணா கோப்பி தொழில் அதிபர் க.பொ.நடராசாவிடமிருந்து ஓய்வுபெற்ற ஆசிரியர் நா.சின்னராசா பெற்றுக்கொள்வதனைப் படத்தில் காணலாம். நடுவில் நூலாசிரியர் வேல் அமுதன் காணப்படுகிறார். (எ)

## நிவாரண விநியோகத்திற்கான பால்மாவுக்குப் பதிலாக பிறபொருள்கள்

### கொள்வனவு செய்ய செயலகம் அனுமதி

வலி.வடக்கு,பெப்.21

யாழ்.மாவட்டத்தில் இடம்பெயர்ந்தோர் நிவாரணத்திற்கு வழங்கப்படும் பால்மாவுக்குப் பதிலாக வேறு பொருள்களைப் பொதுமக்கள் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.செயலக புனர்வாழ்வுப் பகுதியினரால் இது சம்பந்தமான அறிவுறுத்தல் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இடம்பெயர்ந்தோர் நிவாரணத்திற்கு வழங்கப்பட்ட பால்மா பைக்கற்றுக்கள் உரியவர்களினால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த காலங்களில் நிவாரணத்துக்கு மக்களுக்குப் பல்வேறு வகையான மா பைக்கற்றுக்கள் வழங்கப்பட்டதுடன், ஒரே நேரத்தில் தேவைக்கு அதிகமான பால்மா பைக்கற்றுகளும் வழங்கப்பட்டுவந்தன.

இத்தகைய செயற்பாடுகள் காரணமாக இப்பால்மா பைக்கற்றுக்கள் தேநீர் கடைகள், நடைபாதை வியாபாரிகள், கடைகளுக்கு மிகவும் குறைந்த விலைக்கு உரியவர்களினால் விற்பனை செய்யப்பட்டுவந்தமை தெரிந்தது.

இப்புதிய முறையின்கீழ் பால்மா தொகைக்கு வேறு உப உணவுப் பொருள்களைப் பொதுமக்கள் கொள்வனவு செய்யமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-86)

## பாதீனியத்தை அழிப்பதில் விவசாயிகள் அக்கறையின்மை

தோட்டங்கள், வயல் நிலங்களில் பயிர்களினூடே வளர்ந்து காணப்படும் பாதீனியத்தை ஒழிக்க மருந்து தெளித்தால் பயிர்களும் பாதிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

பயிர்களினூடே வளரும் பாதீனியம் பயிருக்கு போடப்படும் உரம் மற்றும் நீர்ப்பாசனம் போன்றவற்றால் செழித்து வளர்கின்றது. பயிர்களுக்கு நீர்ப்பாச்சும் வேளையில் ஈரத்தோடு அவற்றை கைகளால் வேருடன் பிடுங்கி அழிக்க வேண்டும் ஆனால், விவசாயிகள் அவற்றைப் பிடுங்கி ஒழிப்பதில் அக்கறை செலுத்துவதில்லை.

பாதீனியம் செடியை பூ பூப்பதற்கு முன்னர் அழித்து விடவேண்டும். என விவசாய திணைக்கள அதிகாரிகள் எடுத்துக் கூறியுள்ளனர். புன்னாலைக் கட்டுவன், ஈவினை, நவக்கிரி, உரும்பிராய் போன்ற இடங்களில் பெருமளவில் பாதீனியம் வளர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-152)

# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

## உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல.2439402 இருந்து
2458283 வரை
சீட்டிழுப்பு இல. 1377
திகதி 19.02.2003

## வெற்றி எண்கள்

**10 23 39 52 53**

போனஸ் எண் **15**

## ஜக்பொட் பரிசு

## ரூபா.1,500,000/- வெல்லப்பட்டது.

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | 01 | 1,500,000/- | 1,500,000/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 03 | 100,000/- | 300,000/- |
| 4 | 118 | 10,000/- | 1,180,000/- |
| 3 | 5,959 | 500/- | 2,979,500/- |
| 2 | 89,423 | 20/- | 1,888,460/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 10ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 121,130 | 10/- | 1,211,300/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.9,169,260/-

இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்

## ரூபா.1,500,000/-

தொடர் இல. 3438128க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2003 பெப்ரவரி 22ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2443823-5-14
2453688-6-88
2454035-9-20
2454458-6-88
2453182-3-39

PHOENIX O&M

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 450 |
| திகதி | 18.02.2003 |

டிக்கட்டின் நிறம் - நீலம்
செல்லுபடியாகும் தொடர் இல.
4761302-4776354

வெற்றி இலக்கங்கள் **03 07 11 14**

லக்கினம் கடகம்

ஜக்பொட் பரிசு
ரூபா. 1,000,000/-
வெல்லப்படவில்லை

இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 1,744,750/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ) |
|---|---|---|---|
| 1 இல | 333,482 | 10 | 3,334,820 |
| 2 இலக்கங்கள் | 30,650 | 20 | 613,000 |
| 1 இல + லக்கினம் | 30,261 | 30 | 907,830 |
| 2 இல + லக்கினம் | 2,787 | 100 | 278,700 |
| 3 இலக்கங்கள் | 811 | 500 | 405,500 |
| 3 இல + லக்கினம் | 76 | 5,000 | 380,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | - | 1,000,000 | - |
| மொத்தம் | 398,071 | - | 6,319,850 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 6,319,850/-

தொடர் இல. 5733557க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2003 பெப்ரவரி 21ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

4774361-3-01
4784280-5-27
4768245-3-11
4761930-5-76
4767268-7-35

PHOENIX O&M

# யாழ் வர்த்தகர்களுக்கும் விவசாயிகளுக்கும் ஓர் பொன்னான வாய்ப்பு!

டிமோ Dimo நிறுவனம் டாடா மற்றும் மகேந்திரா வாகனங்களுக்கு தனது உத்தியோகபூர்வ வட பிராந்திய முகவராக ஏ.எம்.டி.ரான்ஸ்போட் சேவிசஸ் நிறுவனத்தினை நியமித்துள்ளதை பெருமையுடன் அறிவிக்கின்றது.

## கோலாகலமான திறப்புவிழா




| | | |
|---|---|---|
| நேரம் | : | காலை 10.30 |
| நாள் | : | 22-02-2003 |
| இடம் | : | 415, கோவில் வீதி, நல்லூர் |

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்




TATA Mahindra



**A M T Transport Services**
Point Pedro Road, Irupalai Junction, Kopai.
Tel: 077-7788473, 077-7636220

dimo **Diesel & Motor Engineering Co. Ltd(Dimo)**
65, Jettawana Road, Colombo 14.
Tel: 01-449797,01-332810/077-7742616

# விளையாட்டு நிகழ்வுகள்

தென்மராட்சி,பெப்.21

உசன் இராமநாதன் மகாவித்தியாலய மெய்வன்மைப் போட்டி இனறு வெள்ளிக்கிழமை பி.ப. 1.00 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் செ.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக தென்மராட்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் கோ. வரதராசமூர்த்தி கலந்துகொள்வார். (ஒ-5-111)

☆ ☆ ☆

தென்மராட்சி,பெப்.21

மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலய மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அதிபர் சி.கந்தசாமி தலைமையில் நடைபெறும். (ஒ-117)

☆ ☆ ☆

ஊர்காவற்றுறை,பெப்.21

ஊர்காவற்றுறை சிறிய புஸ்ப மகளிர் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 1.30மணியளவில் கல்லூரி மைதானத்தில் பாடசாலை அதிபர் ரி.செபமாலை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தீவக கல்வி வலய நிர்வாக உத்தியோகத்தர் கலாபூஷணம எஸ்.மெறராஸ்மெயில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ஒ-16)

☆ ☆ ☆

மல்லாகம்,பெப்.21

ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் நா.சிவசிதம்பரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக முன்னாள் உடுவில் கல்விக் கோட்டப் பணிப்பாளர் அ.தற்பரானந்தன் பங்கேற்பார். (ஒ-5)

☆ ☆ ☆

நவாலி,பெப்.21

மானிப்பாய் இந்துக் கல்லூரி, மகளிர் கல்லூரி ஆகியவற்றின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பி.ப.1.30 மணி முதல் அதிபர்களான கு.சண்முகநாதன், திருமதி வி.பசுபதிப்பிள்ளை ஆகியோர் தலைமையில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவும், சிறப்பு விருந்தினராக ஓய்வுபெற்ற வைத்திய கலாநிதி டாக்டர் க.முத்துக்குமாரசாமியும் கலந்துகொள்வர். (எ-100)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,பெப்.21

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் எஸ். கைலைநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் கே.கேதீஸ்வரனும் சிறப்பு விருந்தினராக நெல்லியடி மத்திய மகா வித்தியாலய முன்னாள் அதிபர் சி. சிற்றம்பலமும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஒ-10-117)

☆ ☆ ☆

சண்டிலிப்பாய்,பெப்.21

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கல்லூரி அதிபர் நா.சண்முகசுந்தரம் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவமும் கலந்துகொள்வர். (ஒ-5-135)

☆ ☆ ☆

வலிகாமம் தெற்கு,பெப்.21

சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் பொ. கணேஸ்வரலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இப்போட்டியில் வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் பிரதம விருந்தினராகவும், ஓய்வுபெற்ற அதிபர் சு.துரைசிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (எ-152)

☆ ☆ ☆

வலிகாமம் தெற்கு,பெப்.21

உடுவில் கல்விக் கோட்ட பாடசாலை வலைப்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான கோட்ட மட்ட வலைப்பந்தாட்டப் போட்டிகள் நாளை சனிக்கிழமை முதல் எதிர்வரும் 26ஆம் திகதி புதன்கிழமை வரை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

15வயது பிரிவு, 17வயது பிரிவு, 19வயது பிரிவு என மூன்று நிலைகளில் போட்டிகள் நடைபெறும்.

15வயது பிரிவில் நான்கு பாடசாலை அணிகளும், 17வயது, 19வயது ஆகிய பிரிவுகளில் தலா ஆறு பாடசாலை அணிகளும் இப்போட்டிகளில் கலந்துகொள்கின்றன.(ஒ-152)

☆ ☆ ☆

குருநகர்,பெப்.21

அத்தியார் இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை 22ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் இ.குணநாதன தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (எ-51)

## யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கங்கள்

இணைந்து நடத்தும்

இரண்டாவது புலமைப் பரிசில் விருது

(2002/2003)

யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கங்களின் புலமைப் பரிசில்குழு, இரண்டாவது புலமைப் பரிசில் விருதுக்கு (2002/2003) பின்வருவோரைத் தேர்வு செய்துள்ளது.

**பல்கலைக்கழகங்கள்**

ச.சதீஸ்மோகன்
பா.கோபி
அ.ரமேஸ்
யோ.தனஞ்சயன்

**ஜீ.சீ.ஈ.உயர்தரம்**

ந.பிரதீபன்
அ.துஷியந்தன்
சி.அனோஜன்
தே.அஜந்தன்
கி.கிருஷ்ணமேனன்
ம.மகிந்தராஜ்
ந.ரமணபிரகாஷ்
க.மயூரன்
மு.மயூரன்
ம.மரியதர்ஷன்

(C/26629)

## கலந்துரையாடல்

யாழ்.புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தில் இன்று காலை 11.30 மணிக்கு சமாதானம் பற்றிய பெற்றோர்க்கான கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. சகல மாணவர்களின் பெற்றோர்களையும் இந்தக் கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளுமாறு அதிபர் அருட் சகோதரி ஜி.செல்வராணி கேட்டுள்ளார்.(எ-51)

## கோப்பாய் கலாசாலை ஆசிரிய மாணவர் கவனத்துக்கு!

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையைச் சேர்ந்த முதலாம், இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சை விண்ணப்ப முடிவு திகதி நாளை சனிக்கிழமை என்றும் -

எனவே, சகல பயிற்சி ஆசிரியர்களையும், நாளை கலாசாலைக்கு தவறாது சமுகமளித்து விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்யுமாறும் - கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி கேட்டுள்ளார். (எ)

## கோடா வைத்திருந்த மூவருக்குச் சிறை!

யாழ்ப்பாணம்,பெப்.21

சட்டவிரோதமாக உற்பத்தி செய்யப்பட்ட ஆயிரத்து இருநூறு லீற்றர் கோடாவை வைத்திருந்த மூவருக்கு யாழ்.நீதிமன்றம் 6மாத கடூழிய சிறைத்தண்டனை விதித்துள்ளது.

உரும்பிராய் மேற்கு, உரும்பிராயைச் சேர்ந்த சோதிநாதன் புஸ்பதேவி, மகேஸ்வரன் புஸ்பலதா, தியாகேஸ்வரன் சாந்தினி ஆகியோருக்கே 6மாத கடூழிய சிறைத்தண்டனையும், தலா 10ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டுள்ளது. தண்டப்பணத்தைச் செலுத்தத் தவறின் மேலும் 3மாத காலச் சிறைத்தண்டனைக்கும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை-

அனுமதிப்பத்திரம் இன்றி கள் வைத்திருந்தமைக்காக துரைராசா புஸ்பராசா, வைரமுத்து சண்முகலிங்கம், தியாகராசா மகேந்திரன், இ.பொன்னப்பா, யேசுதாசன் கஜேந்திரன், மார்க்கண்டு திருச்செல்வம் ஆகியோரிடமிருந்து தலா 500ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது. (ஒ-8)

## நீதிமன்றம் இடம் மாற்றம்

ஊர்காவற்றுறை,பெப்.21

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றம் தற்பொழுது சுருவில் வீதி, ஐந்தாம் புல ஒழுங்கைக்குச் சமீபமாக உள்ள தனியார் கட்டடத்திற்கு இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் ஊர்காவற்றுறை, கடற்கரை வீதியில் உள்ள தனியார் கட்டடத்தில் மேற்படி நீதிமன்ற செயற்பாடுகள் தற்காலிகமாக செய்றபட்டு வந்தன.

ஊர்காவற்றுறை துறைமுகத்திற்குச் சமீபமாக இருந்த நீதிமன்றத்தின் சொந்தக் கட்டடம் யுத்த அனர்த்தங்களின்போது முற்றாகச் சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-16)

## தென்மராட்சியில் மீள்குடியமர்வு குறித்த கலந்துரையாடல்

தென்மராட்சி,பெப்.21

தென்மராட்சி தெற்கு பிரதேசமான தனங்கிளப்பு, மறவன்புலோ, கைதடி, நாவற்குளி வடக்கு ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த மக்களின் மீள்குடியமர்வு தொடர்பான கலந்துரையாடல் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு கோவிலாககண்டி மகாலட்சுமி வித்தியாலயத்தில நடத்தப்படவுள்ளது.

இக்கலந்துரையாடலில் தென்மராட்சி பிரதேச செயலர் க.கேதீஸ்வரன், இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, தென்மராட்சி அரசியல் துறை ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இப்பகுதிகளில் மீளக்குடியமர விரும்பும் மக்களின் பட்டியல் தயாரிக்கப்படவுள்ளதால் இப்பகுதிகளைச் சேர்ந்த மக்களை கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-117)

**தொலைபேசி இலக்கத் திருத்தம்**

யாழ்நகரில் நிபுணத்துவ மாற்று மருத்துவசேவை
டாக்டர்
மருது கந்தப்பு Ph.D.
முற்பதிவுகளுக்கு:
T.P. No. :-
077-6005425, 222-5051
பிலிப் நேர்சிங் ஹோம்
(14770)

## இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான 28 ஸ்ரீ 2484 இலக்க இசுசு லொறி வாகனத்தைத் திருத்துவதற்கான கூறுவிலை கோரல்

மேற்படி வாகனத்தைத் திருத்துவதற்கான கூறுவிலைகள் தகுதிவாய்ந்த வாகனங்கள் பழுதுபார்க்கும் ஒப்பந்தகாரர்களிடமிருந்து இலங்கை மின்சார சபை வடமாகாண கேள்விச் சபையால் கோரப்படுகின்றன.

**வேலை விவரம்**

மேற்குறிப்பிட்ட இலக்க வாகனத்தின் இயந்திரத்தை முழுமையாகப் புனரமைத்தல்.

மேற்படி கூறுவிலைக்கான கேள்விப்பத்திர விண்ணப்பப்படிவங்கள் மீளளிக்கபபடாத கேள்விப்படிவ விண்ணப்பக் கட்டணமாக ரூபா 250/- ஐ செலுத்தி எனது அலுவலகத்தில் 2003.02.24 ஆம் திகதி தொடக்கம் 2003.03.07 ஆம் திகதிவரை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 2.00 மணி வரையும் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப்பத்திர விண்ணப்பப்படிவங்களின் இரு பிரதிகளில், மூலப்பிரதி வேறாகவும், இணைப்பிரதி வேறாகவும் கவரிடப்பட்டு கவரின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான 28 ஸ்ரீ 2484 இலக்க இசுசு லொறி வாகனத்தைத் திருத்துவதற்கான கூறுவிலை" எனக் குறிப்பிட்டு இந்த அலுவலகத்திற்கு (பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகம்) தபால் மூலமோ, நேரடியாகவோ 07.03.2003 ஆம் திகதி மாலை 2.15 மணிக்கு முன்னர் கிடைக்கும்படி அனுப்பிவைக்கவும். சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலைகள் அன்றையதினம் மாலை 2.30 மணியளவில் திறக்கப்படும்.

ஒப்பந்தகாரர்கள் தங்களது கூறுவிலைகளை எனது அலுவலகத்துடன் தொடர்புகொண்டு திருத்தம் செய்யப்பட இருக்கும் வாகனத்தை நேரடியாகப் பார்வையிட்டு சமர்ப்பிக்கலாம்.

தாமதமாகவும், எம்மால் வழங்கப்பட்ட கூறுவிலைப் பத்திரங்கள் மூலம் சமர்ப்பிக்கப்படாத கூறுவிலைகளும் நிராகரிக்கப்படும்.

பிரதிப் பொது முகாமையாளர்
அலுவலகம்,
*இலங்கை மின்சார சபை,*
*536/1, காங்கேசன்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தலைவர்,
வடமாகாண மின்சார சபை,
கேள்விகோரல்.

(C/26631)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



பிறப்பு 06 - 05 - 1944

இறப்பு 22 - 01 - 2003

### அமரர் முருகன் வல்லிபுரம்

(மடத்துடி, குரும்பசிட்டி)

எங்கள் இதயத்தில் நிறைந்திருக்கும் எம் இனிய - அப்பாவே!
நீங்கள் இவ்வுலகை விட்டு மறைந்தாலும்
உங்கள் திருமுகம் எங்கள் ஈரவிழிகளில் என்றும் நிறைந்து நிற்கும்!

இன்று (21.02.2003) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகளிலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மயிலு வீதி, ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.

மனைவி,மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(14777)

## மரண அறிவித்தல்

### சிவக்கொழுந்து அழகப்பெருமாள்

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து அழகப்பெருமாள் அவர்கள் நேற்று (20.02.2003) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து - நல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும் திரு.திருமதி நடராசா தம்பதியினரின் மருமகனும் மற்றும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் மன்மதராஜன், உதயராஜன் (ஜேர்மனி), தவசோதி, வரதராஜன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தங்கமணி, காலஞ்சென்றவர்களான இராமநாதன், பரமநாதன், நாகரெத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் கிருஷ்ணவேனி, திருஞானசெல்வம் (காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை), நிவேதா (ஜேர்மனி), ஜனார்த்தனி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் மயூரி, வேணுகான், மதனிகா, சப்தஸ்வராஜா (ஜேர்மனி), மிருதங்கா (ஜேர்மனி), அனுக்கா (ஜேர்மனி), தர்ஷன், தனுஷன், தாரணி ஆகியோரின் பேரனும் செல்லம்மா,சாரதாமணிதேவி, சோமசுந்தரம், விஜயலட்சுமி, தர்மசீலன் (சுவிஸ்), அகிலாண்டேஸ்வரி மற்றும் காலஞ்சென்ற மகேந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2003) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இணுவில் கிழக்கு,*
*இணுவில்.*

(14774)

தகவல்:
மன்மதராஜன் (மகன்)